www.padippakam.com நன்றி - நூலகத்திட்டம்

REGISTERED AS A NEWS PAPER IN SRI LANKA
வெகுஜன அரசியல் மாத இதழ்

# புதிய பூமி

පුදිය පූමී
Puthiya Poomi

சுற்று 14 ஒகஸ்ட் 2007 பக்கம் 16 விலை 20/= சுழற்சி 105

# மகிந்த சிந்தனையால் முடியாது

## ★ வாழ்க்கைச் செலவின் உயர்வுக்கு யுத்தம் உலகமயமாக்கல் காரணம்


உயர் நடுத்தர வர்க்கத்தினர் சொத்து சுகம் பெற்ற சுரண்டும் அதி உயர் சுகபோக வர்க்கத்தினர் அவர்களின் ஆளும் வர்க்க பிரதிநிதிகள் என்போர் மட்டுமே உயர்ந்து சென்று கொண்டிருக்கும் வாழ்க்கைச் செலவினால் பாதிக்கப்படாதவர்களாக உள்ளனர். இவர்கள் நாட்டின் சனத்தொகையில் பத்து வீதத்தினர் மட்டுமே. மிகுதியானவர்கள் பல்வேறு நிலைகளிலும் உழைக்கும் மக்களாவர். இவர்கள் தான் இன்றைய அத்தியாவசியப் பொருட்களின் அதிகரித்த விலை உயர்வுகளால் பாரம் சுமந்து அவதிப்படுபவர்களாக உள்ளனர்.

பெற்றோலியப் பொருட்களும் எரிவாயுவும் உச்ச விலைகளாகிக் கொண்டே செல்கின்றன. மக்களின் குறிப்பாக தோட்டத் தொழிலாளர்கள் உட்பட கிராம நகரப்புற மக்களின் அன்றாட உணவுக்குரிய கோதுமை மாவின் விலை கி. 51 ரூபாவிலிருந்து அறுபது ரூபாவரை விற்கப்படுகிறது. அதேபோன்று மண்ணெண்ணை தொழிலாளர்கள் விவசாயிகள் மீனவர்களுக்கு தாங்க முடியாத விலை உயர்வாகி உள்ளது. பால் மாவின் விலைகள் 15, 20 ரூபா வால் அதிகரிக்கப்பட்டுள்ளன. மின்சாரம் போக்கு வரத்துக் கட்டணங்கள் மீண்டும் மீண்டும் உயர்த்தப்பட்டே வருகின்றன. இவற்றால் ஏகப்பெரும்பான்மையான மக்கள் தலை நிமிர்த்த முடியாத அளவுக்கு அமுக்கப்பட்டு வருகின்றனர். தாராள இறக்குமதியும் தனியார்மயப்படுத்தலும் உள்ளூர் விவசாய சிறுதொழில் உற்பத்திகளை நாசம் செய்து விட்டன. இறக்குமதிப் பொருட்கள் மீதான வற்வரி உட்பட்ட பல நிலை வரிகளும் இறக்குமதியாளர்களின் கொள்ளை லாபங்களும் பொருட்களின் மீதான விலை அதிகரிப்புகளை ஏற்படுத்தி வருகின்றன. நாட்டின் பொருளாதாரம் இன்று நம் நாட்டவர்களின் கைகளில் இல்லை. நாட்டை மறு கொலனியாக்கம் செய்துவரும் ஏகாதிபத்திய வாதிகளிடம் எப்பவோ தாரை வார்க்கப்பட்டு விட்டது. எஞ்சியவைகளும் கைமிழக்கப்பட்டு வருகின்றன. இவற்றின் எதிர் விளைவுகளையே நாளாந்த வாழ்க்கைச் செலவின் அதிகரிப்பாக மக்கள் சுமக்க முடியாத பாரங்களாகச் சுமந்து அரைகுறைப்பட் டினி முழுப்பட்டினி என்ற நிலைக்குள் தள்ளப்பட்டு வருகின்றனர்.

வாழ்க்கைச் செலவின் அதிகரிப்புக்கு யுத்தம் ஒரு பிரதான காரணியாகும். வடக்கு கிழக்கு யுத்த முனைகளிலும் நாட்டின் ஏனைய பகுதிகளின் பாதுகாப்புகளிலும் நாளாந்தம் கோடிக் கணக்கில் பணம் செலவிடப்படுகிறது. அந்த யுத்தச் செலவை ஈடு செய்ய மக்களது அன்றாட அத்தியாவசியப் பாவனைப் பொருட்கள் மீது விலைகள் ஏற்றப்படுகின்றன. உலகச் சந்தையில் விலை ஏற்றம் என்பது ஈராக் ஆப்கானிஸ்தான் பாலஸ்தீனம் லெபனான் போன்ற நாடுகளில் அமெரிக்க ஏகாதிபத்தியம் தொடுத்து நிற்கும் ஆக்கிரமிப்பு யுத்தத்தின் விளைவேயாகும். எண்ணெய் எரிவாயு வளம் மிக்க அந் நாடுகளை கைப்பற்றி மேலாதிக்கம் செலுத்த முற்பட்டுள்ள யுத்த

தொடர்ச்சி ம் பக்கம் →





# சர்வதேசத்திடம் மண்டியிடும் ரணில்

இலங்கை மக்களையும் நாட்டையும் இரட்சிப்பதற்காக சர்வதேச சமூகத்தின் தலையீட்டைக் கோருவதாக இலங்கையின் எதிர்க் கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்கா தெரிவித்துள்ளார். மக்கள் கண்காணிப்பு குழுவின் இரண்டாவது மாநாட்டில் பிரதம அதிதியாகக் கலந்து கொண்டு பேசும் போதே அவர் அவ்வாறு குறிப்பிட்டுள்ளார். காணாமல் போனவர்களது உறவினர்களின் மன்றாட்டத்தை எதிர்க்கட்சித் தலைவரிடம் சமர்ப்பிப்பதற்காக மக்கள் கண்காணிப்பு குழுவின் தலைவரும் ஐக்கியசோஷலிஸ கட்சியின் தலைவருமான சிறிதுங்க ஜயசூரிய ம. க. கு வின் அழைப்பாளரும் மேலக மக்கள் முன்னணியின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான மனோகணேசனும் எதிர்க் கட்சித் தலைவரை அம்மா நாட்டிற்கு பிரதம அதிதியாக அழைத்திருந்தனர்.

பிரதம அதிதியாக கலந்துகொண்ட ரணில் விக்கிரமசிங்கவோ கடத்தல்களையும் காணாமல் போதலையும் அரசாங்கம் நிறுத்தப் போவதில்லை என்று கூறியதுடன் தன்னாலும் எதுவும் செய்யமுடியாது மக்கள் தனக்கு ஆதரவளித்தால் சர்வதேச சமூகத்தின் தலையீட்டுடன் கடத்தல்கள் காணாமல் மோதல்களை நிறுத்த முடியும் எனவும் கூறியுள்ளனார். அத்துடன் மக்களினதும் நாட்டினதும் இறைமையை மீட்டெடுக்கவும் வெளிநாட்டுத் தலையீடு தேவை எனவும் கூறியுள்ளார்.

இது கடந்த ஜனாதிபதி தேர்தலில் 48 லட்சம் வாக்குகளை பெற்ற ஒரு தலைவரின் நம்பிக்கையாகும். அவரை நம்பி மனோகணேசனும், சிறிதுங்கவும் பாதிக்கப்பட்ட குடும்பங்களின் உறுப்பினர்களை அவரிடம் அழைத்துச் சென்றமை இன்னொரு வேடிக்கையாகும். தேர்தல் சன்னி பிடித்துவிட்டால் மீட்சி கிடையாது. இதைவிட மேலும் பலவிடயங்களைப் பிதற்றுவார்கள்.

கடத்தல்கள். காணாமல் போதல்கள் பற்றி ஏற்கனவே ஐ.நா. சபைக்கு மக்கள் கண்காணிப்பு குழு அறிவித்து விட்டதாகவும் அங்கே உரிய நடவடிக்கை எடுக்குமென்று அடிக்கடி மனோகணேசன் அறிக்கை விட்டுவருகிறார். காணாமல் போனோரை தேடி அறியும் குழுவின் தலைவர் விக்கிரமபாகுவும் சர்வதேசத்திற்கு அறிவித்து வருவதாக தெரிவித்து வருகிறார். இவர்கள் சர்வதேச சமூகத்திற்கு அறிவிப்பதை மட்டுமே அதி உயர் நடவடிக்கையாகக் கொண்டுள் ளனர்.

இவர்களுக்கும் அப்பால் ஒருபடி மேலே சென்று சர்வதேசத்தின் உதவியை பெறப்போவதாக ரணில் இப்போது அறிவித்துள்ளார்.

தொடர்ச்சி 2ம் பக்கம் →

www.padippakam.com
நன்றி - நூலகத்திட்டம்



# மேல்கொத்மலைத் திட்டத்தை எதிர்த்துப் போராடியோர் சிறையில் காட்டிக் கொடுத்தோர் ஒப்பந்தம் பெற்றனர்!



**விடுதலைக்கு நிதி உதவுங்கள்**

மேல்கொத்மலை நீர் மின் உற்பத்தி திட்டம் பாரிய அழிவுகளையும் கடுமையான பாதிப்புக்களையும் கொண்டு வரும் என்று கூறியபோது சிலர் அதைப் பொருட்படுத்தவில்லை. அப் பகுதியின் 498 வீடுகள் இத்திட்டத்திற்காக அப்புறப்படுத்தப்பட்டன. புதிய பெரிய வீடுகள் தருவதாக ஆசை காட்டியே அவ்வாறு செய்யப் பட்டன. ஆனால் அவ் வீடுகள் சிறியவை மட்டுமன்றி முழுமையாக வழங்கப்படவும் இல்லை. மேலும் அவ் வீடுகளுக்கு கீழாகவே நீர் பாயும் சுரங்கம் அமைக்கப் பட்டும் வருகின்றது. ஏற்கனவே அமைக்கப்பட்ட நீர்த்தேக்க அணைகளால் மண்சரிவுகள் நில வெடிப்புகள் அதிர்வுகளே இடம் பெற்று வருகின்றன. அவற்றால் இடம் பெயரும் மக்கள் எங்கு குடியிருப்பது என்பது தெரியாது இன்றும் அலப்படுகின்றனர்.

இவ்வாறான பாதிப்புகளுக்காகவே இத்திட்டம் கைவிடப்பட வேண்டும் எனக் கோரி மேல் கொத்மலைத்திட்டத்திற்கு எதிரான மக்கள் இயக்கம் போராடி வந்தது. ஆரம்பத்தில் இத்திட்டத்தை எதிர்த்த ஆறுமுகம், சந்திரசேகரன் போன்றோர் பின்பு அமைச்சுப்பதவிகளுக்காக அத்திட்டத்தை ஆதரித்தனர். அத்துடன் அவர்களது உள்ளூர் பிரமுகர்கள் அத்திட்டத்தின் பலவகை ஒப்பந்தா ரர்களாகிப் பணம் சேர்ப்பதில் மும்மரமாக உள்ளனர். உண்ணாவிரதம் இருப்ப தாக நாடகமாடிய ஒரு கும்பல் இவ் ஒப்பந்தகாரர்களில் இருக்கிறார்கள். மலையகத்தில் தொழிலாளர்கள் மத்தியில் சேர்ந்திருந்து கழுத்தறுப்பது தொழிற்சங்க- அரசியல் தலை மைகளுக்கு கை வந்த கலையாகும். அந்த கலாச்சாரம் மேல் கொத்மலை த்திட்டத்திலும் அரங்கேறி இருக்கிறது.

ஆனால் அதை எதிர்த்து வந்த மேல் கொத்மலைத் திட்டத்திற்கு எதிரான மக்கள் இயக்கம் இப்பொழுதும் அதனை எதிர்த்தே வருகிறது. பல போராட்டங்களை தலவாக்கொல்லை ராகல கொழும்பில் நடாத்தியது. இதில் புதிய- ஜனநாயக கட்சி உறுப்பினர்கள் ஆதரவாளர்கள் பெருமளவில் பங்கு கொண்டு புரட்சிகர வெகுஜனப் போராட்டத்திற்கு உத்வேகம் அளித்தனர். பொலீஸ் அடக்குமுறைக்கும் காடையர்களின் தாக்குதல்களுக்கும் உள்ளாகி. உயிராபத்துக்களையும் எதிர் கொண்டனர். அப்போராட்டங்களில் அமைப்பு ரீதியாக முன் நின்று செயல்பட்ட வெ. மகேந்திரன், ஆர். ஜெய சீலன், எஸ். சுகேசனன், எஸ். மோகன்ராஜ், எஸ். கிருஷ்ணப்பிரியன் ஆகிய புதிய- ஜனநாயகக் கட்சித் தோழர்கள் பழிவாங்கப்பட்டு இன்று அவசர காலச் சட்டத்தின் கீழ் விளக்கமறியலில் இருந்து வருகின்றனர். அவ்வாறே அவர்களுடன் அவ் எதிர்ப்பு இயக்கத்தில் பங்கு பற்றி வந்த புகையிரத தொழிற்சங்கத் தோழர்களும் ஏனையோரும் சிறையில் அடைக்கப் பட்டுள்ளனர்.

மலையகத்தில் இ. தொ. கா, மலையக மக்கள் முன்னணி என்பனவற்றின் காட்டிக்கொடுப்பால் ஒப்பந்தகாரர்களாகியோர் பணம் சம்பாதிக்கின்றனர். மக்களுக்காக அத்திட்டத்தை எதிர்த்துப் போராடிய தோழர்கள் சிறையில் இருந்து வருகின்றனர். இவற்றை காணும் போது மக்களுக்காகப் போராடுவதும் அதில் வரும் துன்ப துயரங்களை ஏற்று தொடர்ந்தும் போராடுவது கம்யூனிஸ்டுகளின் பாரம்பரியம். போராட்டங்களைக் காட்டிக் கொடுத்து ஆளும் வர்க்கத்துடன் கைகோர்ப்பது பிற்போக்கு அரசியல் தொழிற்சங்க தலைமைகளின் பாரம்பரியம். இதனை மலையக மக்கள் விரைந்து உணர்ந்து கொள்ளவே செய்வர்.

---

**சர்வதேசத்திடம்**

1ம் பக்க தொடர்ச்சி

சர்வதேசம் என்ன செய்யும்? அவரை ஆட்சியில் அமர்த்தும் என்ற நம்பிக்கையில் ரணில் காய்களை நகர்த்துகிறார். அவரது ஆட்சிக் கனவுக்கு மனித உரிமை மீறல்கள் படிக் கற்களே தவிர பிரச்சினைகளைத் தீர்க்கும் எண்ணம் அல்ல. நாட்டின் இறைமையைப் (தத்தம் ஆட்சிகளை) பாதுகாப்பதற்காகவென்று அப்போதைய அரசர்களின் அழைப்பின் பேரில் ஒருவருக்கு பின்னர் இன்னொருவர் என்று வந்த போர்த்துக்கேயர், ஒல்லாந்தர், ஆங்கிலேயர் இந் நாட்டை 450 வருடங்களுக்கு மேல் அடிமைப்படுத்தி வைத் திருந்தனர். தேசிய இனப் பிரச்சினை கூர்மையடைந்ததை பயன்படுத்திக்கொண்டு பலரின் அழைப்புகளின் பேரிலும் இங்கு அந்நிய சக்திகள் மறைமுகமாகக் கூடாரம் அமைத்து வருகின்றன. மேற்குலக நாடுகள். 'மனிதாபிமான உதவி' என்ற கவசத்துடன் மனிதாபிமான ஏகாதிபத்தியமாக நாட்டிற்குள் புகுந்து வருகின்றது ஆனால் எந்தப் பிரச்சினைக்கும் தீர்வில்லை. பிரச்சினைகள் மேன் மேலும் சிக்கலாக்கப்பட்டே வருகின்றன.

இந்த நிலைமைகளுக்கு இந்நாட்டை ஆண்ட இரண்டு பேரினவாத முதலாளி த்துவக் கட்சிகளும் என்.ஜி. ஒக்களும் பொறுப்பேற்க வேண்டும். இதில் தமிழ்தேசியவாதிகளின் பங்கு குறைவானதல்ல.

'சர்வதேசம்' என்பது ஏகாதிபத்திய நிகழ்ச்சி நிரலுடன் அவற்றின் சந்தைகளுக்காகவும் ஆதிக்கத்திற்காகவும் எல்லா விடய ங்களிலும் தலையிடுகிறது. பொருளாதார ரீதியாகவும் இராணுவ ரீதியாகவும் இலங்கையைக் கபளீகரம் செய்யும் நோக்கில் செயற்படுகிறது.

நாட்டின் இறைமை, மக்களின் இறைமை போன்றவற்றுக்கு மட்டுமன்றி மக்களின் எந்தவொரு போராட்டத்திற்கும் எதிராகவே அவை இருக்கும்.

அத் தகைய சர்வதேசகத் தலையீடுகளால் நாட்டின் இறைமையை மீட்கவோ மனித உரிமை மீறல்களை தடுக்கவோ முடியாது. இலங்கை மக்களாலேயே இறைமையைப் பாதுகாக்க வும் மனித உரிமை மீறல்களை தடுக்கவும் முடியும். தேர்தல் வெற்றிகளுக்காகவும் வெளிநாடுகளிலிருந்து பணத்தை பெறுவ தற்காகவும் போராட்டங்களை முன்னெடுப்பவர்கள் தொடர்ந்தும் ஏமாற்றுபவர்களாகவே செயற்பட்டு வருகிறார்கள். இதனால் நேர்மையான மக்கள் போராட்டங்கள் மேல் கிளம்ப முடியாத நிலை காணப்படுகிறது.

தற்போதைய வாழ்க்கைச் செலவு அதிகரிப்பு மனித உரிமை மீறல்கள் போன்றவற்றுக்கு எதிரான மக்களின் எதிர்ப்புணர்வை ரணில் மீண்டும் ஒரு முறை பயன்படுத்திக் கொள்ளப் பார்க்கிறார். அவர் சர்வதேச வலைப் பின்னல் என்ற ஏகாதிபத்திய நிகழ்ச்சி நிரலுக்குள் இலங்கையை கொண்டு செல்ல முயற்சிக்கிறார். அதன் மூலம் 'சர்வதேச ஆதரவுடன் ஆட்சிக்கு' வரப்பார்க்கிறார். அதற்கு மனோ கணேசன் போன்றவர்கள் துணை நிற்கிறார்கள். அதில் அவர்களின் அரசியல் இருப்பும் பிழைப்பும் தங்கி இருக்கிறன. நாட்டின் இன்றைய மோசமான நிலைமைகளுக்கு ராஜபக்ச அரசாங்கம் பாரிய பொறுப்பை ஏற்க வேண்டும். அது மக்கள் விரோத ஆட்சியையே நடத்துகிறது என்பதில் இரண்டு கருத்திற்கு இடமில்லை. ஆனால் அதற்கு மாற்று ரணில் அரசாங்கமல்ல என்பதை நினைவில் நிறுத்திக் கொள்ள வேண்டும். ஏனெனில் ரணிலும் அவரது ஐக்கிய தேசியக் கட்சியும் இலங்கையின் முதலாளித்துவ பாராளுமன்ற அரசியலுக்கும் ஆட்சிக்கும் புதிய வர்கள் அல்ல. மனித உரிமை மீறல்களைச் செய்யாத புனிதர்களும் அல்ல. மக்கள் மூன்றாவது அரசியல் பாதை ஒன்றைத் தமக்குரியதாகத் தேர்ந்தெடுப்பதைத் தவிர மாறி மாறி இரண்டு கட்சிகளின் தலைமைகள் மீதும் நம்பிக்கை வைப்பது வீணானதாகும்.

---

## சின்னச் சின்ன மறதிகள்

தமிழ் நாட்டில் ஜெயலலிதா ஆட்சியைவிட கருணாநிதி ஆட்சி இருப்பது இலங்கைத் தமிழருக்கு நல்லது என்று சிலர் இன் னமும் நினைப்பது போல இங்கே ஸ்ரீ. ல. சு. க ஆட்சியை விட யூ.என்.பி ஆட்சி நல்லது என்கிற மயக்கம் ஊக்குவிக்கப்படு கிறது. மனோகணேசன் போன்றோர் வெளிவெளியாகவே அதைச் செய்கிறார்கள். தமிழ்ச் செய்திப் பத்திரிகைகளில் எழுகிற சில கட்டுரையாளர்களும் அதையே வேறு விதமாகச் செய்கிறார்கள். யூன் பிற்பகுதியில் தினக்குரலில் வந்த விரிவான ஒரு கட்டுரையில் விடுதலைப்புலிகள் தமது இடைக்கால நிர்வாக ஆலோசனையை முன்வைத்த கையோடு சனாதிபதி சந்திரிகா மூன்று முக்கிய அமைச்சுப் பொறுப்புக்களைப் பறித்தெடுத்து அந்த ஆலோசனையை யூ என். பி அரசாங்கம் கருத்திற் கொள்ள இயலாமற் செய்துவிட்டார் என்ற விதமாக எழுதப்பட்டிருந்தது. உண்மை நிலைமை வேறு. யூ. என். பி அரசாங்கத் தரப்பு அடுத்தடுத்து மூன்று தடவை முன்வைத்த குறைபாடான ஆலோசனைகள் ஏற்புடையதாக இல்லாததாலேயே விடுதலைப் புலிகள் தமது ஆலோசனையை முன்வைத்தனர். யூ. என். பி. தலைமை அது பற்றி நீண்டகாலமாக இழுத்தடித்த பின்பே சந்திரிகா யூ. என். பி ஆட்சியைக் கவிழ்க்கும் தனது அதிரடி வேலையைத் தொடக்கினார். அன்று யூ. என். பி. யோக்கியமாக நடந்தது என்றால் விடுதலைப் புலிகள் ஏன் பேச் சுவார்த்தைகளினின்று விலகினார்கள் என்ற கேள்விக்கு மறுமொழி சொல்லி விட்டுத் தங்கள் யூ. என். பி. சார்பு விளக்கங் களை நமது 'நிபுணர்கள்' முன்வைப்பது நல்லது.

## சித்தந் தெளிந்தவர்

ஜியான்னி வற்றிமோ என்ற முக்கியமான இத்தாலியப் பின் நவீனத்துவவாத மெய்யியலாளர், முன்பு கம்யூனிஸ்றாக இருந்து 1968ல் நடந்த ஐரோப்பியக் கிளர்சிகளின் பின்ன ணியில் பின்நவீனத்துவத்தை நோக்கி நகர்ந்து மாக்ஸியச் சிந்தனையை விட்டு விலகிச் சென்றவர். எனினும் எங்கள் உள்ளூர் ஓடுகாலிகளைப் போலல்லாமல் சமூகம் பற்றிய ஆழமான அக் கறையுடனேயே இருந்து வந் தார். "எக்கே ஹோமோ" எனும் அவரது அண்மை யை நூலில் அவர் மீண்டும் மாக்ஸிய நிலைப்பாட்டு க்கு நெருக்கமாகி விட்ட தாகத் தெரியவந்து ளளது. பிழைப்புக்காகப் பின் நவீனத்துவம் பேசுகிற என். ஜி. ஒ கொத் தடிமைகளிடம் இந்த விதமான நேர்மையை எதிர்பார்க்க முடி யுமா?

## சரியா தப்பா?

என். ஜி. ஒ பணத்திலேயே பிறந்து என். ஜி. ஒ பணத்திலேயே வளர்ந்து செழித்த "சரிநிகர்" என். ஜி. ஓ பணமழை ஓய்ந்த தோடு வாடி விழுந்து விட்டது. பிறகு சீரழிந்த ஒரு பத்திரிகை உலகச் சந்தர்ப்பவாதியின் கூடாரத்தில் முகாமிட்டு 'நிகரி' என்ற பேரில் மறு பிறப்பெடுத்துச் சிறிது காலத்திலேயே மூடு விழாக் கண்டது. எனினும் இருந்த வரைக்கும் ஓரளவு சுயாதீனமாக நடத்தப்பட்ட பத்திரிகை என்ற மரியாதை அதற்கு இருந்து வந்தது. இப்போது மினுமினுப்புத்தாளில் வண்ண வண்ணப்படங்களுடன் தடித்த தாளில் பருத்த சஞ்சிகையாக வெளி வருகிறது. சரிநிகரின் புதிய அவதாரத்திற்கு யாரிடமிருந்து பணம் வருகிறது? அது யார் மூலம் வழங்கப்படுகிறது? கொடை வழங்குகிற கரங்கள் வெளியிடுகிற கரங்கள் மீது எத்தகைய கட்டுப்பாட்டைக் கொண்டுள்ளன? இவற்றுக் கான விடைகளும் விளக்கங்களும் முக்கியமானவை. இப் பத்திரிகையை இவ்வாறு வெளிக்கொண்டு வருவது சரியா தப்பா என்பதை வாசகர்கள் முடிவு செய்யட்டும்.

ஒரு கட்சிப்பத்திரிகை பற்றியோ ஒரு முதலாளியப் பத்திரிகை நிறுவனத்தின் வெளியீடுகள் பற்றியோ வாசகர்கள் நடுவே தெளிவான அடையாளம் உண்டு. என். ஜி. ஓ நிறுவன நிதியிலும் இரகசியமான நிதி வழங்கல் மூலமும் நடத்தப்படும் ஏடுகளின் அடையாளம் கலங்கலானது. தெளிவைக் கோருகிற உரிமை மக்களுக்கு உண்டு.

## நாலு நடக்கும் நற்குணன் உலகிலே

### புதிய தேசியச் சின்னம்

குடுமிமலையைப் பிடித்ததையிட்டு நகரெல்லாம் சுவரொட்டிகள் காணப்படுகின்றன. குடுமி மலையை ஒரு தேசியச் சின்னமாகக் காட்டுகிற விதமாகவே சில சுவரொட்டிகள் அமைந்திருந்தன. தேசியக் கொடியில் உள்ள சிங்கத்தின் இடத்தில் குடுமி மலையைப் பொறித்து விடுவார்கள் போல இருக்கிறது. யோசித்துப் பார்த்தால் அது இனமதச் சார்பற்ற ஒரு கொடியாக அமையும் என்றே தோன்றுகிறது.

### ஐந்து ரூபா நோட்டு?

"அஞ்சு ரூவா நோட்டை கொஞ்சம் முன்னே மாத்தி காசு மிச்ச மில்லை, காசு மிச்சமில்லே" என்ற பாட்டு 1950 "அளவில் அந்தமான் கைதி" படத்தில் வந்தது. இப்போது ஐந்து ரூபாவுக்குத் தாளே இல்லை. ஐநூறல்ல ஐயாயிரம் ரூபா கூட எங்கே போகிறது என்று தெரியாத விதமாக விலைவாசிகள் ஏறிக் கொண்டே போகின்றன. விரைவில் ஐயாயிரம் ரூபா நோட்டுக் கூட புழக்கத்துக்கு வந்து விடலாம். அப்போது "ஐயாயிரம் நோட்டை கொஞ்சம் முன்னே மாத்தி" என்று பாட்டை மாற்றிப் பாடலாம். போகிற போக்கில் இதற்கு அதிக காலம் காத்திருக்க வேண்டி வராது.

www.padippakam.com நன்றி - நூலகத்திட்டம்



# அரசியல் சமூகப் பிரச்சினைகளுக்கு நீதிமன்றங்கள் தீர்வைத் தரமுடியாது

எதற்கெடுத்தாலும் நீதிமன்றத்திற்கு படையெடுக்கும் இலங்கைத் தமிழர்கள் வரலாறு இன்னும் தொடர்கிறது. தற்போது தமிழ் மக்களுக்கு எதிரான பேரினவாத சக்திகளும் தமிழ் மக்களுக்கு எதிரான விளைவுகளை ஏற்படுத்தும் நோக்கில் நீதிமன்றத்திற்கு செல்கின்றன. ஜே.வி.பி, ஹெலஉறுமய சுனாமி பொதுக்கட்டமைப்பிற்கு எதிராக உயர்நீதிமன்றத்திற்கு சென்றது. அதுபற்றிய உயர்மன்றத் தீர்ப்பை அடுத்து வடக்கு கிழக்கு சுனாமியால் ஏற்பட்ட பாதிப்புகளுக்கு நிவாரணம் வழங்க வேண்டிய அரசாங்க த்தின் பொறுப்பு கைவிடப்பட்டது. வடக்கு மாகாணத்தையும் கிழக்கு மாகாணத்தையும் தனித்தனியாக்கும் உயர்நீதிமன்றத் தீர்ப்பு பேரினவாதிகளின் வெறிக்கு தீனிபோட்டது.

யுத்த நிறுத்த ஒப்பந்தத்தை இரத்து செய்ய வேண்டி பேரினவாதிகள் மேன் முறையீட்டு நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்திருந்தனர். அங்கு அவர்களுக்கு சார்பாகத் தீர்ப்பு கிடைக்காததால் அத்தீர்ப்பிற்கு எதிராக உயர்நீதிமன்றத்திற்கு மேன் முறையீடு செய்தனர். அதனை உயர்நீதிம ன்றம் விசாரணைக்கு எடுத்துக் கொண்டு ள்ளது.

மூதூர் சம்பூர் பகுதிகளை அதி உயர்பாதுகாப்பு வலயமாக்கும் அரசாங்கத்தின் பிரகடனத்திற்கு எதிராக உயர் நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்யப்பட்டது. அவ்வாறான வழக்குகளை இனிமேல் தாக்கல் செய்ய வேண்டாமென கூறி அவ்வழக்கை உயர் நீதிமன்றம் முடிவுறுத்திவிட்டது.

பலாலி, வலிகாமம் வடக்கு போன்ற பகுதிகளை அதி உயர் பாதுகாப்பு வலயங்களாக்கியமைக்கு எதிரான வழக்குகள் இன்னும் உயர் நீதிமன்றத்தில் இருக்கின்றன. கொழும்பு லொட்ஜ்களிலிருந்து தமிழர்களை வெளியேற்றிமைக்கு எதிரான வழக்கும் இன்றும் உயர் நீதிமன்றத்தில் இருக்கிறது.

அரசியல் ரீதியாகவும், சமூகரீதியாகவும் தீர்க்க முடியாத பிரச்சினைக்கு நடைமு றையில் இருக்கின்ற சட்ட முறைமைக்குள் சட்ட ரீதியான தீர்ப்பை காண்பதற்காக நீதிமன்றத்திற்கு செல்லும்போது நீதிமன்றம் இருக்கின்ற சட்டத்திற்கு அமைவாகவும் இருக்கின்ற நிர்வாக கட்டமைப்பிற்கு அமைவாகவுமே தீர்ப்பளிக்கும். அந்த தீர்ப்புகள் இருக்கின்ற நிர்வாக கட்டமைப்பின் இயக்கத்தை சில வேளைகளில் ஒழுங்கு படுத்துவதுபோல் அமைந்தாலும் பொதுவாக கட்டமைப்பை பலப்படுத்துவதாகவே அமைகின்றன. சட்டம் நீதிமன்றம் ஆகியவற்றின் கடமைகளும் இருக்கின்ற அமைப்பை பாதுகாப்பதாகவே வரையறுக்கப்பட்டுள்ளன.

இருக்கின்ற சட்டமுறைமையினாலும் நிர்வாகக் கட்டமைப்பினாலுமே அதிகமான அரசியல், சமூகப்பிரச்சினைகள் தோன்றுகின் றன. அவற்றை சட்டப்பூர்வமாக தீர்க்க வேண்டுமானால் பாராளுமன்றமே சட்டங் களை ஆக்க வேண்டும். நீதிமன்றம் சட்டங் களை ஆக்குவதில்லை. இருக்கின்ற சட்ட முறைமையின்படி அலுவல்கள் செய்யப்படுகின்றனவா இல்லையா என்பதை பார்த்து தீர்ப்பளிக்கவே நீதிமன்றங்கள் இருக்கின் றன.

இந் நிலையில் தீர்க்க முடியாமல் இருக்கும் அரசியல், சமூகப் பிரச்சினைகளை தீர்க்கும்படி நீதிமன்றத்திடம் கேட்பது வழிமுறையாக இருக்க முடியாது. அப்படி நீதிமன்றத்தி ற்கு அப்பிரச்சினைகளை எடுத்து செல்வ தை போராட்ட முறையாகக் கொள்வதினால் அதிகமாக பிரச்சினைகள் தீர்க்கப்படாமல் முடக்கப்படுகின்றன. நீதி கிடைக்கும் என்ற எதிர்பார்ப்புகளும் நிறைவேறுவதில்லை.

1978 ஆம் ஆண்டு அரசியல் யாப்பில் உறுதி செய்யப்பட்டுள்ள அடிப்படை உரிமைகள் தனிமனிதர்களுக்கு எதிராக நிர்வாகத்தில் இருக்கின்ற சட்டங்களுக்கு மாறாக செயற்படுவதை தடுப்பதற்காகவே ஏற்படுத்தப்பட்டுள்ளன. அந்த உரிமைகளை அரசியல் சமூகப் பிரச்சினைகளுக்காக விரித்தோ ஆழமாகவே பிரயோகிக்க முடியாது.

அவ்வாறான முயற்சிகள் அடக்குமுறையாளர்களையும், மனித உரிமைகளை மீறுவோரையும் பலப்படுத்துவதாகவே அமையும்.

# அனுரா பண்டாரநாயக்கா போட்டுடைக்கும் உண்மைகள்

பண்டாரநாயக்கா குடும்பத்தின் கடைசி அரசியல் வாரிசாக இருந்து வருபவர் அனு ரா பண்டாரநாயக்கா. அவர் ஒரு பிரம்மச்சாரி அரசியல்வாதி. இன்றைய மகிந்த சிந்தனை அரசாங்கத்தில் ஒரு அமைச்சராக இருந்தும் வருகிறார். இடையிடையே திடீர் முடிவு எடுப்பதும் அதிரடிப் பேச்சுக்கள் பேசுவதும் அவரது கூடப் பிறந்த இயல்புக் குணம். முன் தயாரின் காலத்திலேயே தந்தை தாய்க் கட்சியை உதறித்தள்ளி விட்டு யூ.என்.பி. யில் சேர்ந்து அமைச்சர் பதவி வகித்தவர். அக்கா சந்திரிக்காவுடன் முரண்பட்டாலும் சகோதர பாசத்தைக் கைவிடாதவர்.

இத்தகைய மனிசர் எந்த நேரத்தில் என்ன பேசுவார் என்பதைக் கூட இருப்பவர்கள் தானும் ஊகிக்க முடியாது. இருப்பினும் அவரது பேச்சில் அவ்வப்போது சில உண்மைகள் வெளிப்படுவதைக் காண முடியும். அவரது கூற்றுக்களில் காணப்படும் உண்மைக் கூற்றுக்களை அதிகாரத்தில் இருக்கும் எவரும் கணக்கில் கொள்வதில்லை. முன்பு சகோதரி சந்திரிகாவும் இப்போது மகிந்தவும் 'அனுரா அப்படித்தான்' என்றவாறு அவரது பேச்சின் அம்சங்களைத் தட்டிக் கழித்து வந்துள்ளனர்.

ஆனால் அவரது கூற்றுக்களில் அநேகமாக யதார்த்தைப் பிரதிபலிக்கும் உண்மைகள் இருக்கும். சிலவேளைகளில் விசுறுத்தனமான விளல் அம்சங்களும் இருக்கச் செய்யும். அண்மைய காலங்களில் அவர் சுட்டிக் காட்டிய விடயங்கள் தெற்கின் ஆளும் அதிகார சக்திகளுக்கு உரிய போடுதலாகவே அமைந்திருந்தன. அரசாங்கம் வீண் விரயத்தையும் அதிகரித்த வாகனப் பாவனைகளையும் நிறுத்த வேண்டும். வாழ்க்கைச் செலவைக் குறைக்க வழிவகை காணப்பட வேண்டும். தாயாரின் ஆட்சிக் காலத்தில் மூன்று வீதமாக இருந்த வாழ்க்கைச் செலவு விகிதம் இன்று 45 வீதமாக உயர்வடைந்து காணப்படுகிறது. இவற்றுக்குப் பரிகாரம் காணாது விட்டால் மக்கள் இந்த அரசாங்கத்தைத் தூக்கி எறிந்து விடுவார்கள் என்றும் எச்சரிக்கை செய்துள்ளார் அனுரா.

மேலும் தொப்பிகலவின் வெற்றி உண்மையான வெற்றியல்ல. புலிகள் திரும்பவும் தாக்கக் கூடிய வலிமையுடன் இருக்கிறார்கள். எனவே யுத்தத்தின் மூலம் இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண முடியாது என்றும் கூறியுள்ளார். அத்துடன் வடக்கு கிழக்கை மீளவும் இணைத்து அதிகாரப் பகிர்வை வழங்கி தமிழ் முஸ்லீம் மக்களிடம் அதிகாரத்தை வழங்க வேண்டும் எனவும் கூறியுள்ளார்.

இவ்வாறு சுட்டிக்காட்டிய அனுரா பண்டாரநாயக்கா ஏற்கனவே பேசிய ஒரு பேச்சில் புத்த குருமார் அரசியலுக்கும் பாராளுமன்றத்திற்கும் வந்த நிகழ்வு ஒரு துர்ரதிஸ்டம் எனவர்ணித்திருந்தார். புத்தகுருமாரின் பாராளுமன்றப் பிரவேசம் பற்றி மீண்டும் அனுரா வலியுறுத்திக் கூறும் போது புத்த குருமார் விகாரைகளில் இருக்க வேண்டியவர்களே அன்றி பாராளுமன்றத்தில் அல்ல. இவ்வாறு உண்மைகளை எடுத்துக் கூறுவது ஆட்சி அதிகாரத்தில் உள்ளவர்களுக்கு வேப் பங்காயாகவே கசக்கும். அதனால் தேசிய மரபுரிமைகள் அமைச்சராக இருந்து வரும் அனுரா பண்டாரநாயக்கா எந்த வேளை யிலும் வெளியே வீசக் கூடியவர்களது பட்டிய லிலேயே இருந்து வருகிறார். அவர் ஏற்கன வேயும் வெளியே போடப்பட்டு பின்பு பணிந்து சென்று பதவி பெற்றவர். என்றாலும் உரிய நேரத்தில் போட்டுடைத்து உண்மைகளை வெளிப்படுத்தும் போக்குடையவராகவே அனுரா இருந்து வருகிறார். எவ்வாறாயினும் அமைச்சராக இருக்கும் முக்கிய நபர் ஒரு வரது மக்கள் சார்பு நிலைக் கூற்று கவனத்திற்குரியதாகும்.

## 1953ன் மகத்தான ஹர்த்தால் போராட்ட நினைவாக

# போலி இடதுசாரிகளுக்கு ஒரு பகிரங்க கடிதம்

**போலி இடதுசாரிகளே!**

உங்களைத் தோழர்களே என்று விழித்து வணக்கம் கூறி இக்கடிதத்தை எழுத எமக்கு மனம் ஒப்பவில்லை. ஏனெனில் அது மனச்சாட்சி சம்மந்தப்பட்ட விடயம். தோழர்கள் என்ற சொல் மகத்தான அர்த்தங்கள் நிறைந்த சொல்லாகும். அதற்கான விளக்கத்தைப் பக்கம் பக்கமாக எழுதிக் கொள்ள முடியும். ஆனால் இடதுசாரிகள் என்று நீங்கள் உங்களையே இடையிடையே அழைத்துக் கொள்வதைக் கேட்க முடிகிறது. நாம் கேட்கின்றோம் எந்த அடிப்படையில் அவ்வாறு அழைத்துக் கொள்கிறீர்கள். பழைய சமசமாஜ– கம்யூனிஸ்ட் பெயர்களும் நிறம் மாறிய கொடிகளும் பழைய சிகப்புச் சட்டைகளும் இருந்தால் மட்டும் இடதுசாரிகளாகத் தொடர முடியுமா? தத்துவ நோக்கு என்ன? கொள்கை வேலைத்திட்ட நிலைப்பாடு என்ன? தொழிலாளர்கள் விவசாயிகளுக்கும் ஒடுக்கப்படும் தேசிய இனங்களுக்கும் நீங்கள் முன்வைக்கும் கோரிக்கைகளும் தீர்வுகளும் யாவை? பரந்து பட்ட இவ் உழைக்கும் மக்கள் சார்பாக சமகாலத்தில் எத்தகைய போராட்டங்களை முன்னெடுத்து வந்துள்ளீர்கள்.

இன்று ஐக்கிய தேசியக் கட்சி மீண்டும் அதிகாரத்திற்கு வருவதற்காக ஜனநாயகம் மனித உரிமைகள் வாழ்க் கைச் செலவு உயர்வு மற்றும் மக்களது பிரச்சினைகளைக் கையில் எடுத்து வீதியில் இறங்கி ஆர்ப்பாட்டம் செய்கிறது. அவர்கள் முதலாளித்துவ ஏகாதிபத்திய சார்புடையோராக இருந்து கொண்டு மீண்டும் ஆட்சிக்கு வருவதற்காக மக்களோடு நின்று எதிர்ப்புக்குரல் எழுப்புகிறார்கள். அதனை மேலோட்டமாகப் பார்க்கும் மக்கள் நியாயமானது என வரவேற்கிறார்கள்.

ஆனால் இடதுசாரிகள் எனக் கூறி நிற்கும் நீங்கள் தொழிலாளி விவசாயிகள் மீனவர்கள் மற்றும் ஒடுக்கப்படும் தேசிய இனங்கள் எதிர் நோக்கும் பிரச்சினைகள் பற்றி வாயே திறக்காது அமைச்சர் பதவிகளுக்கும் அதிகாரக் கதிரைகளில் கிடைத்த எலும்புத் துண்டுகளுக்காகவும் மௌனம் சாதித்து வருகிறீர்கள். 1960ல் தொடங்கிய உங்களது பாராளுமன்ற சந்தர்ப்பவாதப் பயணத்தைத் தொடர்கிறீர்கள். அதிலிருந்து விடுபட ஒரு போதும் முன்வரமாட்டீர்கள் என்பதை உங்களது கைகளில் கட்டப்பட்டிருக்கும் மந்திரிக்கப்பட்ட பிரித்நூலும் கறுப்பு சிகப்பு பாதுகாப்பு நூல்களும் எடுத்துக்காட்டுகிறன. ஒரு காலத்தில் தொழிலாளி வர்க்கத்திற்கும் மக்களுக்கும் மட்டுமே தலைவழங்கிய அன்றைய இடதுசாரிகளின் வாரிசுகள் எனக் கூறும் நீங்கள் விகாரரைகளுக்கும் கோவில்களுக்கும் முழங்காலில் நின்று தலைவணங்கி உங்களையே தாழ்த்திக் கொள்கிறீர்கள்.

கொலைகள் ஆட்கடத்தல்கள் மனித உரிமை மீறல் வாழ்க்கைச் செலவு அதிகரிப்பு அதிகார துஷ்பிரயோகம் பற்றி கேள்விகள் விமர்சனங்கள் எழுந்தால் அதனை யூ.என்.பி அதிகாரப் பசியால் பிரசாரம் செய்கிறது என்கிறீர்கள். தமிழர்களுக்கு சுயநிர்ணய உரிமை அடிப்படையில் சுயாட்சி அதிகாரப்பகிர்வு தேவை என்றால் அதனைப் புலிப் பயங்கரவாதம் என்கிறீர்கள். ராணுவ ஒடுக்குமுறை வெற்றிகளை அரசாங்கத்தோடு சேர்ந்து கொண்டாடுகிறீர்கள். உலக மயமாதல் திட்டத்தை சந்திரிகா அரசும் தற்போது மகிந்த அரசும் நடைமுறைப்படுத்தி நிற்கும் போது ஒரு சிறு எதிர்ப்பைக் கூடத் தெரிவிக்க நீங்கள் தயாராக இல்லை. ஏகாதிபத்தியத்தை யூ.என்.பி அரவணைத்தால் அது பிழையானது. அதேவேலையை சிறிலங்கா சுதந்திரக் கட்சியும் சந்திரிகாவும் மகிந்தவும் ஆதரித்துச் செயல்பட்டால் அது சரியானது. இது தான் வெட்கம் கெட்ட உங்களது போலி இடது சாரிக் கொள்கை நிலைப்பாடு. பாராளுமன்ற ஆசனங்கள் ஒரு சிலவற்றுக்காகவும் அமைச்சர் பதவிகளுக்காகவும் ஏனைய பதவிகள் பசைகள் சலுகைகள் போன்றவற்றுக்காகவும் இலங்கையின் இடதுசாரி இயக்கத்தையே ஒட்டு மொத்தமாக விற்று விட்ட பாவிகள் அல்லவா நீங்கள்.

மறுபுறத்தில் பாராளுமன்ற இடதுசாரிகளுக்கு மாறானவர்கள் என்ற பெயரோடு இடதுசாரி இயக்கத்தை முன்னெடுக்கப் புறப்பட்ட விக்கிரமபாகுவும் சிறிதுங்காவும் மாற்று இடதுசாரி இயக்கத்தை சீரழித்து நாசம் செய்துள்ளதை மறுப்பார்களா? நீங்கள் என்.ஜீ.ஓக்களை உருவாக்கி எவ்வாறு பணம் பண்ணலாம் என்பதிலேயே காலத்தை ஒட்டி வருகிறீர்கள். வீராப்பாய் பேசுவதும் சிகப்பு வேஷம் போடுவதும் உங்களுக்கு கை வந்த கலை. அன்று மாற்று இடதுசாரி இயக்கமாக வளர்ந்து வந்த புதிய இடதுசாரி முன்னணியைச் சீரழிய வைத்து நாசமாக்கியதில் ட்ரொட்சியவாதிகளாகிய நீங்கள் வகித்த பங்கும் பணியும் இலகுவில் மறக்கக் கூடியதல்லவே. இன்று என்.ஜீ.ஓ. பிழைப்புக்காக இடையிடையே ஏதாவது ஆர்ப்பாட்டம் மறியல் போராட்டம் எனக் கூறி யூ.என்.பி– தமிழர் கூட்டமை ப்பு பாராளுமன்ற உறுப்பினர்களுடன் ஒட்டி உறவாடி வரும் சீரழிந்த சிகப்புப் பிரமுகர்களாகி இருக் கிறீர்கள்.

பாராளுமன்றத்திற்கு அப்பாலான வெகுஜனப் போராட்டப் பாதை நோக்கி வளரக் கூடியதாக இருந்த புரட்சிகர இடதுசாரி இயக்கத்தை சீர்குலைத்தவர்கள் நீங்கள் என்பதில் இரு கருத்துக் இடமில்லை. உங்களது குறிக்கோள் யாவும் என்.ஜீ.ஓ பணத்தின் மீதானதாகவே உள்ளது. காணாமல் போனோர் கைது செய்யப்பட்டு தடுப் புக் காவலில் உள்ளோரைக் காட்டி உள்ளூரிலும் வெளிநாடுகளிலும் பணம் பெறுவதிலேயே கவனமாக உள்ள நீங்கள் தடுத்து வைக்கப்பட்டவர்களின் விடுதலைக்காக அரசியல் இயக்கம் நடாத்த மறுப்பது ஏன்?

மேற்கூறப்பட்ட இரண்டு பிரிவினரும் இடதுசாரி இயக்கத்தை இன்றைய கீழ் நிலைக்கு கொண்டு வந்து நிறுத்தியுள்ள போதிலும் நேர்மையான மாக்சிச லெனினிச வாதிகளும் இடதுசாரிகளும் இருந்து வருகிறார்கள். அவர்கள் பாராளுமன்ற போலி இடதுசாரிகளாலும் தற்போதைய என். ஜீ. ஓ சீரழிவு நடாத்தி வரும் வேஷதாரிகளான இடதுசாரிகளாலும் சீரழிக்கப்பட்டுள்ள இடதுசாரி இயக்கத்தை புதிய பாதையில் முன்னெடுக்கப் போராடி வருகி றார்கள். உண்மையான மாக்சிச லெனினிச சக்திகளையும் நேர்மையான இடதுசாரிகளையும் அடையாளம் கண்டு ஐக்கியப்படுத்தி முன் செல்வதில் முழுக் கவனத்தையும் செலுத்தி வருகிறார்கள்.

எனவே தான் போலி இடதுசாரிகளை நிராகரித்து புரட்சிகர வெகுஜனப் போராட்ட மார்க்கத்தில் அணிதிரளும் அறைகூவலை 1953ம் ஆண்டின் மகத்தான ஹர்த்தால் போராட்டத்தின் நினைவாக விடுக்கின்றோம். எத்தகைய தோல்விகள் பின்னடைவுகள் ஏற்பட்ட போதிலும் மாக்சிசம் லெனினிசம் மாஓசேதுங் சிந்தனைப் பாதையிலான புரட்சிகர இயக்கம் முன்னேறியே தீரும்.

www.padippakam.com நன்றி - நூலகத்திட்டம்



# மொட்டை மரமாக்கப்பட்ட யாழ் குடா நாட்டு மக்களது வாழ்க்கை

## ஒரு ஆசிரியரைச் சந்தித்ததன் அனுபவப் பகிர்வு

மூன்று தசாப்தங்களுக்கு முன்பு சீரும் சிறப்புமாகக் காணப்பட்ட யாழ்ப்பாணக்குடா நாட்டு வாழ்க்கை இன்று முற்றிலும் இலைகள் கிளைகள் யாவும் வெட்டப்பட்டு மொட்டையடிக்கப்பட்ட வெறுமரம் போல் காட்சி தருகிறது. இத்தகைய ஒரு அவல வாழ்க்கையைத் தான் இங்குள்ள மக்கள் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். இவ்வாறு தனது பெயரை வெளிப்படுத்த விரும்பாத ஒரு நடுத்தர வயதுடைய பட்டதாரி ஆசிரியர் கூறினார்.

புதிய பூமியின் ஆசிரியர் குழுவைச் சேர்ந்த ஒருவர் யாழ் நகரில் மேற் படி ஆசிரியரிடம் யாழ்ப்பாண நிலை பற்றிக் கருத்துக் கேட்டபோதே அவர் தனது உள்ளக் குமுறலை மேற்கண்டவாறு வெளிப்படுத்தினார். தான் இன்று ஆசிரியத் தொழிலும் வீடுமாகவே இருந்து வருகின்றேன் என்றும் முன்பு பல சமூக அக்கறையுடைய பொது விடயங்களில் ஈடுபட்டு வந்ததாகவும் ஆனால் இப்பொழுது சாப்பிடுவதற்கும் தண்ணீர் குடிப்பதற்கும் மட்டும் தான் வாய்திறக்கின்றதாகவும் கூறினார். வீட்டில் நாயைக் கூட உரத்துக் கூடப்பிட முடியாதளவுக்கு பீதி சூழ்ந்து நிற்பதாகக் கூறியதுடன் யாருடைய வீட்டின் படலையும் கத வும் எந்த நேரமும் தட்டித் திறக்கப்படவும் ஊகித்து அறியக் கூடிய துப்பாக்கி மனிதர்களே மனிதர்க ளைச் சுட்டு வீழ்த்தி விட்டுச் செல் லும் கொடூரக் காட்சிகள் தொடர்வதையும் கோபம் கலந்த சோகத்து டன் எடுத்துக் கூறினார்.

அந்த ஆசிரியர் யாழ் நகரத்தின் தேசியப் பாடசாலையில் உயர்தர வகுப்பில் கல்வி கற்பிக்கும் சமூக அக்கறை மிக்க ஒருவர். அவரது பிரதான பாடம் அரசியல் விஞ்ஞானம். எமது நிலைப்பாட்டை ஏற்கனவே தெரிந்து கொண்டபடியினால் மனம் திறந்து தனது கருத்துக்களைப் தயக்கமின்றிக் கூறினார்.

குடா நாட்டு மக்கள் 14 மணி நேர ஊரடங்கின் கீழும் மிகுதி 10 மணித் தியாலங்கள் திறந்து உலாவ விடப்பட்ட நிலையிலும் திறந்த வெளிச் சிறைச்சாலையில் தான் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். இந்த இருபத்தி நாலு மணிநேரத்தில் தங்களால் முன் கூட்டியே தீர்மானிக்கப்பட்ட எவரையும் எந்த ஆயுததாரியும் சுட்டுன் கொன்று விட்டுப் போகலாம். அதைத் தடுப்பதற் கோ தட்டிக் கேட்பதற்கோ எவரும் இல்லை. ஆனால் அரச விசார ணை என்பது மட்டும் தவறாது நடை பெறுகிறது. அரசாங்கப் புத்தகப் பதிவுகளுடன் அவை முடிந்து விடும் என அவ் ஆசிரியர் விரக்தியு டன் கூறினார்.

குடாநாட்டில் இடம் பெறும் கொலைகள் ஆட்கடத்தல்கள் என்பனவற்றின் பின்னணி என்ன என்று நீங்கள் கருதுகிறீர்கள் எனக் கேட்ட போது அவர் தனக்கே உரிய அரசியல் வரலாற்றுப் பாணியில் பதில் கூறினார். யாரிடம் அரசியல் அதிகாரமும் ஆதிக்கமும் இருக்கிறதோ அவர்கள் ஏனையோரை கொல்வதும் அடக்குவதும் தொடர்ந்து வந்துள்ள ஒரு விடயம் தான். முன்பு குடா நாட்டில் மாற்றுக் கருத்துடையோர் துரோகிகள் என்ற பெயரில் கொல்லப்பட்டனர். பின்பு மாற்று இயக்கத்தவர்கள் கொல்லப்பட்டனர். இப்பொழுது நிலைமை மாறி பயங்கரவாதிகள் என்ற பெயரில் அடையாளம் வைத்து தொடர்ந்து கொல்லப்படுகின்றனர். இதனால் ஒன்று மறியாத ஆனால் சந்தேகிக்கப்படும் சாதாரண மக்கள் கொல்லப்படுவதும் காணாமல் போவதும் நடை பெறுகின்றது. எல்லா இயக்கங்களிலும் இளைஞர்கள் யுவதிகள் இணைந்த போது விடுதலைக்காகப் புறப்பட்டுள்ளோம் என்றே சேர்ந்தனர். ஆனால் இன்று வரை எத்தனை இளம் உயிர்கள் சகோதரப் படு கொலைகளாலும் பேரினவாத ராணுவ ஒடுக்கு முறையாலும் கொல்லப்பட்டு விட்டன. கருத்துச் சுதந்திரத்தையும் தனிமனித சுதந்தி ரத்தையும் ஏற்றுக் கொள்ளும் எவரும் மாற்று இயக்கத்தையோ மாற்றுக் கருத்தையோ கொண்ட எவரையும் கொல்லமாட்டார்கள். அப்படி அல்லாது மாறிமாறிக் கொலைகளைச் செய்பவர்கள் உண்மையான விடுதலைப் போராளிகளாகவும் மனித நேயம் மிக்க மக்கள் சார்பாளர்களாகவும் இருக்க முடியாது என்பதே எனது திட்டவட்டமான நிலைப்பாடு எனவும் அவர் உறுதிபட எடுத்துக் கூறினார்.

மேலும் அவரிடம் குடா நாட்டுப் பொருளதார கல்வி நிலைபற்றிக் கேட்டதற்கு கிட்டத்தட்ட எல்லாம் முடிந்து விட்டது என்ற நம்பிக்கையீனத்தை வெளிப்படுத்தினார். சற்று விபரமாகக் கூறுமாறு கேட்ட போது, குடா நாட்டுப் பொருளாதாரத்தில் விவசாயம் மீன்பிடி மற்றும் சிறு தொழில்கள் என்பனவற்றுடன் கல்வி ஆகியவை அடி ஆதாரமாக நிலைத்து வந்தன என்பதை எல் லோரும் அறிவர். அன்று வெங்காயம் மிளகாய் உருளைக் கிழங்கு புகையிலை வாழை, திராட்சை என்பனவும் சிறந்த ரக மீன்களும் தெற்கிற்கு அனுப்பப்பட்டு வந்தன. அந்த வருமானத்தில் வீடு கட்டிய விவசாயிகளும் மீனவர்களும் இருந்ததை அவர் நினைவுபடுத்தி னார். ஆனால் இன்று அவையா வும் பாழாகிப்போன நிலையே காணப்படுகிறது. விவசாயிகள் மீனவர்கள் சிறு தொழில் செய் வோர் இன்று யாவும் இழந்து பசிபட் டினியுடன் வாழ்ந்து வருகிறார்கள். அரசாங்க உத்தியோகத்தர்கள் தமக்கு கிடைக்கும் மட்டுமட்டுக்கும் கீழான சம்பளத்தை வைத்து அப்படி இப்படிச் என்று சமாளிக்கிறார்கள். எனக்கு 20,000 ரூபாவரையில் சம்பளம். கடன்கள் கழிப்பனவுகள் போக மிகுதி 14,000 ரூபாவரை தான் கிடைக் கும் அதை வைத்து எட்டுப் பேர் கொண்ட எனது குடும்பத்தை எவ்வாறு காப்பற்றி தேவைகளை நிறைவேற்ற முடியும் எனக் கேள்விக் குறி முன்வைத்த அவ் ஆசிரியர் வெளிநாட்டுத் தொடர்புடைய குடும்பங்கள் ஓரளவிற்கு தற்போதைய குடா நாட்டுப் பொருளாதார நெருக்கடிகளுக்கு முகம் கொடுத்து நிற்க முடிகிறது. அவர்களுக்கு கிடைக்கும் புலம் பெயர்ந்த நாடுகளின் உறவுகள் மூலமான பண வருகையானது குடா நாட்டுப் பணப் புழக்கத்திற்கு பங்களிக்கிறது. அப் பணச் சூழற்சி மற்றையோருக்கும் "புல்லுக்கும் அங்கே பொசியுமாம்" என்பதாகிறது. என் றும் கூறினார்.

அவர் மேலும் கூறுகையில் ஒரு கி. நாட்டரிசி 100 ரூபா முதல் 120 ரூபா வரை விற்கப்படுகிறது. ஒரு பக்கற் சீமெந்து 1650 ரூபாவிற்கு மேல் விற்கப்படுகிறது. கொழும்பில் இருந்து கப்பல்களில் பொருட்கள் வருவதைப் பொறுத்தே விலைகள் ஏறுவதும் இறங்குவதுமாக இருக்கும். கடலில் ஏதாவது தாக்குதல் என்ற செய்தி கிடைத்த மறுகணம் பொருட்களின் விலைகள் தாறுமாறாக ஏறுவதும் இல்லை என்ற எழுத்து அட்டை முன்னுக்கு வந்து விடுவதும் குடா நாட்டு இன்றைய வாழ்வுடன் இணைந்த ஒன்றாகும். இதனை நம்மவர்கள் தான் செய்கிறார்கள்.

அவ் ஆசிரியர் ஒரு சமூக அக் கறையாளனாகவும் சாதாரண மக்களைப் பற்றிய அனுதாபம் உள்ளவராகவும் இருப்பதனால் போலும் அவரது அக்கறைகள் தொழிலாளர்கள் விவசாயிகள் மற்றும் அன்றாட உழைத்து வாழும் யாழ் குடா நாட்டு மக்களைப் பற்றிய தாக இருந்ததை அவதானிக்க முடிந்தது. தினக் கூலி வேலைக்குச் செல்லும் ஒரு வரு க்கு 300 அல்லது 350 ரூபா மட்டு மே கிடைக்கிறது. அதுவும் இடைஇடையே தான் வேலை கிடைப்பதாக உள்ளது. அரிசி 100 ரூபாவிற்கு மேல் தான் வாங்க முடியும். ஏனைய அத்தியாவசிய உணவுப் பொருட்களை எவ்வாறு வாங்க முடியும். விவசாயம் அழிவுற்றதால் கூலி விவசாயிகள் பட்டினி நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர். அவ்வாறே கட்டிட மற்றும் நிர்மாணங்க ளில் வேலை செய்து வந்தவர்களும் வேலை இன்றி கடும் பாதிப்பைப் பெற்று நிற்கின்றார்கள் என்பதையும் அவர் எடுத்துரைத்தார்.

மேலும் அவரிடம் கல்வி நிலை பற்றிக் கேட்ட போது ஒரு பெரு மூச்சை விட்டபடி அது எப்பவோ முடி ந்த கதை போலாகிவிட்டது. என் றார். பாடசாலைக் கல்வி முதல் பல்கலைக்கழகக் கல்வி வரை சீரழிந் து கிடக்கிறது. என்றவர் ஏதோ பேருக்கு கல்வி முயற் சிகள் நடைபெறுகிறதே தவிர சுதந்திரமாக வும் நல்ல மன நிலையிலும் அமை திச் சூழலில் கல்வி கற்கவும் கற்பிக் கவும் முடியுமான காலம் எப்பவோ மறைந்து விட்டதைச் சுட்டிக் காட்டினார்.


இவ்வாறு அவ் ஆசிரியருடன் உரையாடிக் கொண்டிருந்த வேளை நீங்கள் கொழும்பில் இருந்து எப்படி வந்தீர்கள் என அவர் எம்மிடம் வினாவினார். விமான த்தில் என்று கூறியதும் 18000/= ரூபா அல்லவாரிக்கற்றுக்கு என்று கேட்டு இதை விட அநியாயம் எங்கு இடம் பெறுகின்றது. என்றும் கேட்டார். சென்னைக் குச் செல்ல 12 ஆயிரம் ரூபாயிலும் ரிக்கற் எடுக்கலாம் அல்லவா என்று கேட்ட அவர் குடாநாட்டுக்காரர் வெளிநாட்டுப் பணத்தைக் கொண்டவர்கள் என்ற முடிவிலேயே இவ்வாறு அறவிடுகிறார்கள் போலும். இப் பணத்தில் யார் யாரோ எல்லாம் வயிறு வளர்க்கிறார்கள் என்றும் சுட்டிக் காட்டினார்.



மேலும் அவரிடம் குடா நாட்டில் சிவில் நிர்வாகம் பற்றிக் கேட்ட போது அது பெயருக்குத்தான் என்றும் எல்லாவற்றிலும் ராணுவத் தலை யீடு தான் இருக்கிறது. நமது சிவில் உயர் அதிகாரிகளும் அப்படி இப்படி யாகத் தான் நடந்து கொள்கிறார் கள் என்றும் தனது உள்ளார்ந்த ஆதங்கத்தை வெளிப்படுத்தினார். போக்குவரத்து மிக மிக ஆபத்தான தாக இருக்கிறது. பிரதான பாதைக ளில் இரண்டு மணி நேரத்திற்கு மேலாக எவரும் பிரயாணம் செய்ய முடியாது. கலி யாண வீடோ செத்த வீடோ அந் நேரத்தில் அசைய முடி யாது. இவ்வாறு எடுத்துக் கூறிய அவ் ஆசிரியர் இத்தனை கொடூரங் கள் மத்தி யிலும் நமது மக்கள் நின்று பிடித்து வாழ்க்கையை நடத்துவது தான் நம்பிக்கை தருகிறது எனக் கூறி மக்களின் இருப்பை போற்றினார்.

இறுதியாக இனப் பிரச்சினையின் தீர்வு பற்றிக்கேட்ட போது என்ன தான் "கம்பத்தில் ஏறி நின்று சாகசம் காட்டினாலும் காசுவாங்க கீழே தான் வர வேண்டும்" என்பது போன்று இறுதியில் பேச்சுவார்த்தை மூலமான அரசி யல் தீர்வுக் குத்தான் வர வேண்டும் என்று கூறியதுடன் பேரினவாத அடக்கு முறைகளை எதிர்த்துப் போராடும் போது சரியான அரசியல் பாதையில் சென்றால் தான் இறுதி வெற்றி கிடைக்க முடியும் என்பதையே நமது மக்களது போராட்ட அனுபவம் தொகுத்துக் கூறுகின்றது எனவும் முடித்தார்.

தொகுப்பு: கே. ஆர்



# சவூதி வீட்டுப் பணிப்பெண் றிசானவுக்கு மரணதண்டனை

சவூதி அரேபியாவில் வீட்டுப்பணிப்பெண்ணாக வேலைசெய்து மூதூரை சேர்ந்த றிசானா நபிக் (19 வயது) என்பவருக்கு மரண தண்டனை விதிக் கப்பட்டுள்ளது. அவர் வேலை செய்த வீட்டின் குழந் தையொன்றின் மரணம் தொடர்பாகவே அவர் மீது கொலைக் குற்றம் சாட்டப்பட்டு மரண தண்டனை விதிக்கப்பட்டுள்ளது. அவரது மரண தண்டனையை இரத்து செய்யும்படி சவூதி அரசாங்கத்திற்கும் மன்ன ருக்கும் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

அவரைப் போன்று இன்றும் நான்கு இலங்கையர் களுக்கு மரணதண்டனை விதிதக்கப்பட்டுள்ளது. இதை விட இன்னும் எட்டு இலங்கையர்கள் பல் வேறு குற்றச்சாட்டுகளின் பேரில் சவூதி அரேபியா சிறையில் வைக்கப்பட்டுள்ளனர்.

இவ்வாறே சவூதிக்க சென்ற சிலர் காணாமல் போயு ள்ளதாகவும், அவர்கள் பற்றிய விபரங்கள் தெரியவில் லை என்றும் செய்திகள் வெளியாக இருந்தன. சிலரின் சடலங்கள் அனுப்பப்பட்டன. அவர்களின் மரணத்திற் குரிய காரணங்கள் சரியாக கண்டறியப்படவில்லை.

மத்திய கிழக்கு நாடுகளுக்கு வேலைக்கு செல்வோர் கணிசமான அந்நிய செலவாணியை சம்பாதித்துக் கொடுக்கின்றனர். அதில் வீட்டுப்பணிப் பெண்களின் எண்ணிக்கையே அதிகம்.

அவ்வாறு வீட்டுப்பணிப் பெண்களாக செல்வோரில் அதிகமா னோர் முஸ்லீம்கள் அல்லது முஸ்லீம் பெயர்களில் கடவுச்சீட்டு எடுத்துக் கொண்டு செல்வோர்களாக இருக்கின்றனர். இதற்கு காரணம் மத்திய கிழக்கு வீட்டு எஜமான்கள் முஸ்லீம் பெண்களையே விரும்புகின்றனர். என்று கூறப்படுகிறது. முஸ்லீம்களாக இருந்து மத்திய கிழக்கு எஜமான்களிடம் பாதுகாப்பாக இருக்கலாம் என்றும் பிரசாரம் செய்யப்படுகிறது.

எந்தப்பெயர்களில் மத்தியகிழக்கு நாடுகளுக்கு பணிப் பெண்க ளாக சென்றாலும் அவர்கள் அடிமைகளாகவே நடத்தப்படுகின் றனர். என்பதற்கு ஆதாரங்கள் நிறையவே இருக்கின்றன. அத்துடன் ஒன்றிரண்டு பேரைத் தவிர அதிகமானவர்கள் பாலி யல் துஸ்பிரயோகங்களுக்கும் வன் முறைகளுக்கும் உட்படுத்தப்படுகின்றனர். அவ்வாறான பாலியல் சுரண்டல்களிலிருந்தும் தொழில் ரீதியான சுரண்டல்களிலிருந்தும் பாதுகாத்துக் கொள்வதற்கான திட்டங்கள் எதுவுமின்றி அங்கு பணிப்பெண் களாக அனுப்பப்படுகின்ற னர். துன்புறுத்தல் மரணம் போன்றவற் றிலிருந்தும் பாதுகாப் பில்லை.

இப்பிரச்சினைகளுக்கு தீர்வு யாதெனில் அடிமைத்தனமான வீட்டுப் பணியாளர்களாக செல்வதை சட்டத்தாலும் நடவடிக் கைகளாலும் தடுப்பதாகும்.

www.padippakam.com

நன்றி - நூலகத்திட்டம்



புதிய பூமி

சுற்று 14 ஒகஸ்ட் 2007 பக்கம் 16 விலை 20/- சுழற்சி 105

இல. 47, 3ம் மாடி , கொழும்பு மத்திய சந்தைக் கட்டிடத் தொகுதி.
கொழும்பு 11, இலங்கை. தொ.பே: 060 2136530, தொலை நகல்:011-2473757
E-mail : puthiyapoomi@hotmail.com, web : www.ndpsl.org.

# மனித உரிமைப் போராட்டங்களும் தனிமனிதப் பொறுப்பும்

"இலங்கையில் ஜனநாயகம் சிக்கல்களுக்குள்ளாகியுள்ள இந்த சந்தர்ப்பத்திலும் கூட தங்களின் சமூகக் கடமை என்பது வாக்களிப்பதற்கு மட்டும் வரையறுக்கப்பட்டுள்ளதாகவே இலங்கையர்கள் நினைக்கின்றனர்." இவ்வாறு கொழும்பு பல்கலைக்கழக சட்ட பீடத் தலைவரும் கொழும்பு பல்கலைக்கழக மனித உரிமைகள் நிலையத்தின் தலைவருமான கலாநிதி தீபிகா உடகம கூறியுள்ளார். கடந்த மாதம் 25 ஆம் திகதி சர்வதேச கற்கைகளுக்கான பண்டாரநாயக்க நிலையத்தில் நடை பெற்ற 'இலங்கையின் குறிப்பான நிலைமையில் உலக ளாவிய ரீதியில் மனித உரிமைகளைப் பாதுகாப்பது' என்னும் தலைப்பில் நடைபெற்ற கருத்தரங்கில் உரையாற்றும் போது மேற்படி கூற்றினை தெரிவித்துள்ளார். மனித உரிமைகளை உறுதி செய்து கொள்வதற்கு சிவில்சமூகத்தின் பங்களிப்பும் அரசியல் தீர்மானமும் அவசியம் என்றும் தீபிகா உடகம குறிப்பிட்டார்.

தனிமனிதரின் உரிமை தேர்தலுக்கு தேர்தல் வாக்களிப்பதுடன் முடிவடைகிறது. ஒரு தேர்தலுக்கும் இன்னொரு தேர்தலுக்குமிடையில் அரசாங்கத்தின் ஒடுக்குமுறைகள் மனித உரிமை மீறல்கள், ஜனநாயக மறுப்பு, விலைவாசி உயர்வுகள், பொருளாதார சுமைகள், அரசியல் அடக்கு முறைகள், யுத்தம், ஊழல் மோசடி போன்றவற்றின் பாதிப்பிற் குள்ளாவது அவர்களுக்குரிய கடமையாக்கப்படுகிறது. இது தான் முதலாளித்துவ ஆட்சிமுறையில் தனிமனிதருக்கு இருக்கும் சமூகப் பொறுப்பும் கடமையுமாகும். தேர்தலில் வாக்களிக்கும் தனி மனிதனின் உரிமைகளைப் பாதுகாப்பதற்கான சமூகநீதியை முதலாளித்துவ ஆட்சி முறை உறுதி செய்வதில்லை. அதாவது ஆட்சிமுறையினூடாக சமூகநீதி உறுதி செய்யப்படும் போதே தனிமனித உரிமைகளின் பிரயோகம் உறுதிசெய்யப்படுவதுடன் அர்த்தமுடையதாகவுமாகிறது.

சமூக நீதியை உறுதி செய்யும் அரசியல் தீர்மானத்தின் அடிப்படையிலான ஆட்சிமுறையே மனித உரிமைகளையும் ஜனநாயகத்தையும் உறுதி செய்யமுடியும்.

இலங்கையின் தற்போதைய ஆட்சியின் ஜனநாயக மறுப்பு மனித உரிமை மீறல்கள் பொருளாதார சுமைகளுக்கு எதிரான நடவடிக்கையாக ஐ.தே கட்சியும் சுதந்திரக்கட்சியும் மக்கள் பிரிவும் இணைந்து ஆர்ப்பாட்ட ஊர்வலத்தையும், கூட்டத்தையும் நடத்தின. அதில் பல்லாயிரக்கணக்கானவர்கள் அணிதிரண்டிருந்தனர். இது அரசாங்கத்தின் மீதான வெறுப்பின் வெளிப்பாடாகும். இந்த எதிர்ப்பலைகளுக்கு மத்தியில் தேர்தல் நடத்தப்பட்டால் அதிருப்தியடைந்திருக்கும் மக்கள் தற்போதைய எதிரக்கட்சிகளுக்கு வாக்களிக்கலாம். அதனால் எதிர்க்கட்சிகள் ஆட்சிக்கும் வரலாம். அவ்வாறு மாறும் ஆட்சியில் ஜனநாயக மறுப்பு மனித உரிமை மீறல்கள் பொருளாதார சுமைகள் யுத்தம் போன்றன பல்வேறு நிலைகளில் தொடரவே செய்யும். அப்போதும் அதிருப்தியடையும் மக்கள் சகிப்புடன் இருப்பர். வேண்டுமென்றால் எதிர்க்கட்சி கூட்டத்தில் அணிதிரள்வார்கள். மீண்டும் தேர்தல் வரலாம். மக்கள் அவர்களின் அதிருப்தியை வெளிக்காட்ட எதிர்க் கட்சிகளுக்கு வாக்களிப்பர். அந்த எதிர்க்கட்சிகள் ஆட்சி அமைக்கலாம். இப்படி மாறிப் பழைய கதைகளே தொடரும். அவ்வாறே மக்களின் அதிருப்தியும் தொடர்கதையாகவே இருந்து வரும். அவ்வாறெனின் மக்களின் சமூகப்பொறுப்பு என்பது வாக்களிப்பதுடன் மட்டும் முடிவடைவதில்லை. நல்லாட்சிக்காக சமூக நீதியை நிலைநாட்டிக் கொள்வதற்குத் தொடர்ந்தும் போராட வேண்டும். எப்போதும் எந்த சந்தர்ப்பதிலும் சமூகக்கடமைகளைத் தொடர்ந்து செய்வதுடன் தனிமனித உரிமைகளைக் தொடர்ந்து நிலைநாட்டிக்கொள்வதில் விழிப்பாக இருந்து சமூக நடவடிக்கைகளில் ஈடுபட வேண்டும். இது வாக்களிக்கும் அரசியலுக்கு அப்பால் விரிவானதும் ஆழமானதுமான செயற்பாடாக அமைதல் வேண்டும்.

ஜனநாயகம், மனித உரிமைகள் மனிதாபிமானம், போன்றன மேற்கு நாட்டு விவகாரங்கள். அவை நமக்கு ஒத்துவராதென பிரசாரம் செய்து அவற்றை மீறுவதில் அடக்கு முறை அரசுகள் முன்நிற்கின்றன. மக்களை அடக்குவதை நியாயப்படுத்துகின்றன. அதேவேளை மனித நாகரீகத்திற்கு ஜனநாயகம் மனித உரிமைகள் மனிதாபிமானம் போன்றவற்றை மேற்குலகமே வழங்கிப் பங்களிப்பு செய்ததாகவும் அதை நடைமுறைப் படுத்தாத நாடுகளில் தலையிட மேற்கு நாடுகளுக்கும் அமெரிக்காவிற்கும் தார்மீக உரிமை இருப்பதாக வற்புறுத்தப் பட்டும் வருகிறது. இதனால் அடக்குமுறை அரசுகளுக்கும் ஏகாதிபத்திய மேற்கு நாடுகளுக்குமிடையில் சில முரண்பாடுகளும் முறுகல்களும் ஏற்படுவது போன்ற தோற்றம் காட்டப் படுகிறது.

ஏகாதிபத்திய சக்திகளின் உலகமயமாதலின் நிகழ்ச்சி நிரலை தேசிய அரசுகள் நடைமுறைப்படுத்தாமல் அவற்றுக்கு இருப்பில்லை. அதை நடைமுறைப்படுத்தும் போது ஜனநாயக மறுப்பு, மனிதஉரிமை மீறல்கள், மனிதாபிமான நிராகரிப்பு என்பன தலைவிரித்தாடி அதனால் மக்கள் அதிருப்தியடைகின்றனர். இந்த அதிருப்தியைக் கொண்டு ஏகாதிபத்திய சக்திகள் தேசிய அரசுகளை அச்சுறுத்தி அடிபணியச் (பிளக்மெயில்) செய்து ஜனநாயகம், மனித உரிமைகள், மனிதாபிமானம் என்பவற்றின் பாதுகாவலனாகக் காட்டிக்கொண்டு தமது நலன்களைப் பாதுகாக்கின்றன. மக்களின் மனித உரிமைகளுக்கு குரல் கொடுப்பதாகக் காட்டிக்கொள்ளும் என்.ஜி.ஓ அமைப்பு க்கள் ஏகாதிபத்திய சக்திகளின் 'பிளக்மெயிலை' வைத்துக் கொண்டு தேசிய அரசுகளை மிரட்டலாம் என்ற மாயை ஏற்படுத் துகின்றன. இதனால் மனித உரிமைகளுக்கான போராட்டங்களை என்.ஜி.ஓ அமைப்புகள் ஒங்கி ஒலித்து அதன் மூலம் ஏகா திபத்திய தலையீட்டிற்கு வழிவகுக்கின்றன.

இது ஒரு குழப்பமான இன்றைய சர்வதேச சூழல். அதாவது ஜனநாயகம், மனித உரிமைகள் மனிதாபிமானத் திற்கான போராட்டங்களை ஏகாதிபத்திய சக்திகள் அதற்கு சார்பாக பயன்படுத்திக் கொள்கின்றன. ஜனநாயகம், மனித உரிமைகள் மனிதாபிமானம் போன்றவ ற்றுக்கான போராட்டங்களை ஏகாதிபத்திய நிகழ்ச்சி நிரலுக்கு ஆதரவாக இல்லாமலும் ஏகாதிபத்தியத்திற்கு எதிரான போராட்டங்கள் அடக்குமுறை தேசிய அரசுகளை ஆசீர்வதிப்பதாக இல்லாமலும் முன்னெடுப்பதே இன்றைய உலக மக்களின் சர்வதேசக் கடமையாகும்.

ஜனநாயகம், மனிதஉரிமைகள், மனிதபிமானம் போன்றன மக்களின் நீண்டகால போராட்டங்களினால் கிடைத்தனவாகும். அவை ஏகாதிபத்தியங்களின் சொத்துமல்ல. தேசிய அரசுகளின் கருணையினால் கிடைப்பனவுமல்ல. அவை ஒவ்வொரு நாட்டின் வரலாற்றுக் காலமுதல் மக்களின் போராட்டங்களினூடாக வளர்ச்சியடைந்த எண்ணக் கருக்களின் வெளிப்பாடுகளேயாகும்.

இரண்டாம் உலக யுத்தத்தை அடுத்து அமைக்கப்பட்ட ஐ.நா. சபை நிறைவேற்றப்பட்ட சர்வதேச மனித உரிமைகள் சாசனம் போன்றன ஏகாதிபத்தியத்திற்கு எதிராகப் போராடிய நாடுகளினதும், மக்களினதும் சாதனைகளாகும். அவற்றை இன்று ஏகாதிபத்திய சக்திகள் தமது அக்கறைகளுக்காகப் பயன்படுத்திக் கொள்கின்றன. அதேவேளை அடக்கு முறை தேசிய அரசுகள் என்பன மக்களின் நீண்ட கால சாதனைகளான ஜனநாயகம், மனிதஉரிமைகள், மனிதபிமானம் போன்றவற்றை தமது ஆட்சி அதிகாரத்திற்காக நிராகரிக்கின்றன.

எனவே தனிமனிதரின் உரிமைகளை உறுதி செய்வதற்கான சமூகப் பொறுப்பு சமூக நீதியை வென்றெடுப்பதற்கான போராட்டங்களாக அடக்குமுறை தேசிய அரசுகளுக்கும் ஏகாதிபத்தியங்களுக்கும் எதிரான இயக்கங்களாகவும் போராட்டங்களாகவும் விரிவடைய வேண்டும்.

ஆசிரியர் குழு

# பாராளுமன்ற ஜனநாயக ஆட்சியில் ஊழல் மோசடி அதிகார துஷ்பிரயோகம்

மகிந்த சிந்தனை அரசாங்கத்தில் எங்கு திரும்பினாலும் ஊழல் மோசடி லஞ்சம் அதிகார துஷ்பிரயோகம் என்ற செய்திகள் நாளாந்தம் வெளிவந்து கொண்டிருக்கின்றன. அரசன் எவ்வழி குடிகள் அவ்வழி என்பது போல அதி உயர் பதவியிலும் பதவிகளிலும் இருப்பவர்கள் செய்து வரும் திருவிளையாடல்களைப் பார்க்கும் அடுத்தடுத்த நிலைப் பதவிகளில் உள்ளவர்கள் "அங்கே அவர்கள் அப்படிச் செய்கிறார்கள் நாங்கள் இங்கே இப்படிச் செய்தால் என்ன பிழை" என்றவாறான நியாயப்படுத்தல்களுடன் விஷயங்கள் நடந் தேறுகின்றன நியாயப் படுத்தல்களுடன் விஷயங்கள் நடந்தேறுகின்றன. பதவியைப் பெறுவதற்காக 150 கோடி ரூபா வழங்கப்பட்ட அதிர்ச்சி தரும் சம்பவச் செய்தி அதனோடு சம்மந்தப்பட்டவர்களாலேயே வெளியிடப்பட்டது. அது பற்றிய முறையான விளக்கமோ தெரிவுக்குழுக் கோரிக்கையோ கவனத்திற்கு எடுக்கப்படவில்லை. இந் நிலையிலே ஏனைய ஊழல் மோசடிகள் ஒன்றன் பின் ஒன்றாக வெளிவந்த வண் ணமே உள்ளன. இவற்றில் ஆளும் கட்சிப் பெரும் புள்ளிகள் மட்டுமன்றி முன்னாள் ஐ.தே.கட்சியின் அமைச்சர் பெரு மக்களும் சம்மந்தப்பட்டிக்கிறார்கள். பொது நிறுவனங்களில் இடம் பெற்ற ஒழுங்கீனங்கள் முறையற்ற கொடுப்பனவுகள் பற்றிய பாராளுமன்றத் தெரிவுக்குழு 25 நிறுவனங்களில் இடம் பெற்ற பல கோடி ரூபா கையாடல்கள் பற்றிக் கண் டறிந்துள்ளதாகவே தெரிய வருகிறது. ஆனால் அவ் அறிக் கை பாராளுமன்றத்தில் இதுவரை வெளியிடப்படவில்லை.

இந்நிலையில் மேன் மேலும் லஞ்சம் ஊழல் பற்றிய தகவல்கள் வெளிவந்த வண்ணமே உள்ளன். மிக் விமானக் கொள்வனவிலும் பெரும் பெரும் கைகள் சம்மந்தப்பட்டுள்ளதாகவே சில ஊடகங்கள் அம்பலப்படுத்தி வருகின்றன. எங்கு அரச திணைக்களங்களுக்குச் சென்றாலும் கீழ் நிலை ஊழியர்கள் முதல் உயர் நிலை அதிகாரிகள் வரை கையூட்டை எதிர்பார்க்கும் நிலை காணப்படுகின்றது. பொலீஸ் திணைக்களமே இதில் முதலிடத்தில் இருப்பதாக லஞ்ச ஒழிப்பு ஆணையாளர் அண்மையில் தெரிவித்துள்ளார். ஒரு சில உயர் அதிகாரிகளும் ஊழியர்களுமே இந்த லஞ்ச மற்றும் ஊழல்களுக்கு விதிவிலக்காக கடமை கண்ணியம் எனப் பணிபுரிந்து வருகின்றனர். இந்த லஞ்ச ஊழலுக்கு உள்ளேயும் வெளியேயும் தரகர்கள் ஒவ்வொரு அரசாங்க திணைக்களங்களிலும் இருந்து வருகிறார்கள். ஆணைப் பெண்ணாகவோ பெண்ணை ஆணாகவோ மாற்ற முடியாத ஒரு விடயத்தை விட ஏனைய அனைத்தையும் இந்த லஞ்சத்தால் சாதித்துவிட முடியும் என்ற நிலை தான் நிலவுகிறது. அவ்வப்போது சிலர் லஞ்ச வலையில் அகப்படவே செய்கிறார்கள். அவர்கள் சிறு வகை மீன்கள் போன்றவர்களே. பெரும் திமிலங்கள் ஒரு போதும் அகப்படுவதில்லை. அது அவர்களது அதிஷ்டம் அல்ல. முதலா ளித்துவ ஆட்சி அமைப்பின் மூலமான பாதுகாப்பாகும்.

இத்தகைய ஊழல் மோசடிகளுக்கு தர்மராச்சியத்தைத் தோற்றுவிக்கப் பாராளுமன்றத்திற்குள் புகுந்த பௌத்த குருமாரான உறுப்பினர்களும் விதி விலக்கல்ல. அண்மையில் பாராளுமன்ற பௌத்தகுரு உறுப்பினர் எல்லாவல மேத்தா னந்த தேரர் கொள்வனவு செய்த வரி விலக்கப்பட்ட ஆடம்பர மோட்டார் பென்ஸ் காரை முறையற்ற வழிகளில் விற்று பலகோடி பணம் பெற்ற விவகாரம் அம்பலத்திற்கு வந்துள்ளது. இது பற்றி பாராளுமன்றத் தெரிவுக்குழு அமைக்க வேண்டும் என்ற கோரிக்கை முன்வைக்கப்பட்டுவருகின்றது. அவ்வறோ ஜே.வி.பி. அமைச்சர் பதவி பெற்றிருந்த 2004ம் ஆண்டு காலப்பகுதியில் ஆயிரம் குளங்கள் புனரமைக்கும் வேலைத் திட்டத்தில் முறைகேடுகளும் பண மோசடிகளும் இடம் பெற்றதாகச் செய்திகள் வெளிவந்துள்ளன.

அரண்மனை ஆடம்பர சுகபோக வாழ்வையும் அரசியலையும் துறந்து அரச மர நிழலுக்கு வந்தவர் கௌதம புத்தர். பணத்தைக் கைநீட்டி வாங்கவோ புளங்கவோ கூடாது என்றும் எளிமையான வாழ்வைத் தமது துறவறத்தில் கடைப்பிடிக்க வேண்டும் என்ற பௌத்த துறவிகளுக்கு உபதேசித்தவர் புத்தர். மக்களிடம் யாசகம் செய்து உணவு உண்ண வேண் டும் எனக் கூறிச் சென்றவர். ஆனால் இந் நாட்டிலே அரச மரத்தடியின் கீழான விகாரை வாழ்வைத் துறந்து மாளிகை வாழ்வையே பல பௌத்தத் துறவிகள் வாழ்க்கை முறையாகக் கொண்டு வாழ்கின்றனர். அதன் வெளிப்பாடே ஜாதிக ஹெல உறுமய கட்சியின் ஆடம்பர மோட்டார் கார் வாங்கி விற்ற விவகாரமாகும்.

இவை உணர்த்தும் உண்மைகள் யாவை? எவ்வளவிற்கு சுதந்திரம் ஜனநாயகம் பாராளுமன்ற ஆட்சிமுறை பற்றிப் பேசினாலும் சொத்து சுகம் சுரண்டல் ஏமாற்று மோசடி என்பனவே பாராளுமன்ற ஜனநாயக ஆட்சி முறையின் அடிப்படைகளாகும். இந்த வர்க்க ஆட்சி முறையின் பிரதான மூடு திரையே பாராளுமன்றமாகும். இதனாலேயே முதலாளித்துவ பாராளுமன்றத்தை லெனின் "கள்வர் குகை" என வர்ணித்திருந்தார். அந்தக் கள்வர்கள் யார் என்பதை நடப்பு விவகாரங்கள் எடுத்துக் காட்டுகின்றன.

இத்தகைய பாராளுமன்ற ஆட்சிமுறையினால் உழைக்கும் மக்களும் ஒடுக்கப்படும் தேசிய இனங்களும் ஒரு போதும் விமோசனம் பெறமுடியாது.

www.padippakam.com நன்றி - நூலகத்திட்டம்



# மக்களின் தலைகளில் எரிபொருட்களின் விலை ஏற்றம்

இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனம் பல வருடங் களுக்கு முன் இலாபத்தில் இயங்கி வந்த ஒரு நிறுவனமா கும். தற்போது நட்டமேற்படுவதற்கு மானிய விலையில் விற்பது தான் காரணம் எனக் கூறப்பட்டு வருகிறது. நட்டத்தை விலை யேற்றமின்றியே குறைப்பதற்குப் பல நடவடிக்கைகள் எடுக்க இடம் உண்டு. ஆனால் அரசாங்கம் அதற் குத் தயாராக இல்லை.

இலங்கைக்குத் தேவையான எரிபொருளில் 60 வீதம் மட்டு மே சப்புகஸ்கந்த சுத்திகரிப்பு ஆலையில் சுத்திகரிக்கப்படுகி றது. முன்பு எரிபொருளின் தேவை குறைவாயிருந்த சமயம் முழு எரிபொருளையும் அங்கு சுத்திகரிக்க முடிந்தது. மிகுதி 40 வீத எரிபொருள் சுத்திகரிக்கப்பட்ட நிலையிலேயே இறக் குமதி செய்வதால் அதிக விலை கொடுக்க வேண்டியுள்ளது. அது மட்டுமன்றி சுத்திகரிப்பின் போது உபயோகமான பல உப பொருட்களைப் பெற முடியும். அவற்றை இந்நேரடி சுத்திகரிக் கப்பட்ட எரிபொருள் இறக்குமதியால் இழக்க வேண்டியே உள்ளது.

பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் மூலம் மக்கள் வங்கியும், இலங்கை வங்கியும் பெரும் இலாபம் சம்பாதிக்கின்றன. பொருள் கொள்வனவுக் கட்டளையை அரச வங்கிகளினூடா கவே செய்ய வேண்டியுள்ளது. எல்.சி. எனப்படும் கட்டளை யை வங்கியூடாக மேற் கொள்ளும் போது 4 வீத கட்டணம் வங்கிக்குச் செலுத்தப்படுகிறது. ஆனால் தனியார் வங்கிகள் .04 வீதமே அறவிடுகின்றன. இறக்குமதியில் இதை விடக் குறைவான கட்டணத்தை குறிப்பிட்ட வாடிக்கையாளருக்கு தனியார் வங்கிகள் அறவிடுவதுமுண்டு. தனியார் வங்கிகள் அறவிடும் கட்டணத்தில் 100 மடங்கு கட்டணத்தை அரச வங்கிகள் அறவிடுகின்றன. இது பகற் கொள்ளை மட்டுமன்றி இறக்குமதிச் செலவீனத்தை அதிகரிக்கவும் செய்கிறது.

மண்ணெண்ணெயை தற்போது இந்திய ஒயில் கம்பனி தனது விற்பனை நிலையங்களில் விற்பதை நிறுத்தியுள்ளது. அதை விற்பதால் தமக்கு நட்ட மேற்படுகிறது என இந்தியக் கம்பனி கூறுகிறது. இந்த இந்திய பெற்றோலியக் கம்பனிக்கு பங்கு கள் விற்கப்பட்ட போது அதன் எதிர்கால நடவடிக்கைகள் எப் படி இருக்கும் என்பதை புதிய பூமி பல கட்டுரை கள் மூலம் சுட் டிக்காட்டி எதிர்த்து வந்தது.

எரிபொருட்களுக்கான விலைகள் மாதா மாதம் உயர்த்தப்பட் டுக் கொண்டே வருகிறது. இதனால் மக்கள் தாங்க முடியாத வாழ்க்கைச் செலவின் அதிகரிப்பைச் சுமக்கின்றனர். பெற் றோல் டீசல் விலைகளால் சகல பாவனைப் பொருட்களின் விலைகள் உயர்ந்து செல்வதுடன் போக்குவரத்துக் கட்டண ங்கள் உயர்ந்துள்ளன. மண்ணெண்ணெயின் விலை 40 வீதத் தால் அதிகரிக்கப்பட்டு ஒரு லீற்றர் மண்ணெண்ணெய் லீற்றர் 63 ரூபாவாக விற்கப்படுகிறது. இதனால் விவசாயிகள் மீனவர் கள் தோட்டத்தொழிலாளர்கள் மின்சாரம் இல்லாத கிராமப் புற மக்கள் மோசமாகப் பாதிக்கப்படுகின்றனர்.

ஈவிரக்கமற்ற முறையில் மக்களுக்கான எரிபொருளுக்கு விலையேற்றும் அரசாங்கம் தமது அரசாங்க நிறுவனங்கள் மூலம் பெற்றோலியக் கூட்டுத்தாபனத்திற்கு கொடுக்க வேண் டிய கடன் தொகையைச் செலுத்தாது இருந்து வருகி ன்றது. இவ்வாறு 22 அரசாங்க நிறுவனங்கள் பெற்றோலியக் கூட்டு த்தாபனத்திற்கு 3000 ஆயிரம் கோடி ரூபா செலுத்த வேண்டி இருக்கிறது. இதில் மின்சாரசபை ஆயிரத்து எழுநூற்றுப் பத்து கோடி ரூபாவும் மிகின் லங்கா விமான நிறுவனம் 500 மில்லியன் ரூபாவும் செலுத்த வேண்டியுள்ளது. இவ்வாறே ராணுவ முகாம்கள் உட்பட பல பாதுகாப்பு சம்மந்தப்பட்ட அர சாங்க நிறுவனங்களும் பெற்றோலியக் கூட்டு த்தாபனத்திற்கு கடன் செலுத்த வேண்டி உள்ளன. இக் கடன் நிலுவைகள் யாவும் தேசிய பாதுகாப்பு யுத்தம் என்பன வற்றால் கொடு படாது வைக்கப்பட்டுள்ளன. அதே பெயரில் ஊழல் மோசடி களும் இடம் பெறுகின்றன.

மேற்படி அரசாங்க நிறுவனங்களின் கடன் நிலுவைகள் செலு த்தப்படும் வரை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் வற்வரி உட் பட செலுத்தி வரும் வரிகளின் மொத்தத் தொகையான இரண் டாயிரத்து எண்பது கோடி ரூபாய்களை இடை நிறுத்திவை க்க முடிவு செய்துள்ளது. இதனால் அரசாங்க உயர்பீடத்திற் கும் பெற்றோலிய கூட்டுத்தாபன உயர் அதிகாரிகளுக்குமி டையில் முறுகல் நிலை தோன்றியுள்ளது.

எவ்வாறாயினும் பெற்றோலிய கூட்டுத்தாபனமும் அரசாங்க மும் இறுதியில் விலை உயர்வை மக்களின் தலைகளிலேயே கட்டிச் சுமத்தி வருகின்றன என்பதே உண்மை.

சிறீ

## செட்டி நட்டம் ஊர் மேலே! எரிபொருள் விலையேற்றம் மக்கள் தலைகளில்

**2007 யூன் 30ம் திகதி முடிவில் பெற்றோலியம் கூட்டுத்தாபனத்திற்கு பல அரச நிறுவனங்கள் 3000 கோடி ரூபாய்கள் கடன் செலுத்த வேண்டியுள்ளது.**

| | | |
|---|---|---|
| இலங்கை மின்சாரசபை | – | 1710 கோடி |
| இலங்கை கடற்படை | – | 300 கோடி |
| இலங்கை இராணுவ- விமானப் படை | | |
| பொலிஸ் திணைக்களம் | | 12 கோடி |
| இலங்கை புகையிரத திணைக்களம் | – | 190 கோடி |
| இலங்கை போக்குவரத்துச் சபை | – | 12. 5 கோடி |
| சிறி லங்கா விமான சேவை | – | 61. 8 கோடி |
| ஐ. ஓ. சி | – | 14. 34 கோடி |
| ஷெல் கம்பனி | – | 37. 17 கோடி |
| மிகின் லங்கா விமானசேவை | – | 50 கோடி |
| ஏனைய நிறுவனங்கள் | – | 36 கோடி |

**இக்கடனை அறவிட முடியாத நிலையில் மக்களின் மீதே எரிபொருட்களின் விலையேற்றம் மீண்டும் மீண்டும் சுமத்தப்பட்டு வருகிறது. இது தான் மகிந்த சிந்தனை ஆட்சியின் லட்சணம்.**

# கண்டியில் கடற்படை எதற்கு? மீன் பிடிக்கவா? அல்லது விற்கவா?

கண்டி தெல்தோட்டையில் கடற்படையினரின் தாக்குதலி னால் மக்களில் பலர் காயமடைந்துள்ளனர். அங்கு அமைந்து ள்ள கடற்படை முகாமிலிருந்த வீரர்களே தாக்குதலில் ஈடுப ட்டதாக மக்கள் முறைப்பாடு செய்துள்ளனர். அத்துடன் அங் கிருந்து அக் கடற்படை முகாமை அகற்ற வேண்டுமென மக் கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

அக்கிராம மக்கள் தொடர்ந்து கடற்படை வீரர்களின் அச்சுறு த்தல்களுக்குள்ளாகி வருவதாகக் கிராம மக்கள் கூறுகின்ற னர். அக்கிராம மக்களில் ஏறக்குறைய ஒரு குடும்பத்தில் ஒருவ ராவது இராணுவத்தில் இருப்பதாக கூறப்படுகின்றது. அவர்க ளில் பெரும்பாலானோர் வடக்கு கிழக்கு யுத்தப் பிரதேசங்க ளில் இருக்கின்றனர். அவர்களின் வீடுகளில் இரவு நேரங்க ளில் சோதனை இடப்படுவதாகவும் பெண்கள் பெரும் அசௌ கரியங்களுக்கும் துன்புறுத்தல்களுக்கும் முகம்கொடுக்க வேண்டியிருப்பதாகவும் முறைப்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

சிங்கள கடற்படை வீரர்களிடமிருந்து சிங்களப் பெண் கள் தங்களைப் பாதுகாக்க வேண்டிய அவல நிலையில் உள்ளனர். மேற்குறிப்பிட்ட தாக்குதலினால் இராணுவ வீரர்களின் குடும் பங்கள் பாதிக்கப்பட்டுள்ளதாக அறிக்கை செய்யப்பட்டுள்ளது. பாதிக்கப்பட்டுள்ள குடும்பங்களுக்கும் கடற்படை வீரர்களு க்கு மிடையில் சமரசம் செய்வதற்கு பொலிஸார் தலையிட்ட போதும் பாதிக்கப்பட்டவர்களுக்கு நிவாரணம் கிடைக்கவில் லை. அத்துடன் அவர்கள் மீதான அச்சுறுத்தல்கள் குறைந்த பாடுமில்லை. கடற்படைமுகாம் அகற்றப்படவுமில்லை.

இது இராணுவமயமாக்கலினால் ஏற்படுகின்ற பிரச்சினை களில் ஒன்றாகும். வடக்கு கிழக்கில் மட்டுமன்றி அதற்கு வெளியிலும் அனைத்து மக்களினதும் இயல்பு வாழ்க்கை வெவ்வேறு வகையில் பாதிக்கப்படுகிறது. இதற்கு யுத்த சூழ்நி லையும், அவசரகால நிலைமையும் காரணமாகும். நாட்டின் சகல விடயங்களிலும் பாதுகாப்பு பிரிவினரின் மேலாண்மை நிலை நாட்டப்படுகின்ற போது ஜனநாயகமும் இயல்பு வாழ்க் கையும் பாதிக்கப்படுகிறது. இதன் அடுத்த கட்ட வளர்ச்சி ராணுவ ஆதிக்கமாகவும் சர்வாதிகாரமாகவும் மாற்றமடை யவே செய்யும் யுத்தம் அடிப்படையில் தமிழ் மக்களுக்கு எதிரா னது மட்டுமன்றி சிங்கள மக்களுக்கும் எதிரானதுமாகும்.

# மலையக ஆசிரியர்களுக்கும் சம்பளமில்லை

ஏப்ரல் மாதம் நியமனம் பெற்ற மலையக ஆசிரியர்களுக்கு கடந்த இரண்டு மாதங்களுக்கான சம்பளம் வழங்கப்படவில் லை. அந்நியமனங்களுக்கான சம்பளப் பணத்தை திறை சேரி ஒதுக்கித் தரவில்லை என்று கூறப்படுகிறது. 3179 மலையக ஆசிரியர்களுக்கான நியமனங்கள் வழங்குவதற்கான முடிவு 2003 ஆண்டு எடுக்கப்பட்டது. அதற்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டு போட்டிப் பரீட்சைகள் நடத்தப்பட்டன. அந்நியம னங்களுக்கு எதிராக வழக்குத்தொடுக்கப்பட்டதால் அந்நிய மனங்கள் இழுத்தடிக்கப்பட்டன. நீண்ட இழுபறிகள் குளறு படிகள் வற்புறுத்தல்கள் மத்தியில் கடந்த ஏப்ரல் மாதம் நியமன ங்கள் வழங்கப்பட்டன. நியமனம் பெற்றவர்கள் கற்பித்துக் கொண்டிருந்தாலும் அவர்களுக்கு இன்னுமே சம்பளம் வழங் கப்படவில்லை. இவ்வாறு சம்பளம் வழங்கப்படாமல் இருப்பதும் அவர்களின் அடிப்படை உரிமைகளை மீறுவது மட்டுமன்றி மலையகத் தமிழ் சமூகத்தை இழிவுபடுத் துகின்ற செயலுமா கும். ஏனெனில் இந் நியமனங்கள் மலைய கத் தமிழ் சமூகத்தி ற்கென விஷேடமாக வழங்கப்பட்டதாகும்.

சம்பளம் வழங்கப்படாமைக்கு எதிர்ப்பைத் தெரிவித்து சம்பளத்தை பெறுவது என்பது உரிமை என்ற வகையில் போராடுவதற்கு பதிலாக வழமைபோல் மலையகத் தலைவர் கள் எனப்படுபவர்கள் அரசாங்கத்துடன் பேச்சு வார்த்தை நடத்தி சம்பளத்தைப் பெற்றுத்தருவதாக ஊடகங்களுக்கு அறிக்கை களை விடுக்கின்றனர். இது வெறும் பம்பாத்தும் பிரசார நடவடிக்கையுமாகும்.

அரசாங்க நியமனங்களுக்கு அரசாங்கம் சம்பளத்தை வழங்க வேண்டும். அதிலிருந்து பின்வாங்க முடியாது. அரசாங்கச் சேவையிலுள்ளோருக்கு சம்பளத்தை வழங்காமல் இருப்பது அப்பட்டமான கையாலாகாத்தனமாகும். இந்நியமனங்களை பெற்றுக்கொள்ள பல விதங்களில் போராட்டங்கள் முன்னெடு க்கப்பட்டன. நீண்ட போராட்டங்களுக்குப் பின்னரே நியமனம் வழங்கப்பட்டது.

நியமனம் பெற்றவர்களுக்குரிய சம்பளத்தை பெறுவதற்கும் குரல் எழுப்பவும் போராடவும் வேண்டி இருக்கிறது. இந்த நிலைமையில் தோட்டத் தொழிலாளர் சமத்துவமாக நடத்தப் படுவதாகக் கூறப்படுவதில் உண்மை இருக்கிறதா? நியமனம் வழங்குவதில் இரண்டாம் தரப் பார்வை கொண்ட பேரின வாத முதலாளித்துவ அரசாங்கம் நியமனங்கள் வழங்கிய பின்பும் அவர்களுக்குரிய சம்பளத்தை வழங்காது இருப்பது மலையக ஆசிரியர்களை இரண்டாம் தரமாகப் பார்ப்பதன் விளைவயா கும்.

## வாழ்க்கை செலவின்
1ம் பக்க தொடர்ச்சி

சூழலே உலகச் சந்தையில் அவற்றின் விலையேற்றங்களாகும்.

எனவே இன்று இலங்கை மக்கள் அனுபவிக்கும் தடுக்க முடியாதுள்ள வாழ்க்கைச் செலவின் அதிகரிப்புக்கு உள் நாட்டு யுத்தமும் அமெரிக்காவின் ஆக்கிரமிப்பு யுத்தங்களும் பிரதான காரணியாகின்றது. அவ்வாறே உலகமயமாதலின் கீழான தாராள இறக்குமதியும் உள்நாட்டு உற்பத்திச் சீர்குலைவும் வாழ்க்கைச் செலவை அதிகரித்துச் செல்வதற்கான அடிப்படைகளாக அமைந்துள்ளன.

இவற்றை மகிந்த சிந்தனை அரசாங்கத்தால் தடுத்து நிறுத்த இயலாது. வெறும் ஏமாற்று வேலைகளையும் பிரசாரங்களையும் மட்டுமே செய்ய முடியும். அதே வேளை ஆட்சிக்கு வரத்துடிக்கும் ரணில் பதவிக்கு வந்தாலும் இந் நிலையை மாற்றி மக்களுக்கு ஆறு தல் வழங்க முடியாது.

வாழ்க்கைச் செலவைத் தடுத்து நிறுத்திக் கட்டுப் படுத்த இரண்டு வழிமுறைகள் மட்டுமே உண்டு. ஒன்று யுத்தத்தை நிறுத்தி பேச்சுவார்த்தை மூலம் அரசியல் தீர்வும் சமாதான சூழலும் உருவாக்கப்படல் வேண்டும். இரண்டு அதேபோன்று உலகமயமாத லைத் தடுத்து நிறுத்தி தாராள இறக்குமதியைக் கட்டுப்படுத்தி உள்ளூர் உற்பத்தியை திட்டமிட்டு முன்னெடுக்க வேண்டும். இவை இரண்டையும் செய்ய மகிந்தவோ ரணிலோ தயாராக இல்லை என்பதே காணக் கிடக்கும் உண்மையாகும்.

ஆதலால் மக்கள் தான் இதற்கான மாற்று சிந்த னைகள் மூலம் அரசியல் செயற்பாட்டிற்கு முன்வரல் வேண்டும்.

www.padippakam.com
நன்றி - நூலகத்திட்டம்



# இரத்தினபுரி கேகாலை களுத்துறை மாவட்டங்களில் மலையக மக்களின் சமூக கல்விப் பிரச்சினைகள்

-சடாயு-

மலையகத் தேசிய இனமானது மத்திய மாகாணத்தில் செறிந்து வாழும் அதேவேளை ஏனைய மாகாணங்களில் சிதறி வாழ்ந்து வருவதனை நாம் அறிவோம். இதில் கேகாலை, இரத்தினபுரி, களுத்துறை போன்ற மாவட்டங்களில் வாழ்ந்து வரும் பெருந்தோட்ட மக்களது வாழ்க்கையானது மிக இருண்ட நிலையில் இன்றும் இருந்து வருவது கவலைக்கிடமான தாகும். இப்பிரதேச மக்கள் பெரும்பான்மை இனத்தவர்களின் இனவாத அடாவடித்தனங்களுக்கு அவ்வப் போது ஆட்பட்டு வருபவர்களாக வாழ்வு நடத்துகின்றனர். ஆரம்ப காலப் பண்ணை அடிமை முறையின் எச்ச சொச் சங்களாக வாழ்ந்து கழிக்கும் ஒரு கூட்டத்தினை சுதந்திரம், ஜனநா யகம், மனித உரிமை என உரத்து பேசிவரும் காலச் சூழலில் காணக்கிடைத்திருப்பது முதலாளித்துவ ஜனநாய கத்தில் ஒன்றும் வியப்பான விடயமல்ல. என்றாலும் கூட இந்த மட்டமான வாழ்க்கைப் போக்கு இன்னும் பல ஆண்டுகளுக்கு தொடர்வதற்கான பாதையினை நமது பாராளுமன்ற அரசி யல் பெருச்சாளிகள் அமைத்து விட்டிருக்கிறார்கள்.

இங்கே சிறு தோட்ட உரிமையாளர்களாக விளங்கும் பெரும்பான்மை இனத்தவர்களுள் மிகப் பெரும்பான்மையானோர் தோட்டக் காணிகளை அபகரித்து உரிமையாக்கிக் கொள்ளும் போதெல்லாம் தோட்ட நிர்வாகங்களும் மக்கள் பாதுகாவலர்களாக விளங்கும் பொலிசாரும் கண்டு கொள்வதில்லை. இதே விடயத்தை தோட்டத்தொழிலாளியான ஒரு தமிழ்க் குடிமகன் செய்து விட்டால் வேலையிலிருந்து இடைநிறுத்துவதும் பெரும்பான்மையினக் காடையர்களால் தாக்கப்படுவதும் தொடர்ந்த வண்ணமே உள்ளன. இதன் கொரூரத்தை சப்ரக முவ மேல்மாகாண மலையக மக்கள் நன்றாகவே அனுபவித்து வருகிறார்கள். இது ஒரு புறமிருக்க விழாக்கள், பண்டிகைகள், வீடுகளில் இடம் பெறும் விசேட கொண்டாட்டங்களின் (கல்யாணம், பிறந்தநாள், பூப்புனித நீராட்டு விழா) போதெல்லாம் தங்களது வீரசாகசங்களை காடையர்கள் அப்பாவி இளைஞர்கள் மீது காட்டுவது மிகச் சாதாரணமான ஒன்றாகிவிட்டது. இவ்வாறான சந்தர்ப்பங்களில் ஆய்க்கினை தாங்காது திருப்பித் தாக்குகின்றபோது பெரும்பான்மை இன காடையர்கள் கூட்டமாக வந்து லயன் குடியிருப்புகளை கொளுத்துவதும், மக்களைத் தாக்குவதும் உடைமைகளை சூறையாடுவதும் மிகச் சாதாரணமாகி விட்டது. இவ் வாறான சந்தர்ப்பங்களில் பெரும்பான்மை இனச்சார்பாகவே பொலிசாரும் அரசியல் தலைவர்களும் இருந்திருப்பதனைக் கடந்த காலச் சூழ்நிலைகள் தெளிவாகக் காட்டுகின்றன. இந்த இனவாத கொதிப்பினை நாம் பம்பேகம, பாம்காடன், தெல் வலை, மடலகம, ஓபாத, மியஎவிற்ற, வெல்லந்துற, நிவித்திகல போன்ற தோட்டங்களில் காணக்கிடைத்த உண் மைகளாகும். இங்கு மக்கள் அவலப்பட்ட போதெல்லாம் நமது தலைவர்கள் எனப்பட்டவர்கள் அரசபங்காளிகளாகவே இருந்திருக்கின்றனர்.

இப்படியான ஒடுக்குமுறை ஒருபுறமிருக்க கசிப்பு, கள் போன்ற மதுபாவனைக்கு அடிமையாளவர்களின் வரிசையை காலையிலும் மாலையிலும் காணக்கிடைப்பது மட்டுமா? கசிப்பு "மாத்தயா" வின் சார்பாகச் சிறைக் கூண்டு செல்பவர்களாகவும் இம் மக்களின் கூட்டம் இருந்து வருகின்றது. இந்த நிலை தற்போது வளர்ந்து வரும் இளைஞர்களிடத்திலும் தொடர்ந்தபடியுள்ளது. மது ஒழிப்பு பற்றிய வழமையான முழக்கங்கள் ஓங்கி ஒலித்ததோடு மேலும் வடிகட்டி ஊற்றி வளர்க்கும் வாய்ப்பினைத் தந்துவிட்டது என்பதை மட்டும் சொல்லலாம். இங்கு நமது சமூக மீட்சிக்கு தேசிய பாடசாலையோ, தோட்டங்களுக்கு நூலகமோ வழங்குவதை விடுத்து ஊருக்கு ஊர் சந்திக்கு சந்தி சாராயக் கடை திறக்கும் அறிவு ஜீவிகளாக நமது அரசியல் தொழிற்சங்க தலைவர்கள் எனப் பட்டவர்கள் இருக்கிறார்கள். என்பதுதான் வெட்கக் கேடா னது.

இந்தப் பின்னணியில் வாழ்வு நடத்தும் எமது மக்களின் விழிப்பு நோக்கிய பயணத்துக்கு கல்வியே அடிப்படையான அம்சம் என்பது மறுக்கமுடியாத உண்மையாகும். மிகமிகப் பின்தங்கிய கல்வி நிலை கொண்ட இம்மாவட்ட மாணவர்களுக்கென எத்தனை தேசிய பாடசாலைகள், எத்தனை மகா வித்தியா லாயங்கள். உண்டு என பதனை விரல் விட்டு எண்ணிவிடலாம். இத்தகைய கஷ்டமான சூழலிலும் தங்களது பிள்ளைகளை கல்விக்காக அனுப்பும் பெற்றார்கள் இல்லாமல் இல்லை. தோட்டப்புறப்பாடசாலைகளில் சாதாரண தர சித்தி எய்தும் மாணவர்கள் உயர் கல்விக்காக (க.பொ.உ) நகர் புறங்களில் இருக்கின்ற பாடசாலைகளுக்கே செல்கின்றனர். இத்தகைய கடின முயற்சிக்கு மத்தியில் கற்க நுழையும் பாடசாலைகளில் புகுந்து விளையாடும் அரசியல் தலையீடுகள் கொஞ்சமானவையல்ல. இவற்றில் சப்பிரகமுவ மாகாண பாடசாலைகளே மிக மோசமாகப் பாதிக்கப்பட்டு வருகின்றன. இங்கு பெரும்பான்மை இன அரசியல் வாதிகளை விட சிறுபான்மை இனப் காப்பாளராக மாகாணசபைக்குள் புகுந்திருக்கும் ஒரு இ.தொ.கா மாகாணசபை உறுப்பினரின் தலையீடு இச் சமூக மக்களின் கல்வியில் பாரிய எதிர் தாக்கத்தினை விளைவித்து வருகிறது. தங்களுக்கு மனக்கசப்பான அதிபர்கள் சமூக அக்கறையுடன் வேலை செய்பவர்களாக இருப்பினும் அவர்களை தூக்கி எறிகின்ற நிலை பல வருடங்களாகத் தொடர்கின்றது. இவற்றுக்கு உடந்தையாகி சமூக நாசஞ் செய்யும் நச்சுப் பாம்புகளாக நமது கல்விப்பணிப்பாளர்கள் இருக்கிறார்கள் என்பது இன்னொரு உலகம்.

சமூக அக்கறை, கல்வியறிவு, தூரநோக்கு இல்லாத நமது தெரிவானர்கள் என்போரது சமூகப்பணி இதுதான் என்பதை தெளிவாகவே காட்டிவிடுகின்றனர். இதற்கு எதிரான மக்கள் எழுச்சி மிக அவசர அவசியமானதாகும்.

கடந்த பல வருடங்களாக கல்வி நிலையில் வீழ்ச்சி தொடர்பாக அதிபர்கள் ஆசியரியர் பற்றாக்குறையினைக் கூறி வந்தார்கள். இன்று அந்த ஆளணி நிரப்பப்பட்டுள்ளது. என்றாலும் எத்தனை அதிபர்கள் அவர்கள் சரியான முறையில் வழி நடத்துகிறார்கள் என்பது சிந்திக்க வேண்டிய விடயமாகும். இப்பிரதேசங்களில் கடமையாற்றும் அதிபர்களில் பலர் பத்திரிகை நிருபர்களாக உள்ளனர். இது வரவேற்கத்தக்கது. எப்போதெனில் உரிய பிரச்சினைகளை பட்டவர்த்தனமாக எழு துகின்ற போதும் உண்மைகளை வெளிக்கொனரும்போதுமாகும். இருப்பினும் இவர்கள் தங்களது எழுத்தை தங்களது நாற்காலிகள் நகர்ந்துவிடக் கூடாதென்பதற்காக அதிகாரிகளையும், அரசியலாளர்களையும் கௌரவப்படுத்தும் பிச்சை பிழைப்புக் குப் பயன்படுத்துகின்றனர். இது மாத்திரமன்றி பாடசாலைக் காலங்களைப் பத்திரிகைச் செய்தி தேடுவதி லும் கூட்டங்கள் நடைபெறும் இடங்களிலும் செலவிடுவது வேதனை அளிப்பதாக இருக்கிறது. (இங்கு நேர்மையாக கடமை புரியும் ஆசிரியர்கள் அடங்கவில்லை) இது இப்பிரதேச கல்வி சீர்கேட் டுக்கு நல்லதொரு எடுத்துக் காட்டு.

தொடர்ச்சி 10ம் பக்கம்

# தெதுரு ஓயா நீர்த்தேக்கத்திட்டத்திற்கு எதிராக மக்கள் போராட்டம்



அபிவிருத்தி என்ற பேரில் அரசாங்கம் மேற்கொள்ளுகின்ற இன்னொரு அழிவான திட்டமே தெதுரு ஓயா தண்ணீர் மறிப்புத் திட்டம். இலங்கையின் 5வது பெரிய ஆறான தெதுரு ஓயாவை இடைமறித்து நீரை தேக்கி வைத்து நீர்ப்பாசனத் திட்டத்திற்கு பயன்படுத்துவது என்பதே அத்திட்டத்தின் நோக்கமாகும். விவசாய செய்கைக்காக நீர்ப்பாசனத்திட்டங்கள் அவசியம். ஆனால் ஏற்கனவே அபிவிருத்தி செய்யப்பட்டுள்ள பயிர் நிலம், கிராமங்கள் போன்றவற்றை நீரில் மூழ்கடிக்கடிதால் ஏற்படும் மக்களின் இடப்பெயர்வு, சொத்தழிவு, இயற்கை சூழல் அழிவு என்பன பாரியதாக இருக்கும்.

இந்நீர்த்தேக்கம் வாரியப்பொல ராஜாங்கனை பகுதியில் அமையவுள்ளது. தெதுரு ஓயாவின் வலது பக்கத்தில் 30 கிலோமீற்றர் சுற்றளவிலும் இடதுபக்கம் 40 கிலோ மீற்றர் சுற்றளவிலும் அணை கட்டப்படவுள்ளது. இதனால் 5 ஆயிரம் ஏக்கர் பயிர்ச்செய்யப்படும் நிலம் நீருக்குள் மூழ்கும். அதில் 1535 ஏக்கர் நெற்காணிகளாகும். அத்துடன் தென்னை, வாழை மரக்கறி மரமுந்திரிகை போன்றன பயிர்கள் செய்யப்படுகின்றன. கோணேகம, மலகாண, பொத்துவெவ, கிவுல, மஸ்பொத்த, கித்துள்வேவ, வல்பலுவ, தம்பராவ, கரம்ப ஹெதிகம, திவுல்கஸ்பிட்டிய, வேறஹெறயாகம, நிந்தகம ஆகிய கிராமங்களில் வசிக்கும் ஆயிரத்திற்கு மேற்பட்ட விவசாய குடும்பங்கள் இடம்பெயர வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.

இவர்கள் ஆணமடுவ, ராஜாங்களைப் பேரினவாத ஆட்சியில் சிங்களக்கிராமங்களை விழுங்கப்படுகின்றன. சிங்கள விவசாயிகள் விழிப்பது தவிர்க்க முடியாது. பகுதியில் குடியேற்றப்படுவர் என்றும் அவர்களுக்குரிய நட்ட ஈடு வழங்கப்படும் என்றும் கூறப்பட்ட போதிலும் அரசாங்கம் தீர்மானிக்கும். நட்டஈடுத் தொகை போதுமானதல்ல. அத்துடன் அவர்கள் பாரம்பரியமாகக் கட்டியெழுப்பப்பட்ட கிராமிய பொருளாதார பண்பாட்டு சூழலை விட்டு மக்கள் வெளியேற விரும்பவில்லை.

இத்திட்டம் 1960 ஆம் ஆண்டில் முன்மொழியப்பட்டது. மக்களின் எதிர்ப்பினால் கைவிடப்பட்டிருந்தது. பின்பு 2000ம் ஆண்டில் ஜே.வி. பியின் அநுரகுமார திசாநாயக்க நீர்ப்பாசன அமைச்சராக செயற்பட்டபோது இத்திட்ட யோசனை தூசு தட்டி எடுக்கப்பட்டது. தற்போதைய அமைச்சர் சமல் ராஜபக்ச அதற்கு அடிக்கல் நாட்டச் சென்றபோது ஆத்திரமடைந்த மக்கள் அமைச்சரின் வாகன அணி மீது தாக்குதல் நடத்தினர். இச்சம்பவம் கடந்த யூன் மாதம் 11 ஆம் திகதி நடைபெற்றது. இச்சம்பவத்துடன் தொடர்புடையவர்கள் என்ற சந்தேகத்தின் பேரில் 21 பேர் கைது செய்யப்பட்டு அரச சொத்துகளுக்கு சேதம் விளைவித்தனர் என்ற குற்றச்சாட்டின் மூலம் விளக்க மறியலில் வைக்கப்பட்டனர்.

இதனைச் சாதகமாகப்பயன்படுத்திக் கொண்டு அரசாங்கம் அத்திட்டத்தை நிறைவேற்றுவதற்கு பல வழிகளிலும் முயற்சிகளை எடுத்து வருகிறது. அப்பகுதியிலுள்ள அரசாங்கப் பிரதிநிதிகள் அக்கிராமத்திலுள்ள சிலரை அழைத்துச் சென்று ஜனாதிபதி மஹிந்த ராஜபக்சவுடன் பேச்சுவார்த்தை நடத்தியுள்ளனர். அப்பேச்சுவார்த்தையில் விளக்கமறியலிலுள்ளவர்களை விடுவிப்பது தொடர்பாக பிரஸ்தாபிக்கப்பட்டுள்ளது. ஆனால் அரசாங்கம் எவ்வகையிலும் அத்திட்டத்தை கைவிடப் போவதில்லை என்பது திட்ட வட்டமாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. பேச்சுவார்த்தைக்கு சென்றவர்கள் பாதிக்கப்பட்டவர்களுக்கு நட்ட ஈடு வழங்க வேண்டுமென்றும் விளக்க மறியலில் வைக்கப்பட்டுள்ளவர்கள் விடுதலை செய்யப்பட வேண்டும். என்றும் கேட்டுக் கொண்டதாகத் தெரிகிறது. அந்த அடிப்படையில் எதிர்ப்பு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படமாட்டாது என்று உறுதியளிக்கப்பட்டதாகவும் தெரிகிறது.

இந்த பேச்சுவார்த்தையை பாதிப்பிற்குள்ளாகும் அனைவரும் ஏற்றுக் கொள்ளவில்லை. குறிப்பாக விளக்கமறியலில்வைக்கப்பட்டுள்ளவர்களும் ஏற்றுக் கொள்ளவில்லை. அவர்கள் இத்திட்டம் முற்றாக கைவிடப்படவேண்டும் என்பதிலேயே உறுதியாக இருக்கின்றனர்.

21 பேருக்கும் எதிராக தாக்கல் செய்யப்பட்டுள்ள வழக்கை 'துரும்பாக' வைத்துக் கொண்டு இத்திட்டத்தை எதிர்க்கும் விவசாயிகள் அச்சுறுத்தப்படுகின்றனர். எதிர்ப்பு போராட்டத்திற்கு எதிராகவும் அவ்வழக்கு எடுத்துக் காட்டப்படுகிறது. யூன் மாதம் 11 ஆம் திகதி இடம்பெற்ற மக்கள் எதிர்ப்புச் சம்பவத்தை அடுத்து அப்பகுதியில் விசாரணைகள் என்ற பேரில் பொலீஸ் பயபீதி ஏற்படுத்தப்பட்டது. கைது செய்யப் பட்டவர்கள் அனைவரும் ஏழை விவசாயிகள் என்பதால் அவர்கள் குடும்பங்கள் நாளாந்த தேவைகளை பூர்த்தி செய்து கொள்ள முடியாத நிலைக்குத் தள்ளப்படுகின்றனர். இதனால் எதிர்ப்பு நடவடிக்கைகள் பின்னடைவைச் சந்தித்து ள்ளன.

அபிவிருத்தி என்ற பேரிலான நீர்மின், நீர்ப்பாசன திட்டங்களை மக்கள் எதிர்த்துவருகின்றனர். அவ்வெதிர்ப்பு நடவடிக்கைகளை முறியடிக்க அரசாங்கம் பலவிதங்களிலும் செய்யப்பட்டு வருகிறது. மக்களின் எதிர்ப்பு போராட்டங்களை அரசாங்கத்திற்கு சார்பானவர்களே கையில் எடுத்து அவற்றை காட்டிக்கொடுத்து முறியடிக்கும் நடவடிக்கைகளை மிகவும் தந்திரமான முறையில் செய்து வருகின்றனர்.

நாட்டில் தற்போதும் அமுலில் இருக்கும் அவசரகாலச்சட்ட ஒழுங்கு விதிகள் நிலவும் யுத்த சூழ்நிலை என்பனவும் மக்களின் நியாயமான கோரிக்கைகளுக்கும் போராட்டங்களுக்கு எதிராக பாவிக்கப்படுகின்றன.

வெகுஜனப்போராட்டங்களை சரியான அரசியல் தலைமைத்துவத்திற்கு பதிலாக பிற்போக்கு சந்தர்ப்பவாத தலைமைத்துவங்கள் கையெடுப்பதால் வெகுஜனப்போராட்டங்களுக்கு பின்னடைவு ஏற்படுகின்றன. மக்கள் விரகதியடைகின்றனர். அரச சார்பற்ற நிறுவனங்கள் முன்னெடுக்கின்ற போராட்டங்களும் அடக்குமுறையாளர்களுக்கு சாதகமான வழிகளிலேயே முடிவுறுத்தப்படுகின்றன. எச் சந்தர்ப்பத்திலும் விட்டுக் கொடுக்காத வெகுஜனப் போராட்டத் தலைமையும் மக்களது உறுதியான ஆதரவுமே இது போன்ற அழிவுகரமான மக் கள் விரோதத் திட்டங்களை தடுத்து நிறுத்தக் கூடியனவாகும்.

தயா

# கிழக்கின் அவலமும் அட்டகாசமும்

தொப்பிகல என்று சிங்களத்தில் அழைக்கப்படும் குடும்பிமலையிலிருந்து விடுதலைப் புலிகள் வெளியேற்றப்பட்டதை ஒரு மகத்தான இராணுவ வெற்றியாக இலங்கை அரசாங்கம் கடந்த மாதம் கொண்டாடியது. மகிந்த ராஜபக்ஷ சனாதிப தியாகப் பொறுப்பேற்க முன்பிருந்தே சீர்குலையத் தொடங்கிய போர் நிறுத்த உடன்படிக்கை அவர் பொறுப்பேற்ற சில மாதங்களுள் பிரகடனஞ் செய்யப்படாத ஒரு போராக உருவெடுத்தது. இந்த நிலைமை உருவானதற்கு இலங்கை அரசபடைத் தரப்பிலும் விடுதலைப் புலிகளின் தரப்பிலும் நடைபெற்ற சீண்டுதல்களும் அமெரிக்க ஆதரவுடன் விடுதலைப்புலிகள் இயக்கத்தில் ஏற்படுத்தப்பட்ட பிளவின் பின்விளைவான மோதல்களும் பலவேறு அராஜகங்களும் பொறுப்பு. எனினும் சுனாமி அனர்த்தத்தாலும் கிழக்கில் ஏற்பட்ட பிளவாலும் விடுதலைப் புலிகள் பலவீனப்பட்டுள்ள நிலையைத் தங்களுக்குச் சாதகமாகப் பயன்படுத்தி விடுதலைப்புலிகளின் படைப்பலத்தையும் கட்டுப்பாட்டுப் பிரதேசத்தையும் இயன்றளவுக்குக் குறைப்பது அரசின் நோக்கமாகும். அத்துடன் ராணுவ வலிமையின் மூலம் வடக்கு கிழக்கில் இயன்றளவு பெரிய பிரதேசத்தைத் தனது கட்டுப்பாட்டுக்குட் கொண்டு வருவதே அரசாங்கத் தில் ஆதிக்கஞ் செலுத்துகிற பேரினவாதிகளதும் முப்படைத் தலைமைகளதும் சனாதிபதியின் பேரினவாத நேச சக்திகளதும் நோக்கமாகும். இதனை மாவிலாறு தொடர்பான மோதல் முதலாகக் குடும்பிமலையைக் கைப்பற்றியது வரையிலான நிகழ்வுகள் தெளிவாக உணர்த்தியுள்ளன.

போர் நிறுத்த உடன்படிக்கை இன்னமும் நடைமுறையில் உள்ளது என்று இரு தரப்பினரும் போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவும் நோர்வேயும் சர்வதேச சமூகமும் சொல்லுகின்றன. ஆனால் கடந்த பதினைந்து மாதங்கட்குள் இடம் பெற்ற பொருட்சேதமும் இடப்பெயர்வும் போர்க்காலத்தில் சராசரியாக அதே அளவு கால இடைவெளியில் நடந்ததை விட அதிகமாகும். யாழ்ப்பாணம் படையினராற் கைப்பற்றப்பட்டபோது விடுதலைப் புலிகளின் வற்புறுத்தலின் பேரில் நடந்த தற்காலிக இடப்பெயர்வை விட்டால் மட்டக்களப்பு மாவட்டத்தில் ஏற்பட்ட இடப் பெயர்வு போல எதுவும் வட க்கு- கிழக்கில் சென்ற கால் நூற்றாண்டுக் காலத்தில் நட க்கவில்லை.

ஒவ்வொரு ராணுவ வெற்றியையும் அடுத்துத் தமிழ்ப் பிரதேசங்கள் சூனியப் பிரதேசங்களாக்கப்பட்டுத் தமிழ் மக்கள் மீளக் குடியேற இயலாத அல்லது மீளக்குடியேற அஞ்சுகிற விதமாக நிலைமைகள் மாற்றப்பட்டுள்ளன. இடம்பெயர்ந்த மக்களின் பெரும்பாலானவர்கள் அகதி முகாங்களிலும் பிறர் வீடுகளிலும் தங்கியிருக்கின்றனர். பெருந்தொகையானோர் உயிரைப் பணயம் வைத்து இந்தியாவுக்குப் போய்த் தஞ்சம டைந்துள்ளனர். மீளக் குடியேற்றப்பட்டோர் அடிப்படை வசதி கள் எதுவும் இல்லாமலும் வழமையான தொழில்கள் மூல மான பிழைப்புக்கு வழி இல்லாமலும் அல்லற்படுகின்றனர். அதேவேளை அரசாங்கம் திருகோணமலை மாவட்டத்தில் சம்பூர்- மூதூர் கிழக்கு



பகுதியை அதியுயர் பாதுகாப்பு வலயமா க்கியதும் போதாமல் அங்கே இந்திய ஆதரவுடன் அனல் மின் நிலையம் ஒன்றை நிறுவவும் சுதந்திர வர்த்தக வலயம் ஒன்றை அமைக்கவும் திட்டமிடுகிறது. ராணுவக் கட்டுப் பாட்டுக்குள்ளும் தனக்கு உடன்பாடான தமிழ் ஆயுதக் குழுக்களது ஆதிக்கத்துக்குள்ளும் கிழக்கின் தமிழ் மக்கள் இருக்கிற நிலைமையைச் சாதகமாக்கிப் பிரித்தெடுக்கப்பட்ட கிழக்கு மாகாண சபைக்குத் தேர்தல் நடத்தவும் அரசு முன்னிற்கிறது. அங்கு அமையக் கூடிய பெரும்பான்மை வலிமையைப் பயன்படுத்திக் கிழக்கைத் தமிழ்- முஸ்லீம் மக்களிடமிருந்து பறித்தெடுக்கிற திட்டங்களை நடைமுறைப் படுத்தவும் அரசு திட்டமிடுகிறது என்ற குற்றச்சாட்டு மிகவும் நம்பகமானது. திருகோணமலை நகரமும் துறைமுகத்தை அண்டிய பகுதிகளும் குறிப்பாக இலக்கு வைக்கப்படுகின்றன என்பதற்கான ஆதாரங்கள் தெளிவாகவே தெரிகின்றன.



மட்டக்களப்பு- அம்பாறை மாவட்டங்களில் சுனாமியின் அவலத்திலிருந்து மக்கள் மீள முன்னரே மிலேச்சத்தனமான தாக்குதல்களால் மக்கள் மேலும் அல்லறப்பட்டு அவதிக்குள்ளா கித் தவிக்கிற சூழ்நிலையில் கிழக்கைக் கைப்பற்றியதை விமரிசையாகக் கொண்டாடியதன் மூலம் அரசாங்கம் தனது அரசியல் வறுமையையும் மனிதாபிமானமின்மையையும் பிரகட னம் செய்து கொண்டது. எனினும் யாழ்ப்பாணத்தை படையினர் 1995ல் கைப்பற்றியபோது தென்னிலங்கையில் சிங்கள மக்கள் பலர் அதைக் கொண்டாடியது போல இம்முறை நடக்கவில்லை. அரசாங்க வற்புறுத்தலின் பேரில் அரசாங்கக் கட்டிடங்களில் 19.07.2007 அன்று தேசியக் கொடி ஏற்பட்டது. ஆனால் மக்கள் மத்தியில் உற்சாகம் காணப்பட வில்லை.

விடுதலைப்புலிகளுக்கு ஆதரவானவர்களாக ஐந்து வருடங்கள் முன்பு நாடகமாடிய மலையக மக்கள் முன்ன ணியின் தலைவரும் தமிழ் மக்களுக்காகக் குரல் கொடுப்ப தாக உறுதி மொழி வழங்கிய இ.தொ.கா தலைவரும் வெற்றி விழாவில் பங்குபற்றியதன் மூலம் தங்களது சந்தர்ப்பவாதத்தை மீண்டுமொரு முறை அம்பலப்படுத்தினர். விழாவில் பங்கேற்ற பின்பு அதற்கு மக்கள் மத்தியில் ஆதரவில்லாததைக் கண்டு ரவூஃப்

**-மோகன்-**

ஹக்கீம் தன்னை வற்புறுத்தியதாலேயே பங்கு பற்றிய தாகச் சமாதானம் கூறியிருக்கிறார். அதே நேரம் யூ. என்.பி. விடுதலைப் புலிகளிடமிருந்து அப் பிரதேசம் ராணுவத்தினரால் போராடி வெல்லப்படவில்லை என்றும் அரசாங்கம் விடுதலைப் புலிகள் தப்பிச் செல்ல வசதி செய்தது என்றும் இவையெ ல்லாம் விடுதலைப்புலிகட்கு 2005 சனாதிபதித் தேர்தலுக்கு முன்பு வழஙகப்பட்ட லஞ்சத் தொகையோடு சேர்ந்து செய்ய ப்பட்ட உடன்பாடு என்றும் விமர்சித்து வெற்றி விழாவைப் பகிஷ்கரித்தது.

கடந்த சில மாதங்களாக மட்டக்களப்பு மாவட்டத் தமிழ் மக்கள் பட்ட அல்லல்கள் பற்றி யூ. என்.பி. தலைவர்கள் அதிகம் பேசவுமில்லை. அது பற்றிக் கவலைப்படவும் இல்லை. அவர்களுடைய விமர்சனங்கள் அரசாங்கத்தின் ராணுவ அணுகுமுறை பற்றியும் அதற்கான செலவு பற்றியும் கவனங் காட்டும் அளவில் அற்பப் பங்கேனும் அப்பாவி மக்கள் படுகிறபாடு பற்றிக் கவலை காட்டவில்லை என்பதை நாம் மறக்கலாகாது.

தமிழ்மக்களுக்கு அனுதாபமானவர்கள் என்கிற விதமாக நாடகமாடிவந்த பெரிய இடத்து என்.ஜி.ஓ பிரமுகர்கள் சிலர் கிழக்கின் அவலம் பற்றி மிகவும் அடக்கி வாசித்ததுடன் அரசாங்கத்தின் போர் நடவடிக்கையால் ஏற்பட்ட பாதிப்புக்கள் காணமற் போக்கப்பட்டோர் தொகை போன்ற விவரங்களை எல்லாம் தங்களுக்கு நிதி உதவி வழங்கும் மேலைநாட்டுத் தூதரகப் பிரதிநிதிகட்குக் குறைத்துக் காட்டி வந்துள்ளனர். ஆனாலும் அவர்களுக்கு இன்னமும் நமது தமிழ் நாளேடுகள் பெரும் முக்கியம் வழங்குகின்றன. இந்தச் சமாதான என். ஜி. ஓ முதலைகளிற் பெரிய முதலையான ஒருவர் தனக்கு வழங்கிக் கொள்ளும் கோடிக்கணக்கான ரூபா வருடாந்த ஊதியம் போதாமல் வேறு சுருட்டல்களிலும் ஈடுபட்ட விடயம் அரசாங்கச் சார்பற்ற ஆங்கில வார ஏடொன்றில் முற்றாக அம்பலமாக்கப்பட்ட பின்பும் தமிழ்ப் பத்திரிகைகள் அதைக் கண்டு கொள்ளவில்லை.

சர்வதேச சமூகம் தமிழ் மக்களைப் பற்றி அக்கறையற்றிருக்கிறது என்ற உண்மையும் இந்தியா தமிழர்களை வெறும் பகடைக் காய்களாகவே பயன்படுத்தி வந்துள்ளது என்ற உண்மையும் எல்லாருக்கும் தெரிய வந்த பின்பும் அவை தமிழ் மக்களுக்கு எதிரிகள் என்ற உண்மையை எடுத்துச் சொல்ல ஒரு தமிழ்த் தேசியத் தலைமையும் ஆயத்தமாக இல்லை. தமிழ் மக்கள் தொடர்ந்தும் மேலை முதலாளிய நாடுகளது ஆதரவையும் இந்தியாவில் ஏற்படக்கூடிய மனமா ற்றத்தையும் நம்பி ஏமாறுவதைத்தான் இவர்கள் எல்லாரும் விரும்புகிறார்களா? சீனாவையும் பாக்கிஸ்தானையும் தமிழ் மக்களின் எதிரிகளாகக் காட்டுவதில் தீவிரமாக உள்ள தமிழ்த் தேசிய வாதிகள் பேரினவாத ஜே.வி.பியை இடதுசாரி ஏகாதிபத்திய விரோதக் கட்சியாகக் காட்டுவதற்கும் தயங்குவதில்லை. அதேவேளை கடந்த ஒரு வருடக் காலமாகத் தமிழ் மக்களுக்குப் பேரழிவைத் தந்த விமானங்களும் குண்டுகளும் எறிகணைகளும் ஏவும் இயந்திரங்களும் எங்கிருந்து எவருடைய ஆசிகளுடன் வழங்கப்பட்டன என்பதைத் தமிழ் மக்களுக்கு எடுத்துச் சொல்ல ஏன் இவர்கள் தயங்குகிறார்கள்?

இலங்கைத் தீவைத் தம் வசமாக்க முயலுகிற பிரதான சக்திகள் இந்தியாவும் அமெரிக்காவும் அடுத்த படியாக யப்பானும் என்கிற உண்மையைச் சொன்னால் இவர்களுக்கு என்ன நட்டம்? இந்த நாட்டின் சுயாதீனத்தைப் பேணாமல் தமிழ் மக்களின் சுயநிர்ணயத்தை வெல்ல இயலாது என்பதை நாம் மறக்கலாகாது.

கிழக்கின் அவலத்திற்குக் காரணமான ஒரு சமரின் வெற்றியைக் கொண்டாடிய போது சனாதிபதி ஏகாதிபத்திய நாடுகளைக் கடிந்து கொண்டதைப் பற்றித் தமிழ்த் தேசியவாதிகள் திருப்திப்பட்டுக் கொண்டுள்ளனர். ஆனால் அவர் இடமறிந்து தான் அவ்வாறு பேசினார் என்பது ஏகாதிபத்திய எசமானர்களுக்குத் தெரியும். அவர்களுக்கு வேண்டிய இடங்களில் அவர்களது உலகமயமாதல் திட்டத்திற்கு சனாதிபதி இடையூறாக இருக்கமாட்டார் என்பதை அவர்கள் நன்கு அறிவார்கள். நாம் அதை அறியாமல் இருப்பது தான் தவறானது.

இலங்கையில் ஒரு ஆட்சி மாற்றத்தை அமெரிக்கா ஏற்படுத்துவதால் தமிழ் மக்களுக்கு எந்த விதமான நன்மையும் வராது

## மக்களைத் திசை திருப்பும் பேரினவாத வெற்றி விழா

என்பதில் நாம் மிகவும் தெளிவாக இருக்க வேண்டும். மகிந்த ராஜபக்ஷ ஆட்சி இலங்கை இதுவரை கண்ட ஆட்சிகளுள் மிக மோசமான ஒரு ஆட்சியாகவே கருதப்படலாமாயினும் அதன் இடத்தில் இராணுவமோ யூ.என்.பியோ வருவதால் தமிழ் மக்கள் பறிகொடுத்த எதுவுமே மீட்கப்படப் போவதில்லை. அதேவேளை விடுதலைப் புலிகளின் இரகசியத் திட்டங்கள் பற்றியும் நாம் கவனமாயிருக்க வேண்டும். விடுதலைப் புலிகள் முழுமையான ஒரு போரில் இறங்கவேண்டும் என் பதே இந்த மூர்க்கர்களது பரிந்துரையாக உள்ளது.

கருணா அணி உருவான போதே தமிழ் மக்களிடையில் உள்ள அக முரண்பாடுகளைச் சரியாகக் கையாள வேண் டிய தேவை பற்றியும் வெகுசன அரசியலின் தேவை பற்றியும் விடுதலைப் போராட்டத்தில் மக்களை முழுமையான பங்காளிகளாக்குவதன் முக்கியத்துவம் பற்றியும் நேச சக்திகளை வென்றெடுப்பதும் பலமுனைகளில் பல தளங்களில் போராட்டத்தை விஸ்தரிப்பதன் அவசியம் பற்றியும் புதியபூமியில் வற்புறுத்தப்பட்டது. ஆயினும் கருணா அணியை முறியடித்ததோடு கதை முடிந்தது என்ற தோரணையிலேயே தமிழ் ஏடுகளும் தமிழ்த்தேசியவாத ஆய்வாளர்களும் பேசி வந்தனர்.

இன்றைய போராட்டம் அரசாங்கத்திற்கும் விடுதலைப் புலிகட்கும் இடையிலானது என்பது மிக மேலோட்டமான காட்சி. அது தமிழ் மக்களுக்கும் அவர்களை முற்றாக அடக்கி நசுக்க முற்படும் பேரினவாதிகளதும் மேலாதிக்கப் பெருவல்லரசுகளினதும் கூட்டணிக்கும் இடையிலானது என்பதை அண்மைய நிகழ்வுகள் தெளிவு படுத்தியுள்ளன. இந்தப் பிசாசுகளின் கூட்டணி சகல தேசிய இனங்கட்கும் எதிரானது என்பதையும் இங்கு நினைவூட்ட வேண்டும். எனவே தான் தமிழ் மக்களின் விடுதலைப் போராட்ட மூலோபாயம் மாற்றப்பட வேண்டும். அது எப்போதோ நடந்திருந்தால் தமிழ் மக்கள் இவ்வளவு வீண் அழிவுகளைச் சந்தித்திருக்க மாட்டார்கள். இன்னமுங் காலங் கடந்துவிடவில்லை.

அண்மைக்கால இழப்புகளிலிருந்து விடுதலைப் போராட்டமும் தமிழ் மக்களும் கற்க வேண்டியவை நிறைய உள்ளன. கற்க மறுப்பதும் கற்க எதுவுமில்லை என்று மறைப்பதும் கற்க விடாமல் மறிப்பதும் மக்களின் நலன்களை விரும்புவோர் செய்கிற காரியங்களல்ல.

www.padippakam.com
நன்றி - நூலகத்திட்டம்



காணி வீடு முகவரி இல்லை

# இருப்பிற்காக போராடும் மலையகத் தமிழ் தேசிய இனம்

இ. தம்பையா
தேசிய அமைப்பாளர்
புதிய- ஜனநாயக கட்சி

தோட்டத் தொழிலாளர்களை அடிப்படையாகக் கொண்ட மலையகத் தமிழ்த் தேசிய இனத்திற்கு இன்னும் சொந்தமாக வீடில்லை, காணி இல்லை. சொந்த முகவரி இல்லை. இப்படி கூறியவுடன் மலைகயகத்தின் பிற்போக்கு தொழிற்சங்கவாதிகளுக்கும், பாராளுமன்றவாதிகளுக்கும் மூக்கிற்கு மேல் கோபம் வரும். அச்சமூகத்தின் படித்தவர்களுக்கு இன்னும் ஒரு படி மேலாக கோபம் வரும். ஆனால் அவற்றை வென்றெடுப்பதற்கு எவ்வித முயற்சிகளிலும் ஈடுபடமா ட்டார்கள். தொழிலாளர்களை வேண்டியபடியெல்லாம் தங்களது நோக்கங்களுக்காகப் பயன்படுத்திக் கொள்வர்.

இந்த நாட்டைத் தொடர்ந்து ஆட்சி நடத்திவரும் அரசா ங்கங்களுடன் இணைந்து கொண்டு அமைச்சுப் பதவிகளை பெற்றுக் கொண்டும் பாராளுமன்றத்திற்குள்ளும் வெளியிலும் அவ்வரசாங்கங்களை தாங்கிப்பிடித்துக் கொண்டு



உரிய சன்மானங்களை பெற்றுக்கொண்டு வாழ்வதையே அரசி யலாகக் கொண்டுள்ளனர் மலையகத்தலைவர்கள். அந்தப் பாரம்பரியத்தை அப்படியே வாரி சுரிமையாக இளம் தலைமுறை யினருக்கும் கொடுத்து விட்டுப் போவதையே நோக்கமாக கொண்டு செயற்படுகின்றனர்.

1800களில் பிரித்தானியர்கள் தோட்டத்தொழிலாளர்களை இந்தியாவிலிருந்து இங்கு கொண்டுவந்து அவர்களைக் கொண்டு பெருந்தோட்டங் களை உருவாக்கினார்கள். அப்போது அவர்களுக்காக கட்டிக் கொடுக்கப்பட்டதே வீடுகள் அல்லதுலயின் அறைகள். அவையும் பிறகு கட்டிக் கொடுக்கப்பட்ட இரட்டை விடுதிகள், பின்னர் 2 பேர்சஸ் பரப்பில் தொழிலாளர்களால் கட்டிக் கொள்ளப்பட்ட வீடுகள், புறாக் கூட்டு மாடி வீடுகள் போன்றனவே தோட்ட க்குடியிருப்புகளாகும். இவை பெருந்தோட்டக் காணிகளில் அமைந்திருக்கும். அவை அடிப்படை வசதிகளை கொண்டனவல்ல என்பதுடன் அதில் வசிக்கும் தொழிலாளர்களுக்கு அவை எவ்வகையிலும் சொந்தமில்லை. வீட்டுத் தோட்டங்களை செய்யவும் ஒரு துண்டு நிலம் கூட எந்தவொரு தொழிலா ளிக்கும் சொந்தமாக இல்லை.

சிங்கள பௌத்த பேரினவாதிகள் கூறிவருவது போன்று தோட்டத் தொழிலாளல்கள் சிங்கள மக்களின் ஒரு துண்டு நிலத்தையேனும் ஆக்கிரமிக்கவில்லை. இலங்கையின் மத்திய மலைகளில் காடாக இருந்த இடங்களை அழித்து பெருந்தோட்டங்களை உருவாக்கினார்கள். அப் பெரு ந்தோட்டப் பொருளாதாரத்தின் விளைபொருள்களின் லாபம் தான் தற்போதும் இலங்கை பொருளாதாரத்தின் அடிப் படையாக இருக்கிறது. அதற்கு காரணமான தோட்ட த்தொழிலாளர்களுக்கு இன்னும் போதுமான சம்பளம் வழங்கப்படவில்லை. கல்வி, சுகாதாரம், போக்குவரத்து, நீர், மின் சேவைகள் போதுமான அளவு கிடைக்கவும் இல்லை.

எல்லாவற்றுக்கும் அடிப்படையாக காணி, வீடு என்பவற்றை வென்றெடுப்பது தோட்டத் தொழிலாளர்களுக்கு- மலையகத்தமிழ் மக்களுக்கு மிகவும் அடிப்படையானதாகும். அவர்கள் 200 வருடங்களுக்கு மேலான வரலாறு இருந்தும் சொந்தமாக வீடுகளை விலை கொடுத்து வாங்கிக் கொள்வதற்கான சேமிப்பு இல்லை. அதற்கான சம்பள வருமானம் இல்லை.

ஏழை விவசாயிகளுக்கு அரசாங்க காணிகளை இலவசமாக பகிர்ந்தளித்து குடியேற்றங்களை ஏற்படுத்தி இலவச வீடமைப்பு திட்டங்களை உருவாக்கும் அரசாங்கத்தின் திட்டங்களில் தோட்டத் தொழிலாளர்கள் உள்ளடக்கப்படவில்லை.

அவர்களுக்கென தனியான காணிக்குடியேற்ற வீட்டுத்திட்டங்கள் பிரத்தியேகமாக இல்லை. அவர்கள் இன்றும் அந்நியர்களாகவே நடத்தப்படுகின்றனர்.

பிரிட்டிஷ் கம்பெனிகளிடமிருந்து பெருந்தோட்டங்களை 1970களில் அரசுடமையாக்கப்பட்டதை அடுத்து பல பெருந் தோட்டங்கள் மூடப்பட்டு தனிச்சிங்கள கிராமங்களாக்கப் பட்டன. அங்கு வசித்த தொழிலாளர்கள் விரட்டியடிக்கப்பட்டனர். அவர்களின் இருப்பிற்கும் தொழிலிற்கும் எவ்வித மாற்றுத்திட்டங்களும் முன்வைக்கவில்லை.

பல தோட்டங்களில் சிங்களக் குடியேற்றங்கள் ஏற்படுத்தப்பட்டன. இதனால் தொழிலாளர்களில் தொழில்வாய்ப்புகள் குறைந்தன. குடியேற்றங்களாலும் பிறழ்முகாமையினாலும் மோசடிகள் ஊழல்களினாலும், பெருந்தோட்டங்கள் சீரழிக்கப்பட்டு அதன் பொருளாதாரமும் சீர்குலைக்கப்பட்டது. இக்குடியேற்றங்களினால் தோட்டத்தொழிலாளர்கள் மீது அடக்குமுறைகளும் கட்டவிழ்த்து விடப்பட்டன. இதனால் பாதுகாப்பற்ற நிலைமை ஏற்பட்டது.

இந்த பின்னணியில் 1991ம் ஆண்டு பெருந்தோட்டங்கள் தனியார் கம்பெனிகளுக்கு குத்தகைக்கு கொடுக்கப்பட்டன. 50 வருடங்களுக்கு மேல்குத்தகைக்கு எடுத்துள்ள கம்பெனிகள் மிகவும் கெடுபிடியான வேலை நிபந்தனைகளை தொழிலாளர்கள் மீது சுமத்தி வருகின்றன. சம்பள நிர்ணய சபையின் சிபாரிசுகளுக்கிணங்க வழங்கப்பட்டு வந்த சம்பளத்திட்டங்கள் கைவிடப்பட்டன. இரண்டு வருடங்களுக்கு ஒரு முறை புதுப்பிக்கப்படும் சம்பளத்திட்டங்களுடன் கூடிய கூட்டு ஒப்பந்த முறை அமுல்படுத்தப்பட்டது. அத்துடன் தோட்டக் குடியிருப்புகள், அதன் பராமரிப்பு சுகாதாரம் போன்ற பெருந்தோட்ட நம்பிக்கை நிறுவனம் என்ற அமைப்பிடம் ஒப்படைக்கப்பட்டது. கட்டப்பட்ட புதிய வீடுகள், மாடி வீடுகள் என்பவற்றுக்கு மாதாந்தம் தொழிலாளர்களிடமிருந்து பணம் அறவிடப்படுகிறது. அவை 15 வருடங்களுக்கு அறவிடப்படும். அதன் பின்பும் அக்குடியிருப்புகள் தோட்டத்தொழிலாளர்களுக்கு வீட்டு உறுதிகள் வழங்கப்படப்போவதில்லை.

தோட்டங்களில் தொழில் செய்யாதவர்களிடமிருந்து தோட்டவீடுகளை பறித்தெடுக்கவும் வீடுகளை திருத்தியோ, புதுப்பித்தோ கட்டியவர்களுக்கு எதிராகவும் தோட்டக்கம்பெனிகள் சட்ட நடவடிக்கைகள் எடுத்துவருகின்றன. இதனால் தொழிலாளர்கள் வேலை நீக்கம் செய்யப்படுகின்றனர். அதேபோன்று வீட்டுத்தோட்டங்களை செய்துவரும் காணிகளை பறிக்கவும் சட்டநடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. இதன் காரணமாகப் பல தொழிலாளர்கள் வேலை நீக்கம் செய்யப்பட்டுள்ளனர்.

இதிலிருந்து தெரியவருவதும் உறுதியாவதும் என்னவென்றால் தோட்டத்தொழிலாளர்களுக்கு வீட்டு உரிமையோ காணி உரிமையோ இல்லை என்பதாகும். அதனால் அவர்களுக்கு நிரந்தர வசிப்பிடம் இல்லை. தொழிலாளர் குடும்பங்களில் தோட்டங்களில் வேலை செய்யாதவர்களின் நிரந்தர வசிப்பிடம் எதுவென்பதும் கேள்விக்குறியாகிறது. அவர்கள் வசிக்கும் தோட்டங்களே அவர்களின் நிரந்தர வசிப்பிடங்கள் என்று அத்தாட்சிப்படுத்த தோட்ட முகாமையாளர்களும் அப்பகுதி கிராம சேவையாளர்களும் மறுத்து வருகின்றனர். அவர்களின் வதிவிடப் பதிவு வாக்கா ளர் பதிவு போன்றன மறுக்கப்படுகின்றன. ஆறேழு தலை முறைக்குப் பின்பும் இது தான் நிலை.

தோட்டக்காணிகளும் சொந்தமாக வீடுகளும் வேண்டும் என்ப தும் தோட்டத் தொழிலாளர்கள் உயிர் வாழ்வதற்கான அடிப்படை மனித உரிமையாகும்.

அத்துடன் அவை சொந்தமாக இருந்தாலே தோட்டத் தொழிலாளர்களினதும் அவர்களது வழித்தோன்றல்களினதும் நிரந்தர வசிப்பிடமும் முகவரியும் உறுதி செய்யப்படும். அவை உறுதி செய்யப்படும்போதே அவர்கள் வாழிடம் ஒரு குடியிருப்புப் பகுதியாகப்பட்டு கிராமங்களுக்கும். நகரங்களுக்குமென இருக்கும் பாடசாலை வைத்தியசாலை, அஞ்சல் நிலையம் வீதிகள், நீர் மின்வசதிகள் போன்றன உறுதிசெய்யப்பட வாய்ப்பேற்படும்.

2002 ஆம் ஆண்டு அமைச்சரவை தீர்மானத்தின் படி ஒரு தோட்டத்தொழிலாளியின் குடும்பத்திற்கு வீடு கட்டிக்கொள்வதற்கென தோட்டக்காணிகளிலிருந்து 20 பேர்ச்சஸ் வழங்கப்படவேண்டும். அத்தீர்மானம் இன்றுவரை நடைமுறைப் படுத்தப்படவுமில்லை அத்தீர்மானம் இரத்துச் செய்யப்படவும் இல்லை.

மலையகத்தில் ஒவ்வொரு தோட்டத்திலும் பயிர்செய்யப்படாத கணிசமான காணிகள் இருக்கின்றன. அவற்றை தொழிலாளர்கள் வீடு கட்டிக்கொள்வதற்கும் பயிர் செய்வதற்கும் காணிகளை வழங்க முடியும். அதனால் பெருந்தோட்டச் செய்கைக்கு எவ்வித பாதிப்பும் ஏற்படமாட்டாது.

அந்த அடிப்படையிலும் அவர்களுக்கு வீடும் காணியும் உறுதி செய்யப்பட வேண்டும். அவை உறுதிசெய்யப்பட்டாலேயே அவர்களுக்கென பிரதேசங்கள் உறுதிசெய்யப்பட முடியும். தேசிய இனம் என்பதற்கு அடிப்படையாகவும் அமையும்.

வசிக்கும் பெருந்தோட்டங்களில் சொந்த வீடோ, காணியோ குடியேற்றத்திட்டங்களோ தொழிலாளர்களுக்கு இல்லாத நிலையில் பேரினவாத குடியேற்றங்கள், இனரீதியான தாக்குதல்கள் அடக்கு முறைகள் காரணமாகவும் பாது காப்பற்ற நிலையினாலும் குருநாகல், காலி, களுத்துறை, இரத்தினபுரி, கேகாலை போன்ற மாவட்டங்களிலிருந்து தோட்டத்தொழிலாளர்கள் வெளியேற வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டுள்ளது. கண்டி, மாத்தளை, பதுளை ஆகிய மாவட்டங்களில் இடைஞ்சல்கள் அதிகம். நுவரேலியா மாவட்டம் மட்டும் ஓரளவிற்கு பாதுகாப்பாக இருக்கிறது. அங்கும் கூட தோட்டத் தொழிலா ளர்களுக்கு சொந்தமாக வீடோ காணியோ இல்லை. அதனால் அங்கு கூட தோட்டத்தொழிலாளர்களின் எதிர்காலம் நிச்சயமற்றதாகவே இருக்கிறது.

தோட்டத்தொழிலாளர்களுக்கென சொந்தமாக வீடு, காணியை பெற்றுக்கொள்ள அரசியல் ரீதியான முடிவுகளும், நடவடிக்கைகளும் அவசியம், அதற்கான நேர்மையான முடிவுகள் எடுக்கப்படவே இல்லை. தோட்டத்தொழிலாளர்கள் வாழ்கின்ற லயின் அறைகளை அவர்களுக்கே சொந்தமாக்கிக் கொடுக்கப்படதாக 1990 களில் ஐ.தே.கட்சி அரசா ங்கமும் பொதுஜன ஐக்கிய முன்னணி அரசாங்கமும் நாடகமாடின. வீட்டு உறுதிகள் என்று சில பத்திரங்களும் தொழிலாளர்களுக்கு வழங்கப்பட்டன. அவை தேர்தல் கால வாக்குறுதிகள். அதற்கு இ.தொ.கா, ம.ம.மு போன்ற மலையக அமைப்புகள் துணைபோயின. மக்களை ஏமாற்றின. அவ்வுறுதிகள் வழங்கப்பட்டமை மோசடி என்பது அம்பலமானது. அது வெட்கக்கேடான விடயம் என்று மலையக அமைப்புகள் இன்றுவரை ஏற்றுக்கொள்ளவே இல்லை.

இதிலிருந்து புலப்படுவதாவது யாதெனில் இலங்கையின் முதலாளித்துவ பேரினவாத அரசாங்கங்கள் தோட்டத்தொழி லாளிகளுக்கு காணியையும் வீட்டையும் வழங்குவதற்கான அரசியல் முடிவையும் நடவடிக்கையும் எடுக்கப்போவதில்லை. சந்தர்ப்பவாத மலையக அரசியல் தலைமைகள் தோட்டத்தொ ழிலாளர்களுக்கு காணியையும் வீட்டையும் வென்றெடுக்க உரிய நடவடிக்கைகளில் இறங்கப்போவதில்லை.

எனவே தோட்டத்தொழிலாளர்களுக்கென வீடுகள், காணிகளை வென்றெடுக்க பாரம்பரிய தொழிற்சங்க, பாராளுமன்ற அரசியலை மலையக மக்கள் நிராகரிக்க வேண்டும். அதே வேளை வெகுஜனப்போராட்ட அரசியல் மார்க்கத்தில் அணி திரள்வது அவசியம். .

www.padippakam.com
நன்றி - நூலகத்திட்டம்



# திறந்த பொருளாதாரம் அறிமுகமாகி 30 ஆண்டுகள்!

## நாடு எங்கே வந்து நிற்கிறது?

ஞானகரன்

திறந்த பொருளாதாரக் கொள்கை கொண்டு வரப்பட்டு (19977- 2007) 30 ஆண்டுகள் ஆகின்றன. இதனை முன்னின்று செயற்படுத்தியவர் மறைந்த முன்னாள் ஜனாதிபதி ஜே.ஆர். ஜெயவர்த்தனா. பேரினவாத வெறி நிலை உட்பட சகல நிலைகளிலும் முதலாளித்துவப் பிற்போக்கு வாதியாகத் திகழ்ந்த அந்த மனிதர் அமெரிக்க ஏகாதிபத்திய விசுவாசி. அதன் காரணமாக நீண்டகாலம் எதிர்பார்த்திருந்த ஆட்சி அதிகாரத் தலைமைப் பதவி 1977ல் கிடைத்தவுடன் தான் தயாரித்து வைத்திருந்த அனைத்துப் பிற்போக்குக் கொள்கைகளையும் நடைமுறைப்படுத்திக் கொள்ள முன் வந்தார். அதற்குச் சாதகமாக பாராளுமன்றத்தில் ஆறில் ஐந்து பெரும்பான்மையையும் பெற்றிருந்தார். தமது யூஎன்.பி கட்சியின் சகல பாராளுமன்ற உறுப்பினர்களிடமும் திகதி இடப்படாத இராஜினாமாக் கடிதங்களை முன் கூட்டியே வாங்கி வைத்துக் கொண்ட நரித்தனம் மிக்க ஒரு முதலாளித்துவத் தலைவராகவும் விளங்கினார்.

அத்தகையவர் எவ்வித தங்கு தடையும் இன்றி அந்நிய இறக்குமதிகளுக்கும் தனியார் மயத்திற்கும் நாட்டின் கதவுகளை அகலத்திறந்து கொண்டார். அதற்குப் பெயர்தான் திறந்த தாராளப் பொருளாதாரக் கொள்கை. கடந்த முப்பது ஆண்டுகளில் இத் திறந்த பொருளாதாரக் கொள்கை நடைமுறையால் நாடு வளர்ச்சி கண்டதா? மக்கள் சுபீட்சம் அடைந்தார்களா? இலங்கையை சிங்கப்பூராக மாற்றுவது எனக் கூறியே அன்று திறந்த பொருளாதாரக் கொள்கைக் கொடி ஏற்றப்பட்டது. அந்தக் கொடியின் கீழேயே யூஎன்.பி 17 வருடங்களாகவும் சந்திரிகா தலைமையிலான பொதுசன முன்னணி பதினொரு வருடங்களாகவும் இப்போதைய மகிந்த சிந்தனை அரசு ஒன்றரை வருடங்களாகவும் ஆட்சி அதிகாரம் செலுத்தி வந்துள்ளனர்.

ஆனால் நாட்டின் பொருளாதார நிலை மோசத்தின் மேல் மோசமாகவே காணப்படுகிறது. 1970- 77 காலத்தில் கூட்டரசாங்கம் என்ற சிறிமாவோ இடதுசாரிகள் இணைந்த அரசாங்கத்தினால் முன்னெடுக்கப்பட்ட குறைந்த பட்ச தேசிய பொருளாதாரக் கொள்கைகள் யாவும் 1977ல் ஜே.ஆரின் வருகையோடு மறுதலிக்கப்பட்டு கைவிடப்பட்டன. தாராள இறக்குமதிக்காக அன்றுவரை கடைப் பிடிக்கப்பட்ட கட்டுப்பாடுகள் யாவும் நீக்கப்பட்டன. இத் தாராள இறக்குமதியால் கைத்தொழில் விவசாயத் துறைகளிலான உள்ளூர் உற்பத்திகள் யாவும் சீரழிந்து கொண்டன. இறுதியில் அவை அழிவுற்றன. தன்னிறைவை நோக்கிய பாதையில் முன்னேற்றம் கண்டு வந்த நெல் மற்றும் உப உணவுப் பொருட்களின் உற்பத்தி வீழ்ச்சியும் சிதைவும் கண்டதுடன் விவசாயிகள் நடுத் தெருவில் நிற்க வைக்கப்பட்டனர். சிறு கைத்தொழில்கள் யாவும் அந்நிய இறக்குமதிகளால் சாகடிக்கப்பட்டன. பெரும் கைத்தொழில் ஆலைகள் நட்டம் ஊழல் நிர்வாகச் சீர்குலைவு என்ற பெயர்களில் அந்நியக் கம்பனிகளுக்கு விற்கப்பட்டன. இதன் மூலம் தனியார் மயம் வேகப்படுத்தப்பட்டது. அத்துடன் சுதந்திர வர்த்தக வலயங்கள் அமைக்கப்பட்டு அந்நிய மூலதனம் பல் தேசியக் கம்பனிகள் மூலம் வரவழைக்கப்பட்டன. அங்கெல்லாம் நமது மக்களின் உழைப்பு குறைந்த சம்பளத்தில் சுரண்டிச் செல்லத் தாராளமாக அனுமதிக்கப்பட்டது. திறந்த தாராள பொருளாதாரக் கொள்கையால் வேலை வாய்ப்பு பெருகும் வாழ்க்கைத் தரம் உயரும் பொருளாதாரம் செழிப்படையும் என்றே கூறப்பட்டது. அந்நியச் செலவாணி அதிகரிக்கும் என நம்பிக்கை தெரிவிக்கப்பட்டது. முப்பது வருட திறந்த பொருளாதாரம் நமக்கு எத்தகைய வாழ்வை வழங்கி இருக்கிறது. வறுமையும் வேலை இன்மையும் குறைந்துள்ளதா? அல்லது அதிகரித்துள்ளதா? 1977ம் ஆண்டு டிசம்பரில் ஒரு அமெரிக்க டொலரை 16 ரூபா 13 சதத்திற்கு வாங்க முடிந்தது. ஆனால் முப்பது வருட தாராள பொருளாதார நடைமுறைக்குப் பின் இன்று 2007 யூலையில் ஒரு அமெரிக்க டொலரை 111 ரூபா 72 சதம் கொடுத்தே வாங்க முடிகிறது. எமது நாட்டு நாணயத்தின் பெறுமதி வீழ்ச்சி கண்டு வந்துள்ளதையே இது எடுத்துக் காட்டுகிறது. மேலும் நாட்டின் பணவீக்கம் 20 சத வீதத் தைத் தாண்டியுள்ளதாக உத்தியோகபூர்வமற்ற புள்ளி விபர மதிப்பீடுகள் கூறுகின்றன. ஆனால் மத்திய வங்கி 7.4 வீத பொருதார அபிவிருத்தி ஏற்பட்டுள்ளதென்றும் பண வீக்கம் கட்டுப்பாட்டில் வைக்கப்பட்டுள்ளதாகவும் புள்ளி விபரம் காட்டுகிறது.

மேலும் திறந்த பொருளாதார தாராள இறக்குமதியானது அந்நியப் பொருட்களின் நுகர்வை திட்டமிட்ட ஒரு நுகர்வுக் கலாச்சாரமாக்கியுள்ளதைத் தான் கடந்த முப்பது ஆண்டுகளில் நாம் காண முடிந்துள்ளது. கொக்கா கோலா பெப்சி போன்ற மென்பானங்களும் பொதி செய்யப்பட்ட விரைவுணவுகளும் நகரங்களில் மட்டுமன்றி கிராமங்களின் மூலை முடுக்குகளிலும் பரப்பப்பட்டுள்ளன. அந்நியரால் திணிக்கப்பட்டு நமது பாரம்பரிய உணவுகள் கைவிடப்படுவதற்குக் காரணமான கோதுமை மாவின் பாவனை முழு மக்களையும் பீடித்த ஒன்றாகி அதன் விலையும் அதிகரிக்கப்பட்டுக் கொண்டே போகிறது. ஒரு கி. அரிசி 40 ரூபா தொடக்கம் 48 ரூபா வரை விற்கப்படுகிறது. ஆனால் ஒரு கி. மாவின் விலை 51 ரூபா முதல் 60 ரூபாவரை விற்கப்படுகிறது. மக்களது பரந்துபட்ட பாவனை மட்டத்தை உயர்த்தும் வரை குறைந்த விலையில் விற்பதும் கேள்வி அதிகரிக்கும் சூழலில் விலையை அதிகரித்துக் கொள்வதென்பது முதலாளித்துவத்தின் போக்காகும். இவ்வாறு இறக்குமதி செய்யப்படும் அத்தியாவசியப் பொருட்கள் அனைத்தினதும் விலைகள் அதிகரித்த வண்ணமே உள்ளன. இவ் விலை ஏற்றத்தைக் கட்டுப்படுத்த அரசாங்கத்தினாலோ அன்றி அதற்குரிய அமைச்சர்களாலோ முடியவில்லை. விலை உயர்வுக்கான காரணம் உலகச் சந்தையில் விலைகள் உயர்ந்து விட்டன என்பதை அறிவிக்கும் தேவை ஒன்றிற்காகவே அமைச்சுப் பதவிகளில் இருக்கிறார்கள். இவர்கள் கூறும் உலகச் சந்தை என்பது என்ன? அதை யார் கையாள்கிறார்கள்? அத்தகையோருக்கும் நம் நாட்டு தரகு முதலாளிகளுக்கும் உள்ள உறவு யாது? யார் கட்டுப்படுத்துகிறார்கள்? பல்தேசிய நிறுவனங்களும் மூலதனக் கொள்ளைக் கூட்டத்தினருமே உலகச் சந்தையை வைத்திருக்கிறார்கள். ஏகாதிபத்திய முதலாளித்துவ மூலதனத்தால் வழி நடாத்தப்படும் உலகச் சந்தை என்பது உலகமயமாதல் மூலமான தனி யார்மய தாராளமயப் பொருளாதாரத்தையே வற்புறுத்தி திணித்து வருகின்றன. இவற்றை கையேற்ற நாடுகளே இன்று அதற்குப் பலியாகி வருகின்றன. அதற்கு ஆளும் வர்க்க சக்திகள் சாமரை வீசி வருகின்றன.

அந்தவகையிலேயே இலங்கையின் தாராள பொருளாதாரக் கொள்கை நடைமுறையில் இருந்து வருகிறது. அதன் மோசமான விளைவுகளையே மக்கள் இன்று அனுபவித்து துன்ப துயரங்களில் வாழ்கின்றனர்.

இதன் மூலம் இறக்குமதி ஏற்றுமதியில் ஈடுபட்டுள்ள பெரும் முதலாளிகளும் முதலீட்டாளர்களும் சேவைத்துறை மூலம் லாபம் ஈட்டுவோரும் உலகமயமாதலின் முகவர்களான உயர் அதிகாரிகளும் திட்டமிடலாளர்களாக உள்ள புத்திஜீவிகளும் அரசாங்க உயர் அதிகாரிகளும் பங்குச் சந்தைச் சூதாடிகளும் லாபங்களுக்கு மேல் லாபமடைந்து வருகின்றனர். இத்தகையோர் தான் கொழும்பையமையாக வைத்து சண்டே ரைம்ஸ் பத்திரிகையால் நடாத்தப்பட்ட கருத்துக் கணிப்பில் திறந்த பொருளாதாரக் கொள்கை நாட்டிற்கு நன்மையளித்து வருகிறது என்று கூறியுள்ளனர்.

ஆனால் தொழிலாளர்கள் விவசாயிகள் மற்றும் உழைக்கும் மக்கள் அரசாங்க தனியார் துறை ஊழியர்கள் என்போரைக் கேட்டிருந்தால். கருத்துக் கணிப்பு திறந்த பொருளாதாரத்திற்கு எதிரானதாகவே அமைந்திருக்கும். ஏனெனில் விவசாய கைத்தொழில் வீழ்ச்சியும் சம்பள உயர்வு வழங்கப் படாமையும் வாழ்க்கைச் செலவு அதிகரிப்பும் இத் தாராள பொருளாதாரத்தினால் தான் என்பதை அவர்கள் அறிவா ர்கள்.

இயற்கை வளங்களும் மனித வளமும் நிறைந்த இச் சின்னம் சிறிய விவசாய நாட்டில் உரியவாறான திட்டமிட்ட தேசிய பொருளாதாரம் முறையான வழிகளில் முன்னெடுக்கப்பட்டால் இன்றைய இழி நிலை ஏற்பட்டிருக்க இடம் இருந்திருக்காது. அதற்குப் பதிலாக ஏகாதிபத்தியத்தின் உள்ளார்ந்த வழிகாட்டல்களுடன் பேரினவாத யுத்தத்தை விரிவுபடுத்தியதன் மூலம் எஞ்சியிருந்த தேசிய பொருளாதாரத்துறைகளும் அழிவுற்றன. இன்று இலங்கையின் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 3 1/2 வீதத்தை பேரினவாத ஒடுக்குமுறை யுத்தத்திற்கு செலவிடப்படுகிறது. அரசாங்கம் இந் நிலையில் அபிவிருத்தி சுபீட்சம் என்பதெல்லாம் வெறும் கண்துடைப்புகளேயாகும்.

யுத்தத்தின் மறைவிலே புகுத்தப்பட்ட திறந்த தாராள பொருளாதாரக் கொள்கையானது ஏகாதிபத்திய பல்தேசியக் கம்பனிகளின் சுரண்டலுக்கும் கொள்ளையிடலுக்கும் தளமாகி நிற்கிறது. அதே யுத்தத்தின் பெயரால் இன்றும் திறந்த பொருளாதார நலன்கள் பாதுகாக்கப்படுகிறது. இந் நிலை மகிந்த இருந்தாலும் அல்லது அவர் மாறி ரணில் வந்தாலும் மாற்றமடையப் போவதில்லை.

இதற்கு ஒரே மாற்று வழி யுத்தத்தை எதிர்த்து உலகமயமாதல் தாராளமயம் தனியார்மயம் என்பனவற்றையும் எதிர்த்த உறுதியான மக்கள் இயக்கங்களைக் கட்டுவதும் போராட்டங்களைப் பரந்தளவில் முன்னெடுப்பதுமேயாகும். இன்று மூன்றாம் உலக நாடுகளின் மக்கள் பல்வேறு நிலைகளிலும் முன்னெடுத்து வரும் உலகமயமாதலுக்கு எதிரான போராட்டங்களுடன் நமது மக்கள் இயக்கங்கள் இணைந்து முன் செல்ல வேண்டும்.

---

தொழிற் சங்க உரிமைகள்

எட்டுமணி நேர வேலை

அரசாங்க வைத்தியம்

தரமான கல்வி

சீரான போக்குவரத்து

ஒழுங்கான தபால் சேவை

உப உணவு உற்பத்தி

**யாவும் சீரழிந்து போனதுவே**

சுதந்திர வர்த்தக வலயங்கள்

சர்வதேசக்கல்வி நிலையங்கள்

ஐந்து நட்சத்திரக் ஹோட்டல்கள்

தனியார் மருத்துவ மனைகள்

ஊழல் லஞ்சம் பெருக்கம்

உயிர்க்கொலைகள் நாளாந்தம்

மனித உரிமைகள் காலில் மிதிப்பு

வாழ்க்கைச் செலவு உயர்வு

இன்னும் இன்னும் கொடூரங்கள்

**இத்தனையும் வந்து சேர்ந்தனவே!**

---

இரத்தினபுரி

7ம் பக்க தொடர்ச்சி

இந்தப் பின்னணியோடு நாம் நமது ஆசிரியர் சமூகத்தை பார்த்தால் தான் வாழும் சமூகம் பற்றி தனது மக்கள் ஒடுக்கப்படும் நிலை பற்றி சிந்திப்பதே கிடையாது. மாணவர்களிடம் சமூக சிந்தனை போக்கினை வளர்த்தெடுப்பதனை விடுத்து "கூலிக்கு மாரடிப்பவர்களாகவே "இருக்கின்றனர். அதேவேளை தியாக உணர்வுடன் சமூக சிந்தனையுன் கற்பிப்போர் இருப்பதை மறுக்கமுடியாது. சில ஆசிரியர்கள் பகுதி நேரத்தொழிலாக ஆசிரியத்துவத்தினை மேற்கொள்கி றார்கள். இங்கே பெரும் பாலான நேரங்களை புகைப்படம் எடுப்பதிலும் பத்திரிகைச் செய்தி தேடுவதிலும் முச்சக்கர வண்டி ஓட்டுவதிலும் நகை வியாபாரம் செய்வதிலும் செல விட்டு வருகின்றனர். இது ஒரு புறமிருக்க பெருந் தோட்டத் துறையிலிருந்து வரும் ஒரு ஆசிரியர் காணி வாங்கி வீடொன்றைக் கட்டி வெளியில் வந்துவிட்டால் போதும், வாழ்வில் சர்வ இன்பங்களையும் அனுபவித்து விட்டதாக உணரும் "வேடிக்கை மனிதர்களாக" இருப்பதாலும் இப்பிரதேச கல்வி வீழ்ச்சி நோக்கி சென்று கொண்டிருக்கிறது.

இந்த இறங்கு நிலையினைத் தவிர்த்து வளமிகு கல்வியும், சமூக சிந்தனையும் மிக்க சமுதாயத்தினை கட்டி எழுப்பிட நமது தமிழ் மாகாணசபை உறுப்பினர்களும் தமிழ்க்கல்வி அதிகாரிகளும் பயன் மிகுந்த விடயங்களில் அக்கறை செலுத்துவதுடன் தனிமனித பகைமையை விட்டு இது வரை கண்களுக்கு எட்டாமல் கிடக்கும் அவலங்களைக் கண்டு உணர்ந்து மக்களின் விடியலுக்கான குழந்தைகளை உயர்த்தப் பாடுபடவேண்டும். இவ்விடயங்களில் வெற்றுகளாக திரியும் அதிபர்களும் ஆசிரியர்களும் மக்கள் நிலை உணர்ந்து செயற்பட்டால் நமது கல்வி இலக்கு உயர்வதோடு சமூக அடக்குமுறையினை எதிர்த்து வீழ்த்தும் சிந்தை மிகுந்த ஒரு சமுதாயத்தினை உருவாக்க முடியும்.

www.padippakam.com
நன்றி - நூலகத்திட்டம்



# மூட நம்பிக்கைகள்

# சமூகமும் பண்பாடும் 15

பேராசிரியர் சி.சிவசேகரம்

ஒரு சமூகத்தின் அன்றாடச் செயற்பாடுகளிற சடங்குகளும் சம்பிரதாயங்களும் முக்கியமான இடம் வகிக்கின்றன. பொதுவாக அவை சிந்தனையின் வழிகாட்டலுடன் நடப்பன வல்ல. சம்பிரதாயங்கள் பார்த்தும் கேட்டும் பழக்கப்பட்டும் நம்முடைய நடத்தையில் ஒரு பகுதியாகவே மாறிவிடலாம். சடங்குகள் திரும்பத் திரும்ப நடத்தப்பட்டும் தம்மை நிலை நிறுத்திக் கொள்கின்றன. சடங்குகளும் சம்பிரதாயங்களும் மாற்றங்கட்கு உட்படுகின்றன. அந்த மாற்றங்கள் பெரும்பாலும் சமுதாயத்தின் உள்ளும் வெளியிலும் இருந்து உருவாகும் நிர்ப்பந்தங்கள் காரணமானவை. அதே வேளை சடங்குகளையும் சம்பிரதாயங்களையும் இறுக்கமாகப் பேணவும் மாற்றங்களைத் தவிர்க்க இயலாத போது அவற்றின் வேகத்தைத் தணிக்கவேணும் பலவகையான நம்பிக்கைகள் உதவுகின்றன. சில நம்பிக்கைகள் மதத்துடன் நேரடியான தொடர் புடையவை. வேறு சில சமூக நடைமுறையின் வழி உருவாகி நிலைபெறுகின்றன. இன்னுஞ் சில, வெளியிலிருந்து வந் தவை. எல்லா நம்பிக்கைகட்கும் எவ்வாறோ நியாயங் கற்பிக் கப்படுகிறது. பல நம்பிக்கைகட்கு இன்று போலியான விஞ்ஞான விளக்கங்கள் உள்ளன.

அறிவுசாராத எல்லா நம்பிக்கைகளும் கெடுதலானவையல்ல. எனினுஞ் சில நம்பிக்கைகள் மிகவுஞ் சமூகக் கேடானவை. அவை சமூகச் சீர்திருந்தவாதிகளாற் கடுமையாக எதிர்க்கப்பட்டு வந்துள்ளவை. தர்க்க ரீதியாகச் செல்லாதவையும் விஞ்ஞான அடிப்படை இல்லாமலும் சமூகத்தில் இருந்து வருகிற நம்பிக்கைகளை மூட நம்பிக்கைகள் எனலாம். இவற்றுள் சகுனங்கள் பற்றியன முக்கியமானவை. விதவைகள் கண்ணில் எதிர்ப்பட்டால் கெட்ட சகுனம் என்ற நம்பிக்கை நீண்டகாலமாக இருந்து வந்து இப்போது சிறிது தளரத் தொடங்கியுள்ள ஒன்று. பெண்கள் மீதான ஒடுக்குமுறையின் தீவிர வெளிப்பாடுகளுள் விதவைகள் மீதான சமூகத்தடைகள் முக்கியமானவை. விதவைகளைக் காணுவதே தவறு என்று சொல்லக் கூடிய பல சமூக நிகழ்வுகள் இருந்து வந்துள்ளன. இவற்றிற் பெரும்பாலானவை இன்று நகரச் சூழல்களிலும் நகரப்பாதிப்புக்குட்பட்ட கிராமச் சூழல்களிலும் மாறிவிட்டன. எனினும் விதவைகள் பலர் 'நற்காரியங்கள்' எனப்படுகின்றவற்றினின்று ஒதுங்கி நிற்கின்றனர். வெளி வெளியாக விதவைகளைத் துர்ச்சகுனமாக காட்டுவது விரைவில் இல் லாது போனாலும் விதவைகளின் மனதில் உள்ள தயக்கங் களை ஒழிக்க கூடியளவு காலம் எடுக்கலாம்.

**மூடநம்பிக்கைகளின் தோற்றுவாய்கள் எவையாக இருந்தாலும் அவற்றுக்கு ஆதாரமாக இருப்பது அச்சந்தான்.**

பல்லிகளும் பூனைகளும் இன்னமும் பலருடைய வாழ்க்கை மீது கொஞ்சமாவது ஆதிக்கஞ் செலுத்துகின்றன. காடுகள் குறைந்த பின்பு ஆந்தையும், நரியும் பயமுறுத்துவது குறைந்து வருகிறது. காகங்கள் வருவதற்கும் விருந்தாளிகட்கும் தொடர்பு இல்லாதளவுக்கு நகரங்களில் காகங்களின் எண்ணிக்கை பெருகிவிட்டது. ஆனாலும் வேறுவிதமான சகுனங்களை மனிதர் உருவாக்கிக் கொள்ளுகின்றனர். நம்மிற் சிலர் யாருடை முகத்திலாவது விழித்தால் அது நல்லது என்றோ கெட்டது என்றோ கற்பித்து அதற்கேற்றபடி மனதையும் வழி நடத்திக் கொள்ளுகின்றோம்.

இவை எல்லாவற்றிலும் முக்கியமாகச் சோதிடத்தின் அடிப்படையில் இந்துக்கள் எனப்படுவோரின் வாழ்வில் மூட நம்பிக்கைகள் பல புகுத்தப்பட்டுள்ளன. யாரிடமும் விருந்துக்குப் போக வர ஏற்ற நாட்கள் எவை அல்லாத நாட்கள் எவை என்று வகுக்கப்பட்டுக் "கள்ள வியாழன் கழுத்தை அறுக்கும்" என்கிற மாதிரியான சொற்றொடர்களும் புகுத்தப்பட்டன. இப்போது ஞாயிறு விலக்கப்பட்ட நாளாயிருந்து பலரதும் விடுமுறை நாளானதன் விளைவாக ஏற்கப்பட்ட நாளாகி விட்டது. அது போக அட்டமி நவமி இருத்தை அமாவாசை என்று இன்னொரு பட்டியல் நாட்களையும் ராகுகாலம் போன்றவை நேரங்களையும் தகாதவை என்று விலக்கி வைக்கின்றன. ஆனால் அலுவலகங்க ளும் போக்குவரத்து வசதிகளும் ராகுகாலம் பார்த்து இயங்க முடியாது. எனவே சூழலின் நிர்ப்பந்தம் சோதிடத்தை வெல்லுகிறது மட்டுமன்றிப் பொய்ப்பித்தும் விடுகிறது. ஆனாலும் சில துறைகளில் உள்ளவர்களிடம் தங்களது திறமையை விட அதிகமான நம்பிக்கையை அதிஷ்டத்தின் மீது வைக்கிற போக்கைக் காணலாம். பொதுவாகக் கலைஞர்கள் நடுவே இது ஒரு பெரிய பலவீனமாக இருந்து வந்துள்ளது. இப்போது இவ்விடயத்தில் அரசியல் வாதிகள் தீவிரமாக உள்ளனர். சோதிடமும் சகுனங்களும் மட்டுமன்றி வேறு விதமான மூடநம்பிக்கைகளும் வந்து மரபு சார்ந்த பில்லி சூனியம் அஞ்சனம் பார்த்தல் போன்றவை போக வாஸ்து எண் சோதிடம் போன்றவை போலி விஞ்ஞானப் போர்வைகளுடன் நுழைகின்றன. இவற்றின் விளைவாக நாட்டின் தலைவர்கள் தங்களுடைய நல்ல நேரங்க ளைக் கவனிக்கிற அளவிற் சிறு பங்கேனும் நாட்டுக்கு ஒரு நல்ல காலத்தை உருவாக்க முயலுவதில்லை.

மூடநம்பிக்கைகளின் தோற்றுவாய்கள் எவையாக இருந்தாலும் அவற்றுக்கு ஆதாரமாக இருப்பது அச்சந்தான். மரபின் வழி வந்த பல வேறு நடைமுறைகளை வலியுறுத்த வேண்டியும் அவற்றை முறை தவறாமற் கடைப்பிடிக்க வேண்டியும் ஏற்படுத்தப்பட்ட விதிமுறை கட்கு மேலாகப் பல விதமான புனைவுகளும் புகுத்தப்படுகின்றன. இவற்றை வைத்தும் வேறு மூட நம்பிக்கைகள் உருவாக்கப்படுகின்றன.

சடங்குகள் தொடர்பான மூட நம்பிக்கைகளை முற்றாகவே நீக்குவது கடினம். ஏனெனில் அவ்வாறான சில நம்பிக்கைகளின் அடிப்படையிலேயே பல சடங்குகள் அமைந்துள்ளன. நமக்கு முக்கியமானது அவ்வாறான சடங்குகளையோ மூடநம்பிக்கைகளையோ ஒவ்வொன்றாக எதிர்த்துப் போராடி இல்லாமல் ஒழிப்பது அல்ல. ஆனால் எந்தச் சடங்கும் மூட நம்பிக்கையும் மனிதரின் எந்தப் பகுதியினரையும் பிறப்பின் அடிப்படையில் இழிவு செய்யவும் அடக்கி ஒடுக்கவும் உதவுமாயின் அந்த அடக்கி ஒடுக்குதலுக்கு எதிராக மக்களைச் சிந்திக்கவும் போராடிச் சீர்திருத்தவும் தூண்டுவதற்கு நாம் பின்னிற்க வேண்டியதில்லை.

மரபு சார்ந்த மருத்துவமும் கட்டிடக்கலை உட்பட்ட பலவேறு தொழில் நுட்பங்களும் முற்றிலும் விஞ்ஞானரீதியாகவே விருத்தி பெற்றவையல்ல. அவை நடைமுறை சார்ந்து அனுபவத்தின் மீது கட்டியெழுப்பப்பட்டவை என்பதுடன் பல விடயங்களைக் காரண காரியமுறையில் தொடர்புபடுத்தி அமைந்துள்ளன. எனினும் அவை விருத்தி பெற்ற காலத்திற்குரிய விஞ்ஞான அறிவு வளர்ச்சியால் மட்டுப்படத்தப்பட்டவை. எனவே சில நடைமுறைகள் வெறும் நம்பிக்கைகளாகவும் விஞ்ஞான அடிப்படை அற்றும் அமைகின்றதுடன் வேறு சில மந்திரத்தன்மையுடனும் அமைகின்றன.

எல்லா நம்பிக்கைகளையும் மூட நம்பிக்கைகள் என்று ஒரேயடியாகப் புறந்தள்ளுவது பகுத்தறிவாகாது. ஆனால் நம்பிக்கைகள் ஒவ்வொன்றும் எவ்வளவு தூரம் விஞ்ஞான ரீதியாகச் செல்லுபடியாகும் என்பதையும் எவையெவை ஏதோ வகையில் நடைமுறை சார்ந்து உருவானவை என்றும் எவ்வளவு தூரம் சமகால நடைமுறைக்கு உடன்பாடா னவை என்றும் விசாரிக்கும் கடமையை நாம் புறந்தள்ள இயலாது.

ஒவ்வொரு துறையிலும் பழைய அறிவு அதன் அடிப்படையும் ஆதாரமான அவதானங்களையும் நடைமுறை அனுபவங்களையும் அவற்றுக்குரிய சமூகச் சூழலையும் விட்டு வெகுதூரம் விலகி வந்துவிட்டது. அந்த விலகலின் விளைவாக அந்த அறிவின் ஒரு பகுதி புதிய சூழலிற் செல்லாததாகி விடுகிறது. விஞ்ஞான ரீதியான அணுகுமுறை அந்த அறிவின் செல்லுபடியான பகுதிகளை ஏற்றும் பிறவற்றைச் செப்பனிட்டும் நீக்கியும் புதிய அறிவை உள்வாங்கியும் முன் செல்லுகிறது. அவ்வாறு செய்ய இயலாமற் சமுதாயத்தின் பழமைவாதம் தடையாய் நிற்கிறது. மூடநம்பிக்கைகள் நிலைப்பதற்கு இது ஒரு முக்கிய காரணமாயுள்ளது.

நமது மரபுக்குள் விஞ்ஞானம் இருந்தாலும், ஒரு சமூகமாக நமது சிந்தனை முறை அடிப்படையில் விஞ்ஞான ரீதியானதாக இன்னமும் விருத்திபெற வேண்டியுள்ளது. நமது விஞ்ஞானிகளும் அறிஞர்களும் பலவேறு வகையான நிபுணர்களும் சோதிடம் முதலான பலவேறு மூடநம்பிக்கைகளிலிருந்து விடுபடாமலே உள்ளனர். அதுமட்டுமன்றிப் புதிதாக உருவாகிற மூட நம்பிக்கைகளையும் பலர் தயங்காமல் உள்வாங்கிக் கொள்ளுகின்றனர். இது நாம் இன்னமும் நிலவுடைமைச் சமுதாயச் சிந்தனையிலிருந்து விடுபடாமையின் ஒரு அடையாளந்தான்.

மூடநம்பிக்கைகள் நம் வாழ்வின் மீது ஆதிக்கம் செலுத்துவதை நாம் தடுத்து நிறுத்தாதவரை நமது சமூகமோ பண்பாடோ உயர்வு காணப்போவதில்லை. சமூக அக்கறையுடன் செயற்பட வேண்டிய நமது ஊடகங்கள் சோதிடம் போன்ற விடயங்களை வலிந்து ஊக்குவிக்கின்றன. பகுத்தறிவுக்கு ஒவ்வாத மத அடிப்படையிலான பலவேறு புனைவுகளையும் ஆன்மிகத்தின் பேரால் ஏமாற்று வேலைகளில் ஈடுபடுகிற 'துறவிகளையும்' விளம்பரப்படுத்துகின்றன. இதிற் பத்தி லொரு பங்கு முயற்சியாவது இந்தப் பொய்களைக் கேள்விக்கு உட்படுத்தி மக்களைப் பகுத்தறிவு வழிப்படுத்துகிற காரியங்களுக்குச் செலவாவதில்லை.

அறிந்து கொண்டே ஒரு சமுதாயத்தை அறியாமைப் படுகுழிக்குள் இட்டுச் செல்லுகிற முயற்சிகள் வன்மையான விமர்சனத்துக்கும் எதிர்ப்புக்கும் உட்பட வேண்டும். இது சமூக முன்னேற்றத்திலும் பண்பாட்டு வளர்சியிலும் அக்கறையுள்ள அனைவரதும் பொறுப்பாகும்.

சமூக அக்கறையுடன் செயற்படவேண்டிய ஊடகங்கள் மூட நம்பிக்கைகளுக்கு களமமைத்து ஊக்குவிக்கின்றன. கேள்விகளுக்கு உட்படுத்துவதற்குப் பதிலாக மூட நம்பிக்கைகளைப் பரப்பி சமூகத்தை அறியாமைப்படுகுழிக்குள் வீழ்த்தும் முயற்சிகள் தொடர்கின்றன.

## மாயாவதியின் தலித்திய ஆட்சி?

உத்தரப் பிரதேச மாநில சட்டப் பேரவைக்கு நடைபெற்ற தேர்தலில் மாயாவதி தலைமையிலான பகுஜன் சமாஜ் கட்சி தனிப்பெரும்பான்மையுடன் ஆட்சியைக் கைப்பற்றியுள்ளது. மொத்தமுள்ள 403 தொகுதிகளில் 402 தொகுதிகளுக்கு நடைபெற்ற தேர்தலில் தனித்துப் போட்டியிட்ட பகுஜன் சமாஜ் கட்சி 206 இடங்களைக் கைப்பற்றி அறுதிப் பெரும்பான்மை பெற்றுள்ளது. அக்கட்சியின் தலைவியான மாயாவதி உ.பி. யில் 4 வது முறையாக முதல்வராகியுள்ளார்.

"இது மகத்தான வெற்றி. இந்திய நாடாளுமன்ற அரசியல் வரலாற்றில் திருப்புமுனையை ஏற்படுத்தியுள்ள வெற்றி. ஈராயிரம் ஆண்டுகளாக ஒடுக்கப்பட்ட சாதியைச் சேர்ந்த ஒரு தலித் அதிலும் ஒரு பெண் கட்சியின் நிறுவனரான கன்ஷிராம் மறைந்து விட்ட நிலையில், எந்தக் கட்சியுடனும் கூட்டணி சேராமல் தனித்து நின்று பகுஜன் சமாஜ் கட்சித் தலைவியான மாயாவதி இம்மாபெரும் வெற்றியைச் சாதித்துள்ளார். ஒடுக்கப்பட்ட தலித் சாதியைச் சேர்ந்த மாயாவதி இந்தியாவிலேயே மிகப் பெரிய மாநிலமான உத்தரப் பிரதேசத்தைக் கட்டியாளப் போகிறார்" என்று பார்ப்பனப் பத்திரிகைகளே வியந்து பாராட் டுமளவுக்கு இந்தியாவையே தனது தேர்தல் வெற்றியால் திரும்பிப் பார்க்க வைத்துள்ளார் மாயாவதி.

"சாதியத்தை உடைப்போம் ஒடுக்கப்பட்ட சமுதாயத்தை ஒருங்கிணைப்போம்" என்று கன்ஷிராமை நிறுவனராகக் கொண்டு முழங்கிவந்த பகுஜன் சமாஜ் கட்சியின் கொள்கையும் லட்சியமும் மாயாவதியின் வீரவசனங்களும் ஓட்டுப் பொறுக்கி அரசியல் களத்தில் இன்று காலிப் பெருங்காயடப்பாவாகிவிட்டன.

"தலித் பிரச்சினையைத் தலித் மக்களால் மட்டுமே உணர முடியும். தலித்துகளுக்கு தலித்துகள் தான் தலைமை தாங்க வேண்டும். தலித்துகளே பிற கட்சிகளில் சோரதீர்கள். பிற ஆதிக்க சாதியினரை எமது கட்சியில் சேர்க்கவே மாட்டோம்" என்றெல்லாம் சவடால் அடித்து வந்த "பகுஜன்" சமாஜ் கட்சி இன்று பார்ப்பனர்களும் பிற ஆதிக்க சாதியினரும் முக்கிய பொறுப்புகளில் அங்கம் வகிக்கும் "சார்வஜன்" (அனைத்து சாதியினருக்குமான) கட்சியாகி விட்டது. மாயாவதியும் தமது கட்சி "சர்வஜன்" கட்சி தான் என்று பெருமையுடன் குறிப்பிடுகிறார்.

ஆதிக்க சாதியினரையும் அவர்களது கட்சிகளையும் மனுவாதிகள் என்று சாடிவந்த பகுஜன் சமாஜ் கட்சி இப்போது அதே மனுவாதிகளைத் தமது கட்சியின் முக்கிய பிரமுகர்களாக பொறுப்புகளில் அமர்த்தியுள்ளது. பார்ப்பன எதிர்ப்பு ஆதிக்க சாதி எதிர்ப்பு என்றெல்லாம் சவடால் அடித்து வந்த அக்கட்சி இன்று மனுவாதிகளின் நம்பகமான கூட்டாளியாக விட்டது.

கடந்த 2002 உ.பி. மாநில சட்டமன்றத் தேர்தலின்போது பார்ப்பனர்களுடன் சங்கமித்த மாயாவதி தமது கட்சியின் சார்பில் 36 பார்ப்பனர்கள் உள்ளிட்டு 96 ஆதிக்க சாதியினரை வேட்பாளர்களாக நிறுத்தினார். தற்போதைய 2007 தேர்தலில் 86 பார்ப்பனர்கள் உள்ளிட்டு 139 ஆதிக்க சாதியினரை தமது கட்சியின் வேட்பாளராக நிறுத்தினார். தலித்துகளுக்குத் தலித் துகள் தான் தலைமை தாங்க வேண்டும் என்று சவடால் அடித்து வந்த மாயாவதி சதிஷ்சந்திர மிஸ்ரா என்ற பார்ப் பனரையே தமது கட்சியின் பொதுச் செயலாளராக்கினார். இது தவிர ஒவ்வொரு

தொடர்ச்சி 15ம் பக்கம்

www.padippakam.com நன்றி - நூலகத்திட்டம்



# இலங்கையின் இருபதாம் நூற்றாண்டு

**இமயவரம்பன்**

## அறிமுகம்

வேலைப் பிரிவினையின் அடிப்படையில் நாகரிக சமுதாயங்கள் அனைத்தினதும் வரலாறு சாராம்சத்தில் வர்க்கப் போராட்டத்தின் வரலாறே. ஆனால் மாக்சியச் சிந்தனையின் தாக்கம் ஏற்படு முன்பு வரலாறு அவ்வாறு பார்க்கப்படவுமில்லை. அவ்வாறு பதியப்படவும் இல்லை. வரலாற்றிற்கு அடிப்படையான பரிமாணமும் வரலாற்று மாற்றங்களின் அடிப்படைக் காரணமும் மக்களே என்ற கருத்து மாக்ஸியத்தின் எழுச்சியின் பின்னரே நிலை கொண்டது. எனினும் முதலாளியம் ஆதிக்கஞ் செலுத்துகிற ஒரு உலகில் வரலாறு முதலாளிய மேன் மக்களின் சாதனைகளதும் வெற்றிகளதும் வரலாறாகப் பதிவாகிறது. தனிமனிதர்களது வரலாறாக ஒரு புறமும் பாராளுமன்றச் சனநாயக முறையின் விருத்தியின் விளைவாக அரசியற் கட்சிகளதும் குறிப்பாக அவற்றின் தலைவர்களது அல்லது தலைமைகளின் வரலாறாகவும் முதலாளிய நிறுவனங்களதும் அவற்றினை அடையாளப்படுத்தும் பிரமுகர்களதும் வரலாறாகவே முன்னிறுத்தப்படுகிறது.

அடிமைச் சமுதாயங்களிலும் நிலவுடைமைச் சமுதாயத்திலும் மனித சமுதாயத்தின் வியக்க வைக்கும் சாதனைகள் எல்லாமே தனி மனிதர்களது, அதாவது மன்னர்களதும் ஆளும் அதிகார வர்க்கங்களின் தலைமையில் இருந்தவர்களதும் சாதனைகளாகவே பதியப்பட்டுள்ளன. அல்லது எஞ்சியுள்ள பதிவுகளாக உள்ளன. இவ்வாறான பதிவுகளின் பாதகமான விளைவுகளில் ஒன்று வரலாற்றில் ஏற்பட்ட மாற்றங்களின் காரணங்கள் தனிமனிதர் சிலரும் அவர்கட்கிடையிலான உறவும் பகையும் என்ற ஒரு கண்ணோட்டமாகும். அதே வேளை ஒவ்வொரு நிகழ்விற்கும் அடிப்படைக் காரணமாக அமைந்த சமூக அசைவுகளும் வெவ்வேறு சமூகப்பிரிவுகளின் குறிப்பாக வர்க்கங்களின் இடையேயிருந்த முரண்பாடுகளும் பற்றிய பதிவுகள் மிகவும் மங்கலாகவே உள்ளன. அவற்றை எழுதப்பட்ட வரலாற்றுப் பதிவுகளிலிருந்து மறைமுகமாக ஊகித்தும் உய்த்தறிந்துமே அறிய முடிந்துள்ளது.

வரலாறு என்பது வெறுமனே நிகழ்வுகளின் பதிவு அல்ல. அதில் எது பதியப்படுகிறது எது விடுபடுகிறது எது திரித்தோ மாற்றியோ எழுதப்படுகிறது என்பனவெல்லாம் அதிகாரம் பற்றிய கேள்வியுடன் தொடர்புடையவை. எந்த விதமாக ஒரு மொழியின் இலக்கண நூல் மொழி பற்றிய விவரணமாகவும் அதே வேளை செம்மொழியை வரையறுத்து மொழியின் சில கூறுகளை மறுப்பதாகவும் இருக்கிறதோ, அவ்வாறே வரலாற்று நூல்களும் தெரிந்தெடுக்கப்பட்ட பதிவுகளாக இருப்பதன் மூலம் சமூகத்தின் கடந்த காலத்தைக் குறிப்பிட்ட ஒரு விதமாகச் சித்தரிப்பதுடன் எதிர்காலம் எவ்வாறு அமைய வேண்டும் என்று வழி நடத்தவும் முற்படுகின்றன. இந்த விதமான பார்வை வரலாற்றின் நேரடியான பதிவுகள் என்று சொல்லக்கூடிய ஆவண வடிவிலான பதிவுகளில் மட்டுமில்லாமல் கலை- இலக்கியங்கள், அறநூல்கள், போன்ற பிற வடிவங்களிலும் வெளிப்படுகிறது.

நமக்குச் சொல்லப்படுகிறவை உண்மைகளா பொய்களா என்பது ஒரு புறமிருக்க அவை ஏன் குறிப்பிட்ட விதங்களிற் சொல்லப்பட்டுள்ளன என்றும் தொடர்ந்துஞ் சொல்லப்பட்டு வருகின்றன என்றும் நாம் சிந்திக்கக் கடமைப்பட்டுள்ளோம். எழுதப்பட்ட வரலாறு குறிப்பிட்ட சில வர்க்க நலன்களாற் சிறைப்பிடிக்கப்பட்டுள்ளது. சமூக விடுதலைக்கான போராட்டம் தவிர்க்க முடியாமலே வரலாற்றையும் விடுவிக்கிற ஒரு போராட்டமாகவும் அமைய நேருகிறது. நாம் விரும்புகிற மனித சமத்துவமுள்ள ஒரு சமூகத்தை அடைய வேண்டுமாயின் சமூக மாற்றங்கள் எவ்வாறு நேர்ந்தன அந்த மாற்றங்களின் பின்னாலிருந்த இயங்கு சக்திகள் எவை அவற்றை இயலுமாக்கிய சூழ்நிலைகள் எவை என்ற உண்மைகளின் அடிப்படைக் கூறுகளை எழுதப்பட்ட வரலாற்றினுள் இருந்த வடிகட்டி எடுக்க வேண்டிய தேவை நமக்குள்ளது.

"மகாத்மா" காந்தி இந்தியாவுக்குச் சுதந்திரம் வாங்கித் தந்தார் எனும் போது யாருடைய இந்தியாவுக்கு யாரிடமிருந்து வாங்கித்தந்தார் என்ற கேள்வியும் கூட எழ வேண்டும். அது பொதுவாக எழுவதில்லை. பாட நூல்கள் அவ்வாறு எழுதுவதை அனுமதிப்பதில்லை. காந்தி தான் அதைச் செய்தார் என்று ஏன் குழந்தைகட்குப் போதிக்கப்படுகிறது? காந்தியின் தலைமைத்துவமும் அவரது தனிப்பட்ட பங்களிப்பும் முக்கியமானவை. ஆனால் இந்திய விடுதலைப் போராட்டம் முழுவதையும் அதன் வர்க்க, சாதிய, இன- மத அடிப்படைகளிலான, பாலடிப்படையிலான ஒடுக்கு முறைகட்கு எதிராக பல வேறு எழுச்சிகளையும் 'மகாத்மா' என்கிற திரைச் சீலையால் மூடுகிற முயற்சியின் நோக்கமென்ன என்றும் நாம் சிந்திக்க வேண்டும்.

மாஓவைச் சீனா இன்னமுங் கொண்டாடுகிறது. எனினும் மாஓ சீன விடுதலையை வென்றெடுத்தார் என்று சொல்லப்படுவதில்லை. மாஓவின் தலைமைத்துவத்தின் முக்கியத்துவத்தைக் கொண்டாடுகிற போது சீனக் கம்யூனிஸ்ற் கட்சியின் வழிநடத்தல் மட்டுமன்றிச் சீன மக்களது போராட்டமும் அந்நிய ஆக்கிரமிப்பாளர்கட்கும் உள்நாட்டுப் பிற்போக்குச் சக்திகட்கும் எதிரான வெகுசனப் போராட்டங்களும் சீன மக்கள் படையின் தீரமிக்க போரும் சேர்த்தே பேசப்படுகின்றன. இந்தியாவின் சில நவீன வரலாற்றாய்வாளர்களும் முற்போக்குச் சிந்தனையுள்ளோரும் இந்திய வரலாற்றுக்கு இவ்வாறான ஒரு பரிமாணத்தை வழங்குவதாலேயே இன்று சாதாரண மக்கள் மத்தியிலிருந்து எழுந்த பகத்சிங் போன்ற போராளிகளைக் கொண்டாடும் சூழல் உருவாகியுள்ளது.

> சமூக விடுதலைக்கான போராட்டம் தவிர்க்க முடியாமலே வரலாற்றையும் விடுவிக்கிற ஒரு போராட்டமாகவும் அமைய நேருகிறது.

டி. எஸ். சேனநாயக்கவை இலங்கையின் "தேச பிதா" என்று வற்புறுத்திக் கூறப்பட்ட ஒரு காலம் இருந்தது. யூ. என். பி ஆட்சி 1956ல் கவிழ்ந்ததோடு அது கொஞ்சம் பலவீனப்பட்டாலும், இன்னமும் ஆளும் அதிகார வர்க்கம் தனது பிரதி நிதியை நாட்டின் பிரதிநிதியாகவும் காட்டி வரும் போக்கு நீடிக்கவே செய்கிறது. ஒரு சராசரி இந்தியக் காங்கிரஸ் தொண்டனளவுக்குக் கூட வெள்ளையர் ஆட்சிக்கு எதிராக நிமிர்ந்து நிற்காதவர்களில் ஒருவர் டி.எஸ். சேனநாயக்கா. அவரது உயர் வர்க்க அடையாமும் கொலனிய விசுவாசமுங் காரணமாக சுதந்திர இலங்கையின் ஆட்சிப் பொறுப்பை கையேற்க நேர்ந்த ஒருவருக்கு அந்த இடத்தை வரலாறு என்பது ஒதுக்கித்தான் வைத்திருக்கிறது.

மேற் கூறியவாறான பொய்கள் வரலாறாகவும் செய்திகளாகவும் நம்மிடையே உலாவுகின்றன. மேலும் மேலும் புனைவுகளாலானவையாகிவரும் இன்றைய செய்திகளிலிருந்து தான் ஆளும் வர்க்கத்தின் வரலாற்றாசிரியர்கள் நாளைய வரலாற்றைப் புனையப் போகின்றனர். எனவே அதற்கு எதிரான முறையில் அதிலிருந்து மாறுபட்ட ஒரு அணுகுமுறையுடன் இன்னொரு வரலாறு எழுதப்பட வேண்டிய தேவை நம்முன் உள்ளது. அதை எழுதும் பொறுப்பு சமூக விடுதலைக்காக அர்ப்பணிப்புடன் இயக்கக் கூடிய ஆய்வறிவாளர்களுக்கு உண்டு. அதற்கான சரியான திசைகளை அவர்கள் தீர்மானிக்க வேண்டியுள்ளது. குறிப்பாக இலங்கையின் வரலாறு மன்னர்களுடையதும் ஆளும் வர்க்க பிரமுகர்களதும் சாதனைகளதும் மோதல்களதும் வெற்றி தோல்விகளதும் வரலாறாகவே பதியப்பட்டதும் போதாமல் தேசிய இனங்களிடையிலான ஒரு நிரந்தரப் பகைமையின் வரலாறாகவும் காட்டப்பட்டு வருகிறது. இந்த விதமான வரலாற்றுச் சித்தரிப்பின் நேரடியான விளைவாக இன்றைய போர்ச் சூழல் அமைந்தது என்பது என் வாதமல்ல. ஆனால் இச் சூழலை உருவாக்க விரும்பியவர்களது கையில் மேற்கூறிய வரலாற்றுத் திரிப்பு ஒரு வசதியான கருவியாக இருந்து வந்துள்ளது என்பதில் எனக்கு ஐயமில்லை.

இனங்களிடையிலான பகைமையாக வரலாறு சித்தரிக்கப்படுகிறபோது உண்மையாகவே சமூக முரண்பாடுகளின் வேராக இருந்து வந்துள்ள அடிப்படையான சமூகப் பிரிவுகள் அதாவது சமூக ஏற்றத்தாழ்வுகளை அடையாளப்படுத்துகிற பிரிவுகள் மறைக்கப்படுகின்றன. இக் கட்டுரைத் தொடரின் முக்கியமான ஒரு நோக்கம் எழுதப்பட்ட வரலாறு அழுத்தந் தராத அந்தப் பக்கங்களை அடையாளங்காணுவது. இன்னொரு நோக்கம் வரலாறு ஏன் குறிப்பிட சில விதங்களில் நமக்குக்ட் கூறப்பட்டுள்ளது என்பது பற்றிய கேள்விகளை எழுப்புவது. எல்லாவற்றிலும் முக்கியமானது நமது வரலாறு பற்றிய ஒரு மக்கள் சார்பான வெகுசனப் பார்வையை வெகுசனங்கள் மத்தியிலிருந்து எழச் செய்யலாம் என்ற நம்பிக்கை. அத்திசையிலான ஒரு நகர்வுக்கு இத் தொடர் ஒரு அற்பப் பங்கை வழங்குமாயினும் அது பற்றி மகிழ்ச்சியடைவேன். ஏனெனில் நான் வரலாற்றாசிரியனல்ல. மாறாக நல்ல புதிய வரலாற்றாசிரியர்களது உருவாக்கத்தை வேண்டி நிற்கும் ஒரு சமூக அரசியல் மாணவன்.

இக் கட்டுரை இலங்கையில் தேசியவாத அரசியல் எழுச்சி பெற்று ஆதிக்கத்திற்கு வந்த ஒரு நூற்றாண்டினது வரலாற்றின் வர்க்கப் பரிமாணங்களையும் உற்பத்தி உறவுகளையும் மனிதர் மீது மனிதர் ஆதிக்கஞ் செலுத்திச் சுரண்டி ஒடுக்குவதற்கு அடிப்படையான பிற பரிமாணங்களையும் முக்கியப்படுத்துகிறது. இது வரலாற்றின் மறு வாசிப்பல்ல. ஒடுக்கப்பட்டோரின் வர்க்கக் கண்ணோட்டத்திலிருந்து மறுவாசிப்புக்களை வேண்டி நிற்கும் ஒரு அழைப்பு என்று வேண்டுமானால் வைத்துக் கொள்ளலாம்.

# பெண்களுக்கு 33% ஒதுக்கீடு வழங்க முடியாத நாட்டில் முதல் பெண் ஜனாதிபதி

**நமன்**

இந்தியா உலகிலேயே மிகப் பெரிய ஜனநாயக நாடு என்ற கட்டுக் கதை இன்றும் நீடித்து வருகிறது. பித்தலாட்டங்களும் ஏமாற்றுக்களும் மோசடிகளும் ஊழல்களும் வேடங்களும் கொண்டு இந்திய மக்களைச் சுரண்டி அடக்கி ஒடுக்கி வரும் ஆட்சி முறைக்குத்தான் ஜனநாயகத் தங்க முலாம் பூசப்பட்டிருக்கிறது. இதில் ஒரு வெறும் இறப்பர் முத்திரைப் பதவிகள் தான் ஜனாதிபதி, உப ஜனாதிபதிப் பதவிகள். இந்த கையொப்பமிடும் பதவிக்கு அண்மையில் தேர்தல் இடம் பெற்றது. பிரதிபா பட்டீல் என்ற 72 வயதுள்ள வழக்கறிஞரான பெண்மணி தெரிவு செய்யப்பட்டிருக்கிறார். இதனை வைத்து இந்திய- இலங்கை ஊடகங்கள் இந்தியாவின் "முதல் பெண் ஜனாதிபதி" என்ற மகுடமிட்ட தலைப்புகளை வெளியிட்டு வருகின்றன. இந்திய ஜனநாயகத்தின் 'அருமை பெருமைகளை' பக்கம் பக்கமாக எழுதியும் வருகின்றன.

இந்த "முதல்" என்ற சொல்லுக்கு ஏற்கனவே பலர் வந்திருக்கிறார்கள். "முதல் தெலுங்கர்" "முதல் தலித்" "முதல் இஸ்லாமியர்" "முதல் தமிழர்" 'முதல் குரங்கு' என்ற பிரச்சார வரிசையில் தான் "முதல் பெண்மணி" என்று இப்போது ஊதிப் பெருப்பிக்கிறார்கள்.

பெண் ஆண் என்பதல்ல பிரச்சினை. எந்தவர்க்கத்தின் சார்பாக எந்த மக்களுக்காக ஆட்சி செய்வது என்பதே முக்கியமான பிரச்சினையாகும். இந்திரா காந்தி பதவிக்கு வந்த போது இந்தியாவின் முதல் பெண் பிரதமர் என்று வெற்றிச் சங்கு ஊதப்பட்டது. சோனியா காந்தி காங்கிரசின் பிடியைத் தன் கையில் வைத்து இந்திய மக்களை அடக்கி ஒடுக்கும் கொள்கையை நடத்துவதும் பெண் என்ற மேலதிக அடையாளத்துடன் தான். அண்மையில் உத்தரப் பிரதேசத்தில் ஆட்சிக்கு வந்த மாயாவதியும் பெண் என்றும் தலித் என்றும் தன்னைத்தானே கூறி நிற்கிறார். தமிழகத்தில் ஜெயலலிதா ஆட்சிக்கு வருவதற்கும் பெண் என்ற அடையாளம் நன்கு பயன்படுத்தப்பட்டது. இவர்கள் அனைவரினதும் ஆட்சிகளை இந்திய மக்கள் அனுபவித்திருக்கிறார்கள்.

இலங்கையில் கூட 1960துகளின் ஆரம்பத்தில் சிறிமாவோ பண்டாரநாயக்கா "உலகின் முதல் பெண் பிரதமர்" என்ற பெயருடன் தான் பதவிக்கு வந்தார். 1994ல் சந்திரிகா இலங்கையின் நிறைவேற்று அதிகாரம் கொண்ட "முதல் பெண் ஜனாதிபதி" என்று தான் வரவேற்கப்பட்டார். ஆனால் இந்தப் பெண் அடையாளம் காட்டப்பட்ட ஆட்சித் தலைவர்களால் மக்களுக்காக எவை சாதிக்கப்பட்டன என்பதே சிந்தனைக்குரியதாகும்.

ஆதலால் இந்தியாவில் பெண், தலித், முஸ்லீம், சீக்கியர், தமிழர், தெலுங்கர் என்போர் அரசுத் தலைவர்களாக வருவது புதுமையல்ல ஏமாற்றத் தெரிந்த இந்திய ஆளும் வர்க்க ஜனநாயகத்தில் அடுத்த ஜனாதிபதியாக படித்து மேனிலையாக்கம் பெற்ற பழங்குடியினரைச் சேர்ந்த ஒருவர் வந்தாலும் ஆச்சரியப்படுவதற்கு இல்லை. அது இந்திய ஜனநாயகத்தில் கடைப்பிடிக்கப்படும் தாராளப் போக்கின் வெளிப்பாடல்ல. இந்திய நிலவுடைமை முதலாளித்துவ ஆளும் வர்க்கத்தின் கபடத்தனமான வேடத்தின் ஒரு பகுதி யேயாகும்.



இந்தியப் பெருநிலப்பரப்பில் பெண்களின் மோசமான நிலை விபரிக்க முடியாத அளவுக்கு மோசமடைந்து காணப்படுகிறது, தொழிலாள விவசாய தலித் பழங்குடி மற்றும் உழைக்கும் கோடானு கோடி இந்தியப் பெண்களின் வாழ்க்கை நிலையை பிரதிபா பட்டீல் என்ற ஆளும் வர்க்க மேட்டுக்குடிப் பெண் எவ்வகையிலும் பிரதிநிதித்துவம் செய்யப் போவதில்லை. இன்று வரை பெண்களுக்கான 33 சதவீத இட ஒதுக்கீட்டை பாராளுமன்ற த்தில் சட்டமாகக் கொண்டு வர முடியாத அவலத்தில் உள்ள ஒரு நாட்டிலே தான் முதல் பெண் ஜனாதிபதி என்ற

தொடர்ச்சி 15 பக்கம்

www.padippakam.com நன்றி - நூலகத்திட்டம்



# உலக அரங்கின் நாட்குறிப்பு

உலகோன்

## அங்கும் இங்கும்

பாகிஸ்தானிய ஊடகவியலாளர்கள் யூலை 07ம் திகதியை ஊடகங்களுக்கான "கறுப்புத்தினமாக" அனுஷ்டித்தனர். அரசுக்கெதிரான எந்தவொரு செய்தியையும் வெளியிட முடியாத அளவுக்கு தணிக்கை நடைமுறையில் உள்ளது. இது குறித்து கருத்து தெரிவித்த பாகிஸ்தானிய ஊடகத்துறை அமைச்சர் "முன்னெப்போதும் இல்லாத அளவு ஊடக சுதந்திரம் இப் போது பாகிஸ்தானில் இருக்கிறது. அரசையும் ஜனாதிபதி யையும் அளவுக்கதிகமாக விமர்சிக்கிறார்கள். அந்தளவு ஊடக சுதந்திரம் இங்கே இருக்கிறது. அவர்கள் விரும்பியதை எல்லாம் அவர்கள் சொல்லலாம். நாங்கள் வேண்டுவதெல்லாம் அவர்களின் சுயதணிக்கைப் போக்கையே" அடடே எங்கேயோ கேட்ட குரல் மட்டுமல்ல.... இங்கேயே அடிக்கடி கேட்கும் செய்தியும் தான்.

## யார் விலகுவது யார் விலக்குவது

10 ஆண்டுகால மக்கள் போராட்டங்களின் மூலம் நேபாளத் தில் மன்னராட்சியை முடிவுக்கு கொண்டுவரப் போராடி அதி லும் வெற்றியும் பெற்ற நிலையில் நேபாள பிரதமர் கொய்ராலா மிக அருமையான திட்டமொன்றை முன் மொழிந்துள்ளார். "மக்களின் நம்பிக்கையை மன்னர் கயனேந்திரா இழந்ததாலேயே மக்கள் போராட்டங்கள் வெடித்தன. இதற்காக மன்னராட்சியை ஒழித்தல் நியாயமாகாது. எனவே மன்னரின் 5 வயதுப் பேரனை மன்னராக்கினால் எல்லாம் சரியாகிவிடும். மன்னராட்சியை ஒழிப்பது சரியல்ல. மன்னர் கயனேந்திரா மீது தான் மக்களுக்குக் கோபமே தவிர மன்னராட்சி மீதல்ல. பேர னை மன்னராக்கினால் எவ்வித பிரச்சினையுமில்லாமல் கயனேந்திரா மக்கள் நலன்கருதி விலகிக்கொள்வார்." கொய்ரா லாவின் அரச விசுவாசம் என்னே!

நேபாள மக்கள் போராடியது மன்னராட்சியை ஒழிப்ப தற்கே........ மன்னரை மாற்றுவதற்கல்ல........ மன்னர் என்ன விலகிக்கொள்வது மக்கள் தான் விலக்கியாயிற்றே.......

## திறந்த மனதுடன் இருப்பவர்

நான் எப்போதும் திறந்த மனதுடன் மனித உரிமைகளுக்கும் மனித உயிருக்கும் மதிப்பளிப்பவன். சுதந்திரத்தில் நம்பிக்கை உள்ளவன். அமெரிக்கா அன்பு மயமானது நாங்கள் எங்கெல் லாம் போகின்றோமோ அங்கெல்லாம் அன்பும் பாசமும் குடி கொண்டு இருக்கும். உலக மக்களின் குரல்கட் க்கு நான் செவிசாய்க்கிறேன்." இந்த உலகமே கொடுத்து வைத்த ஒரு மகானின் வாயிலிருந்து உதிர்ந்த சொற்கள் இவை. அந்த மகான் வேறு யாருமல்ல. அமெரிக்க அதிபர் புஷ் தான். அவர் திறந்த மனதுடன் இருப்பதால் தான் ஈராக்கும், ஆப்கானிஸ் தானும் இஸ்ரேலிலும் வேறு பல நாடுகளும் அமைதியாகவும் அன்புமயமாகவும் இருக்கி ன்றன.

திறந்த மனதுடன் இருப்பது என்பது இதுதான் போலும்........

## சமாதான சக வாழ்வு

பாலஸ்தீனர்கள் குறித்துக் கருத்துத் தெரிவித்த இஸ்ரேலியப் பிரதமர் "சமாதானமாக வாழ்வது என்றால் என்ன வென்றே தெரியாதவர்கள் பாலஸ்தீனர்கள். சமாதானமாய் வாழ விருப்பம் கூட இல்லாதவர்கள் அவர்கள். இஸ்ரேலியர் சமாதான சக வாழ்வை விரும்புகிறார்கள். ஆனால் சமாதானம் என்றால் என்னவென்றே தெரியாதவர்களிடம் எப்படி சமாதானமாக வாழ்வது" என்று கேட்டிருக்கிறார்.

இவரது கேள்வி நியாயமானதே. எப்போதும் இஸ்ரேலிய ஆக்கிரமிப்புக்குள்ளேயே தனது தேசத்தில் அடிமைகள் போல வாழ வைக்கப்பட்டிருப்பவர்களுக்கு சமாதானம் என்றால் என்னவென்றே தெரியாது தான். மற்றவனை அடிமைப்படுத்தி தான் மகிழ்ச்சியாக வாழ்வதே சமாதானமான வாழ்வு என்று அர்த்தப்படுத்திக் கொண்ட இஸ்ரேலியர்கள் சொல்கின்ற சமாதான சகவாழ்வு பலஸ்தீனர்களுக்குத் தெரியாது தான்.

## புஷ்சின் திருப்தி

ஈராக்கில் அமெரிக்கப் படைகள் செய்து வரும் பணிகள் தனக்கு முழுத் திருப்தியைத் தருவதாக அமெரிக்க ஜனாதிபதி ஜோர்ஜ் டபிள்யூ புஷ் தெரிவித்துள்ளார். அமெரிக்கத் துருப்பினர் ஈராக்கிய மக்களின் ரத்தத்தையும் எண்ணெயையும் உறுஞ்சும் பணியினையே செய்து வருகிறார்கள் என்பது உலக மக்கள் அறியாத இரகசியமல்ல. அப்படி இருந்தும் அமெரிக்க ஏகாதிபத்திய கொள்கை வகுப்பாளர்கள் தமது உலக மேலாதிக்கத்திற்காக அலைவதை நிறுத்துவார்களா. புலி புல்லுத் தின்ன மாட்டாது தானே!


# அமெரிக்க ஏகாதிபத்தியத்தை இறுதிவரை எதிர்த்து நிற்கும் தோழர் பிடல் கஸ்ட்ரோ

## 81வது வயதில் காலடி எடுத்து வைக்கிறார்

ஆகஸ்ட் 13, 1926-ல் காஸ்ட்ரோ ரூஸ் முன்னாள் ஓரியண்ட் மாகாணத்தில் உள்ள பைரனில் பிறந்தார். அவரது குடும்பம் செல்வச் செழிப்பு மிக்கதும் ஏராளமான நிலங்களை உடையதும் ஆகும். அவர் ஸாண்டியாகோ டிகியூபாவிலும் ஹவானாவிலும் சிறந்த கத்தோலிக்கப் பள்ளிகளில் படித்து பின்னர் ஹவானா பல்கலைக்கழகத்தில் சட்டம் பயின்று 1950 ஆம் ஆண்டு பட்டம் பெற்றார்.

பல்கலைக்கழகத்தில் பயிலும் போது அரசியல் ஊழலுக்கு எதிரான மாணவர் குழுவில் இணைந்தார். 1947-ல் கியூப மக்கள் கட்சியில் (மரபுக் கட்சி- Orthodox Party என்றும் அழைக்கப்பட்டது) உறுப்பினராக இருந்தவர். அதன் இடதுசாரிப் பிரிவுக்குத் தலைவரானார். அதே வருடத்தில் டொமினிக்கன் குடியரசின் ட்ருஜில்லோ சர்வாதிகாரத்துக்கு எதிரான ஆயுதப் படையெடுப்பில் தம்மை இணைத்துக்கொண்டார். எனினும் இந்தப் படையினர் தமது திட்டத்தை நிறைவேற்ற கியூபாவை விட்டு வெளியேற இயலவில்லை. மாணவர் தலைவராக இருந்த காஸ்ட்ரோ லத்தீன் அமெரிக்க ஏகாதிபத்திய எதிர்ப்பு மாணவர் காங்கிரஸைக் கூட்ட உதவும் வகையில் வெனிசுலா, பனாமா, கொலம்பியா ஆகிய நாடுகளுக்குச் சென்றார். இந்த மாநாடு அமெரிக்க உதவியில் உருவான அமெரிக்க மாநிலங்களின் அமைப்பின் துவக்க மாநாட்டுக்கு இணையாக நடத்தப்பட்டது. கொலம்பியாவில் அவர் இருக்கும் போது ஏப்ரல் 1948-ல் மிகவும் புகழ்பெற்ற பகோட்டா எழுச்சியில் பங்கு பெற்றார்.

மார்ச் 10, 1952-ல் பாடிஸ்டா ஆட்சியைப் பிடித்தபின் அமெரிக்க ஆதரவுடன் நடந்த பாடிஸ்டா சர்வாதிகார ஆட்சிக்கு எதிரான ஆயுத மேந்திய புரட்சியை நடத்த புரட்சிகரமான அமைப்பை உருவாக்கத் துவங்கினார். ஜூலை 26, 1953-ல் ஸாண்டியாகோவிலுள்ள மொன்காடா ராணுவக் காவல் படை மீது தாக்குதல் தொடுத்தார். ஆனால் அது தோல்வியடைந்தது. அதில் அவரும் மேலும் இரண்டு டஜன் போராளிகளும் சிறைப்பிடிக்கப்பட்டு, நீதிமன்ற நடவடிக்கைக்கு உட்படுத்தப்பட்டு, குற்றவாளிகள் எனத் தீர்மானிக்கப்பட்டு சிறையிலிடப்பட்டனர் மொன்காடா தாக்குதலின் போதும் அதை ஒட்டியும் 60 போராளிகளுக்கு மேல் பாடிஸ்டா ராணுவத்தால் கொலை செய்யப்பட்ட னர். சிறையிலிருக்கும் காஸ்ட்ரோ நீதிமன்றத்தில் சமர்ப்பித்த தமது தற்காப்பு உரையைச் செழுமைப்படுத்தி "வரலாறு என்னை விடுவிக்கும்" என்ற பிரசுரத்தைத் தயாரித்தார். அது பத்தாயிரக்கணக்கான பிரதிகள் விற்கப்பட்டதுடன் ஜூலை 26 இயக்கத்தின் திட்டமாகவும் மாறியது. அவருக்கும் அவர் தோழர்களுக்கும் 15 ஆண்டுகள் சிறைத் தண்டனை விதிக்கப்பட்டிருந்தும் அதிகரித்து வந்த மக்கள் பிரச்சாரத்தின் காரணமாக 22 மாதங்கள் கழித்து அவர்கள் மே 1955-ல் விடுதலை செய்யப்பட்டனர்.



1955, ஜூலை 7 அன்று காஸ்ட்ரோ மெக்ஸிகோ பயணமானார். அங்கிருந்து அவர் கியூபாவில் ஒரு ஆயுதமேந்திய புரட்சியை நடத்தும் நோக்குடன் ஒரு கொரில்லாப் படையை திரட்டத் துவங்கினார். 1956 டிசம்பர் 26 அன்று அவர் தனது சகோதரர் ரஷில், சேகுவேரா, கமிலோ சின்பியுகோஸ், ஜுவான் அல்மெய்டா, ஜூல்ஸ் மொன்டேன் உள்ளிட்ட 81 சக போராளிகளுடன் 'கிரான்மா' என்ற கப்பல் மூலம் கியூபக் கடற்கரையை அடைந்தார். அடுத்த 2 ஆண்டுகளில் காஸ்ட்ரோ ஜூலை 26 இயக்கத்தின் மத்தியத் தலைவராகத் தொடர்ந்ததுடன் புரட்சி இராணுவத்தையும் வழிநடத்தினார். துவக்கத்தில் சிறிது பின்னடைவு ஏற்பட்டாலும் பின்னர் புரட்சிப் படை தன்னை மீண்டும் புனரமைத்துக் கொண்டு தனது போராட்டத்தை சியரா மேஸ்ட்ரா மலைகளிலிருந்து தீவு முழுவதும் வெற்றிகரமாக விஸ்தரிக்க முடிந்தது.

ஜனவரி, 1, 1959 அன்று கியூபாவை விட்டு பாடிஸ்டா ஓடிவிட்டார். காஸ்ட்ரோவின் அறைகூவலை ஏற்று பல்லாயிரக் கணக்கான கியூப மக்கள் புரட்சிக்கு ஆதரவாகப் பொது வேலை நிறுத்தத்தை நடத்திப் புரட்சியை வெற்றிகரமாக்கினார். ஜனவரி 8 அன்று காஸ்ட்ரோ வெற்றிகரமாக கியூபப் புரட்சி ராணுவத்தின் தலைமைத் தளபதியாக ஹவானாவினுள் நுழைந்தார். பிப்ரவரி 13, 1956 அன்று அவர் பிரதம மந்திரியாகப் பொறுப்பேற்றார். டிசம்பர் 1979 வரை அந்தப் பதவியை வகித்த அவர் தேசிய சபையின் ஜனாதிபதியாகவும் மந்திரிசபையின் தலைவராகவும் பொறுப்பேற்றார். 1965-ல் கியூபக் கம்யூனிஸ்ட் மாக்சிலெனினிசக் கட்சியாகப் புனரமைப்புச் செய்யப்பட்டதிலிருந்து அதன் மத்தியக் குழுவின் முதல் செயலாளராகவும் இருந்து வருகிறார்.

# முஸ்லீம் தேசிய இன அடையாளம் வளர்ச்சியும் முரண்பாடுகளும்

## எம். ஏ. நுஃமானின் ஆங்கில நூலுக்கு ஒரு விமர்சனம்

இலங்கை முஸ்லீம்கள் - பண்பாட்டு பண்மைத்துவத்துள் இனத்துவ அடையாளம். எம்.ஏ.நு.ஃமான், ICES கொழும்பு- 08, 2007 ப. 234+ XI (விலை குறிப்பிடப்படவில்லை)

இலங்கை முஸ்லீம்கள் ஒரு தனித்துவமான சமூகம் என்பதையோ அவர்கள் ஒரு தேசிய இனமாக விருத்தி பெற்று வந்துள்ளனர் என்பதையோ ஏற்பதில் தமிழ்த் தேசியவாதிகட்கு முதலிலிருந்தே தயக்கம் இருந்து வந்துள்ளது. சிங்களத் தேசியவாதிகளைப் பொறுத்தவரை குறிப்பாகப் பேரினவாதிகளைப் பொறுத்தவரை, முஸ்லீம்களின் அடையாளம் பற்றிய அக்கறை எந்தவிதமான அங்கீகாரமும் பற்றியதாக இருக்கவில்லை. முஸ்லீம்களுடைய பாரம்பரிய வாழிடங்கள் பற்றி ஏதாவது பேரினவாத அக்கறை இருந்திருந்தால் அது தமிழ்த்தேசியவாதத்தின் பிரதேசக் கோரிக்கையைப் பலவீனப்படுத்துவதை விட வேறு எது தொடர்பானதாகவுமே இருந்ததில்லை.

முஸ்லீம் சமூகம் எவ்வாறு தனது அடையாளத்தைத் தமிழரினதினின்று தனித்துவமான ஒன்றாக நிறுவியது என்பதை இந்த நூல் விரிவாக விளக்குகிறது. முஸ்லீம்களது வருகை தொட்டு எவ்வாறு இந்த அடையாளம் உருவாக்கம் பெற்று வந்தது என்பதையும் பலவேறு சமூகப் பிரிவுகளாயிருந்த முஸ்லீம்கள் எவ்வாறு மத அடிப்படையிலான ஒரு அடையாளத்தினுள் வருகின்றனர் என்பதையும் இந்த நூல் விளக்குகிறது. அண்மைக் காலத்தில் தென்னிலங்கையில் சிங்கள மொழி நோக்கிய நகர்வையும் நூல் அடையாளங்காட்டுகிறது.

முஸ்லீம்களின் தனித்துவத்தை மறுக்கிற எந்தத் தமிழ்த் தேசியவாதியும் அறிய வேண்டிய பல உண்மைகளை உள்ளடக்கிய இந்த நூல், சில எழுத்துப்பிழைகளுஞ் சொற்பிழைகளும் போக மிகவும் கவனமாகவும் தெளிவாகவும் எழுதப்பட்டு நேர்த்தியாகவும் எளிமையாகவும் வழங்கப்பட்டுள்ளது. இந்த நூலின் முக்கித்துவங்கருதியும் இந் நூல் தமிழில் மொழி பெயர்க்கப்பட வேண்டியதன் தேவை கருதியும் அதிலுள்ள சில பாரிய குறைபாடுகளைச் சுட்டிக்காட்ட வேண்டிய தேவை உள்ளது.

தமிழரினின்று முஸ்லீம்களின் இன அடையாளம் வற்புறுத்தப்பட்டதன் பின்னணியில் பொன்னம்பலம் ராமநாதனுடனான விவாதங்கட்கு மிகுந்த முக்கியத்துவம் வழங்கப்பட்டுள்ளது. ராமநாதனின் முஸ்லீம் விரோதக் கருத்துக்களும் எடுத்துக் கூறப்பட்டுள்ளன. எனினும் முஸ்லீம்கள் பற்றிய தமிழ் மக்களது நிலைப்பாட்டை அடையாளப்படுத்த ராமநாதன் போதுமானவரா? முஸ்லீம்களின் தனித்துவத்தை மறுக்கும் ராமநாதனின் அணுகுமுறையே தமிழரசுக் கட்சி ஊடாக விடுதலைப்புலிகள் வரையும் தொடர்வதாகவே நூலிற் காணப்படுகிறது. இது எவ்வளவு தூரஞ்சரியானது என்பது ஒரு புறமிருக்க கொழும்புக் கனவானான ராமநாதன் காலத்தில் அவரது சகோதரர் அருணாசலம் ஒரு முக்கியமான தலைவராக இருந்தார். அவரது அணுகுமுறை என்ன? யாழ்ப்பாணத்தில் முக்கியமான அரசியல் அமைப்பாக உருவான வாலிபர் காங்கிரஸின் அணுகுமுறை என்ன? தமிழ் இடதுசாரிப்பாரம்பரியம் ஒன்றும் முற்போக்குப் பாரம்பரியம் ஒன்றும் இருந்தன. அவற்றின் அணுகுமுறை என்ன? இவை பற்றி நு.ஃமான் கவனங்காட்டியிருந்தால்அவை தமிழ்த் தேசியவாதத்தின் வர்க்கத் தன்மையையும் அதில் ஏற்பட்டு வந்த மாற்றங்களையும் வரலாற்றில் வைத்துப் பார்க்கிற விதமாகத் தமிழ்- முஸ்லீம் உறவுகள் பற்றிய ஒரு தெளிவான சித்திரம் ஒன்று நமக் குக் கிடைத்திருக்கும்.

முஸ்லீம்கள் சில இடங்களில் தமிழரிலும் அதிகமாக இடதுசாரி இயக்கத்திற், குறிப்பாகக் கம்யூனிஸ்ற் கட்சியில், ஈடுபாட்டுடன் செயற்பட்டனர். யாழ்பாண முஸ்லீம்களுக்கும் கம்யூனிஸ்ற்றுகட்கும் இருந்து வந்த நல்லுறவுக்கு அபுசாலி அவர்களை 1950களில் யாழ் மேயராக்கியதில் கம்யூனிஸ்ற் கட்சியினர் இடதுசாரியினர் ஆற்றிய பங்கு ஒரு சிறு சாட்சியம். 1960 களிலும் 1971- 72 காலத்திலும் பொலிஸாரால் தேடப்பட்ட மாக்சிச லெனினிசக் கம்யூனிஸ்ட் தோழர்களுக்கு, வீட்டினுட் பொதுவாக உறவினரல்லாத எந்த ஆணும் நுழைவதையே விரும்பாத முஸ்லீம் சமூகத்தினர், தங்கள் வீடுகளிற் தஞ்சம் அளித்துக் காப்பாற்றியதை இன்றும் கம்யூனிஸ்ட் தோழர்கள் நன்றியுடனும் பெருமிதத்துடனும் நினைவு கூருவர். 1964ல் கம்யூனிஸ்ட் கட்சிப் பிளவின் பின் மாக்சிச லெனினிசக் கட்சியின் வார இதழாக வெளிவந்த தொழிலாளி பத்திரிகைக்கு முதலில் எச்.எம்.பி. மொஹிதீனும் பின்பு இளங்கீரனும் ஆசிரியர்களாக இருந்தனர். இருவரும் முஸ்லீம்கள். 1960- 70களிலும் புரட்சிகர கம்யூனிஸ்ற் கட்சியின் அரசியற்குழுவிலும் மத்தியகுழுவிலும் முக்கிய பொறுப்புகளில் பல முஸ்லீம்கள் இருந்து வந்தனர். அங்கே முஸ்லீம்களின் அடையாளம் பற்றி எவ்விதமான பார்வை இருந்தது என்பது நூலாசிரியருக்கு முக்கியமான விடயமாகத் தெரியவில்லையா?

முஸ்லீம்கள் தமிழ் அடையாளத்தை மறுத்து இஸ்லாமிய அடையாளத்தை வற்புறுத்தினர் என்று நூலில் வற்புறுத்திக் கூறப்பட்டுள்ளது. இது சரியானதல்ல. தமிழர்கள் போல முஸ்லீம்கள் மொழிபற்றி உணர்ச்சி வசப்படுவதில்லை என்றுங் கூறப்பட்டுள்ளது. இதுவும் சரியானதல்ல. முஸ்லீம்களின் தமிழ் மொழிப்பற்று தமிழர்களினதை விட எவ்வகையிலும் குறைவானதல்ல. வடக்கு கிழக்கின் தமிழ் நடுத்தர வர்க்கத்தை சிங்கள மொழிச்சட்டம் பாதித்தளவுக்கு முஸ்லீம் மலையகத் தமிழ் நடுத்தர வர்க்கத்தைப் பாதிக்கவில்லை என்பதை வைத்து மொழியுணர்வின் அரசியலை மதிப்பிடுவது பயனுள்ளது. அண்மை வரை பெருவாரியான முஸ்லீம்கள் தமது தமிழ் மொழி அடையாளத்தை மறுதலிக் கவில்லை. தமிழரிடமிருந்து தாம் வேறுபட்டவர்கள் என்பதை வலியுறுத்தத் தமது மத அடையாளத்தை அவர்கள் வற்புறுத்தினர். தமிழர் என்ற பேரில் ஒரு இன அடையாளம் இருந் தமை பிரச்சனையாயிருந்ததே ஒழிய, மொழி பிரச்சனையாயிருக்கவில்லை. நூலாசிரியர் நன்கு அறிந்துள்ளவாறு ஒரு பங்களதேஷ் முஸ்லீம் தன்னை வங்காளியாகவும் தமிழக முஸ்லீம் தன்னைத் தமிழராகவும் பாக்கிஸ்தானிய முஸ்லீம்கள் தம்மை சிந்தியர், பஞ்சாபியர், பதன் இனத்தவர் என்று பலவாறாகவும் அடையாளங்காண இயலுவது ஏன்? பள்ளி வாசலுக்கே போகாத பொஸ்னிய முஸ்லீம்கள் மத அடையாளத்தை வைத்துக் கொண்டது ஏன்? இங்கெல்லாம் முக்கியமான விடயம் மதமல்ல. பிறரிடமிருந்து வேறுபடுத்தும் தேவை மட்டுமே.

நாளை தமிழே தெரியாத சிங்களம் பேசும் ஒரு முஸ்லீம் சமூகம் உருவானால், சிங்களமே தெரியாத ஒரு தமிழ்ப் பேசும்



முஸ்லீம் சமூகத்துடன் அதற்கு என்ன விதமான உறவு இருக்கும்? முஸ்லீம் தேசிய இனம் இரண்டு தேசிய இனங்களாகப் பிரியுமானால் அவை தம்மை எவ்வாறு வேறுபடுத்திக் கொள்ளும்? இன்று தமிழ் என்பது சொல்லத் தேவையற்ற ஒரு அடையாளம்; முஸ்லீம் என்பது சொல்லத் தேவையானது. நாளை இரண்டுமே தேவையானவையாகும். எனவே தான் மொழியை நிராகரித்து என்ற தர்க்கம் செல்லுபடியற்றதாகிறது. நிராகரித்து என்பது நூலாசியரது கவனயீனமான ஆயினும் புறக்கணிக்கக் கூடாத, ஒரு தவறான சொற்பிரயோகம் என்றே நினைக்கிறேன்.

இஸ்லாமியத் தமிழர் என்ற கருத்தாக்கம் இன்று 'விடுதலை' இயக்கங்களால் பாவிக்கப்படுவதைக் குறிப்பிடும் போது அதன் தோற்றுவாயைத் தமிழரசுக் கட்சி வழியே பொன்னம்பலம் ராமநாதனிடம் கொண்டு போய்ச் சேர்ப்பதும் சரியானதாகத் தோன்றவில்லை. இச் சொற்பிரயோகத்தின் தோற்றிடம் தமிழகம். தமிழகத்தில் அச் சொற்றொடரில் ஒரு நட்புணர்வுண்டு. அதன் பின்னணியில் திராவிட இயக்க அரசியல் இருந்தது. ஈ.வெ. ராவின் பார்ப்பனிய விரோத அரசியல் தமிழகத்தில் முஸ்லீம்களைத் தமிழருக்கு நெருக்கமாக்குவதில் பங்களித்தமையும் இங்கு குறிப்பிடத்தக்கது. தமிழகத்திலிருந்து வந்த இச்சொல்லில் உள்ள சகோதர உணர்வுடன் தமிழ் தேசியவிடுதலை இயக்கத்தினர் முஸ்லீம்களை அணுகினரா என்பது ஒரு புறமிருக்கத் "தமிழ்ப் பேசும் மக்கள்" என்ற தமிழரசுக் கட்சியின் அடையாளப்படுத்தலால் முஸ்லீம்களை மட்டுமன்றி மலையகத் தமிழரைக் கூட வடக்கு கிழக்கின் தமிழருடன் ஒரு தேசிய இனமாக்க இயலவில்லை என்பதை நூலாசிரியர் கவனித்திருந்தால் அவரது பார்வை பொன்னம்பலம் ராமநாதனுக்கும் அப்பால் வெகு தூரம் பாய்ந்திருக்கும்.

தமிழருக்கும் முஸ்லீம்களுக்கும் உள்ள முரண்பாடுகளில் நூலாசிரியரது விளக்கங்கள் போதியனவாக இல்லாத போதும் அதன் பின்னணி ஓரளவு தெளிவாகத் தரப்பட்டுள்ளது. ஆனால் சிங்கள- முஸ்லீம் முரண்பாட்டையும் சிங்களப் பேரினவாதம் முஸ்லீம்களை எவ்வாறு தொடர்ந்தும் இலக்கு வைத்து வருவதையும் இன்று கிழக்கில் தமிழ்த் தேசியவாதிகளைப் பலவீனப்படுத்த முஸ்லீம் அரசியல்வாதிகளையும் தமிழ்- முஸ்லீம் முரண்பாட்டையும் பேரினவாதம் தனக்கு வசதியாகக் கையாளுவதையும் பற்றி நூலில் உரிய கவனங் காட்டப்படவில்லை.

நூலின் முக்கியமான இன்னொரு பலவீனம் தனி மனிதர் சிலருக்கு வழங்கப்பட்டுள்ள தகுதி மீறிய முக்கியத்துவமும் அதையொட்டிய சில புனைவுகள் விசாரணையின்றி மீளக் கூறப்படுவதும் என்பேன். காலஞ்சென்ற பதியூத்தின் மஹ்முட்டுக்கு பண்டாரநாயக்க நியமன எம்.பி. பதவி வழங்கி அமைச்சராக்க விரும்பியதாகவும் பதியுத்தின் மஹ்முட் மறுத்ததாகவும் 1989வாக்கில் யாரோ எழுதியதை வேறு ஆதாரங்களின் துணையின்றி நம்புமளவுக்கு நூலாசிரியர் அப்பாவியாக இருக்கலாமா? 1956ல் சி. ஏ. எஸ். மரிக்கார் ஸ்ரீ.ல.சு.க சார்பில் கடுகண்ணாவையில் வெற்றி பெற்று அமைச்சரா னார். பண்டாரநாயக்காவின் அன்றைய நிலையில் இன்னொரு முஸ்லீம் அமைச்சர் பற்றியோ குறிப்பிடத்தக்க அரசியல் தளமுமோ அற்ற ஒருவரை அமைச்சராக்குவது பற்றியோ சிந்திக்க அனுமதித்திராது என்பதே என் மதிப்பீடு. 1977ல் மட்டக்களப்பில் போட்டியிட்டு முஸ்லீம்களால் முற்றாக நிராகரிக்கப்பட்ட பதியுத்தின் மஹ்மூட் மரணத்தின் பின்பு மாமனிதராகக்கப்பட்டுப் பின்பு முஸ்லீம்களின் ரட்சகராக்கப்பட்டுள்ளார். அவரை விட அடக்கமாக 1956- 59 காலத்தில் தஹநாயக்க முஸ்லீம்களின் கல்வி வளர்ச்சிக்காக நிறையச் செய்திருந்தார். பதியுத்தின் மஹ்மூட் முஸ்லீம்களுக்கு உதவுகிற பேரில் செய்த சில காரியங்கள் தமிழ்- முஸ்லீம் உறவை மட்டுமன்றிச் சிங்கள- முஸ்லீம் உறவுக்குஞ் செய்த கேட்டைப் பற்றி நூலாசிரியர் கவனிக்கத் தவறிவிட்டார்.

நூலின் தொடக்கத்தில் மேமன் சமூகத்தின் முக்கிய பிரமுகர்கள் மூவரில் ஒருவராகவும் தமிழ் இலக்கியப் பணிக்கு நிதி வழங்குகிற வள்ளலாகவும் ஹாஷிம் உமர் குறிப்பிடப்படுகிறார். ஹாஷிம் உமாரின் சுயவிளம்பர மோகம் பற்றி நூலாசிரியர் அறியாதவராக இருந்திருந்தால் இந்த வள்ளன்மைக்காக இவர் அவரை மெச்சி உயர்த்தியதை விளங்கிக் கொண்டிருக்கலாம்.

முஸ்லீம்கள் தம்மை எவ்வாறு அடையாளப்படுத்த விரும்புகின்றனர். என்பது முஸ்லீம் மக்களது தெரிவு. அதிற்குறுக்கிட வேறு சமூகத்தினர் முயலுவது பாதகமான விளைவுகளையே தரும். எனினும் மத அடையாளமே அடிப்படையானது என்ற நிலைப்பாட்டை ஏற்கிற எவரும் அதன் பின் விளைவுகளைப் பற்றி முறைப்பட இடமில்லை. 1977ல் பாராளுமன்ற இடதுசாரிகளின் வீழ்ச்சியுடன் இலங்கை இடதுசாரி இயக்கங் கண்ட சரிவு வரை முஸ்லீம்களின் மத அடையாளம் எத்தனையோ முஸ்லீம்களின் இடதுசாரி அரசியலுக்கும் மாக்ஸிய அடையாளத்துக்கும் பாதகமானதாக இருக்கவில்லை. இஸ்லாத்தின் வழி நிற்காத ஒருவரை முஸ்லீம் அல்ல என்று சமூகத்திலிருந்தே விலக்கக் கூடிய ஒரு நிலைமை ஏற்படுவது பற்றி முஸ்லீம் தேசியவாதிகள் கவனமாக இருக்க வேண்டும். நு.ஃமான் சரியாகவே சுட்டிக் காட்டுவது போல, முஸ்லீம்களிடையே இஸ்லாமிய அடிப்படைவாதம் பலமான ஆதரவுடையதாக இல்லாவிடினும் அதனுடைய தாக்கம் சமூகத்தளத்தில் குறிப்பிடத்தக்கது. அதற்கு எவ்வாறு முகங்கொடுப்பது என்பது முஸ்லீம் தேசிய இனத்தின் முன்னுள்ள பெரிய சவால்.

இதுவரை சுட்டிக்காட்டியவை உட்பட்ட பல்வேறு குறைபாடுகளின் தோற்றுவாய் தேசியம், இன அடையாளப்படுத்தல் என்பனவற்றின் அரசியலையும் முக்கியமாக அவற்றின் வர்க்க அடிப்படையும் நூலில் எந்த விடத்தும் காண இயலாமையே என்பேன். குறுகிய தமிழ்த் தேசியமும் சிங்களப் பேரினவாதமும் வளர அடிப்படையாயிருந்த வர்க்க நலன்கட்கும் முஸ்லீம் தேசியவாதத்தினதும் வர்க்க நலன்கட்டும் ஒற்றுமைகள் இல்லையா என்ற கேள்வியிலிருந்து தொடங்கினால் முஸ்லீம் மக்களின் இன்றைய தலைமைத்துவத்தின் அவலம் வரை பலதையும் விளக்குவதற்கான வாய்ப்பு நூலாசிரியருக்குக் கிடைத்திருக்கும்.

முஸ்லீம் சமூகம் பற்றியும் முஸ்லீம் அடையாளத்தின் உருவாக்கமும் மாற்றமும் பற்றியும் பயனுள்ள தகவல்கள் பலவற்றைத் தந்துள்ளதன் மூலம் பல தவறான கருத்துக்களைக் களைய உதவக் கூடிய இந்த நூல் தமிழாக்கப்படுவது நல்லது. நூலாசிரியர் இங்கு சுட்டிக்காட்டப்பட்ட குறைகளை ஏற்காவிடினும் அடையாளங்காட்டப்பட்ட இடைவெளிகள் பற்றிய கவனிப்புடன் அத் தமிழ்ப்பதிப்பு அமையும் என்று எதிர்பார்க்கிறேன்.

-சிவா-

www.padippakam.com
நன்றி - நூலகத்திட்டம்



# விஷ விருட்சங்களின் விழுதுகள்

அந்நிய மேலாதிக்கத்துக்கு எதிரான எந்தப் போராட்டத்திலும் பண்பாட்டுத் துறையில் முன்னெ டுக்கப்படும் போரா ட்டங்கள் முக் கியமானவை. முற்போக்குச் சிந்தனையாளர்கள் கலை இலக்கியங்கள் சமூகச்சார்பானதும் சமூக முன்னேற்றத்துக்குமான பங்களிப்பைச் செலுத்த வேண்டு மென வற்புறுத்துவர். சமூக விடுதலை இலக்குடையோர் கலை இலக்கியங்கள் அந்த இலக்கிற்குப் பணி செய்ய வேண்டு மென எதிர்பார் ப்பர். அது போலவே அடக்குமுறை யாளர் தமது நோக்கங்களைக் கலைஇலக்கியங்களுடு முன்னெடுக்கத் தயங்கமாட்டார்கள். அந்த அளவுக்கு, ஆனால் அந்தளவுக்கு மட்டுமே கலைஇலக்கிய ங்கள் பற்றிய பார்வையில் சமூக விடுதலையாளர்கட்கும் அடக்கு முறையாளர்கட் கும் ஒற்றுமை உண்டு. அதற்கப்பால் அணுகுமுறையிலும் உள்ளடக்கத்திலும் எதிர்மாறான தன்மைகளையே நாம் காணலாம்.

சமூக விடுதலையை வேண்டு வோர் கலை இலக்கியங்கள் சமூகச் சார்புடையனவாக இருப்பதை விரும்புவார் மனிதரின் உரிமைகளையும் மனிதரிடையே சமத்துவ அடிப்படையிலான ஒற்றுமையும் நீதியையும் நியாயத்தையும் அவற்றுக்கான எழுச்சிகளையும் பேசுவ தை வற்புறுத்துவர். அந்த இலக்குடைய படைப்பாளிகள் அவற்றை உணர்த்துகிற

**சமூக உணர்வை மறுப்பதும்
சமூக மாற்றத்தை எதிர்ப்பதும்
சமூக விடுதலையை நிராகரிப்பதும்
மக்களின் கூட்டுணர்வை
மழுங்கடிக்கதும்
என் .ஜீ. ஓ. அமைப்புகளின்
நோக்கும் போக்குமாகும்**

விதமாகக் கலை இலக்கியங்களை உருவாக்குவர். ஒடுக்குமுறையாளர்கள் தங்களது நோக்கங்களை அந்த விதமாக வெளிப்படுத்த இயலுமா? இயலாது எனவே சமூக விழிப்புணர்வை வேண்டி நிற்கிற படைப்பு க்களை எதிர்க்க அவர்கள் சமூக உணர்வை மழுங்கடிக்கிற விதமான படைப்புகளை ஊக்குவிப்பர். பொது மக்களின் ரசனையும் சிந்தனையாற்றலையும் வளர்த்தெடுக்கிற படைப்புகளின் இடத்தில் அவற்றைக் கீழ்த்தரமானவையாக்குகிற காரியங்களை அவர்கள் செயற்படுத்துவர். மனிதரைச் சமூகக் கூட்டடுணர்வுடையோராக்குகிற முயற்சிகட்கு மாறாகத் தனி மனிதவாதத்தையும் சுய நலப்போக்கையும் வற்புறுத்துவர்.

ஏகாதிபத்தியமோ பிற்போக்காள ர்களோ கலை இலக்கியம் பண்பாட்டுத் துறைகளிற் தங்களது மக்கள் விரோதச் செயல்களை நேரடியாகச் செய்வதில்லை. அவற்றுக்குப் பலவேறு முகவர்களைப் பாவிப்பார். சமூக உணர்வு போதாத ஆழமான சமூகச் சிந்தனையற்ற அல்லது சுயநலத்திற்கும் தற்பெருமைக்கும் சுய விளம்பரத்திற்கும் ஆட்பட்ட ஆய்வறிவாளர்களும் படைப்பாளிகளும் அறிந்தோ அறியாமலோ அவ்வாறான காரியங்களைச் செய்யுங் கருவிகளாகின்றனர்.

இலங்கையில் சமூக உணர்வுள்ள இலக்கிய எழுச்சியில் மட்டுமன்றிப் பொதுவான இலக்கிய எழு ச்சியிலும் இடதுசாரிகளும் பிற முற்போக்குச் சிந்தனையாளர்க ளும் ஒரு தலைமைப்பங்காற்றினர். அதை மறுப்பதற்கான பழமை வாதப் பிற்போக்குவாத முயற்சிகள் படுதோல்விகண்டன. தேசியவாத இலக்கியத்தின் எழுச்சி கூட முற்போக்கு இலக்கியப் போக்கிலிருந்து எழுந்த சமூகச் சார்பான எழுத்தை உள்ளாங்கியே தன்னை அடையாளப்படுத் துமளவுக்குச் சமூகச் சார்பான கலை இலக்கியங்கள் என்ற கருத் தாக்கம் நிலை கொண்டிருந்தது. தூய கலை இலக்கியம் பற்றிப் பேசி முற்போக்கு இலக்கியத்தை நிராகரித்தவர்களே தூய கலை இலக்கியக் கோட்பாட்டை மறந்து தேசியவாதக் கலை இலக்கியங்களைத் தூக்கிப்பிடித்தமை பற்றியும் இங்கு குறிப்பிடலாம்.

இப்போது எல்லாத் தளங்களிலும் ஏகாதிபத்தியவாதிகள் தங்களது தந்திரோபாயங்களை மாற்றிக் கொண்டுள்ளனர். அவர்களது முகவர்கள் போலி மனிதாபிமான முகத்தைக் காட்டுகின்றனர். சமூகப் பொறுப்புக்களை இந்த முகவர்களிடம் ஒப்படைக்குமாறு அரசாங்கங்கள் நெருக்குவாரங் கட்குட்படுவதை நாம் அறிவோம். இதன் நோக்கங்கள் எப்படியான வையோ அப்படியானவையே கலை இலக்கிய த்துறைகளில் நடைபெறும் ஊடுருவர்களின் நோக்கங்களும்.

இந்தியாவில் நாடகத்துறை முதலாகக் கிராமங்களின் கூத்துக்களை நகரத்துக்குப் புலம்பெயர்கிற காரியங்கள் வரை பல காரியங் களில் என்.ஜி.ஓ ஊடுருவல் நடந்துள்ளது. மக்கள் மத்தியில் மக்களோடு மக்களாக வாழ்ந்த கலை ஞர்களை வணிகக் கலாசாரத்திற் குள் இழுத்து விட்டதோடு என்.ஜி.ஓ. அனுசரணையை நம்பியே செயற்படுகிற ஒரு புதிய பரம்பரையையும் உருவாக்கியதை விட நாடகத்துறைக்கு என என். ஜி. ஓ குறுக்கீட்டால் எந்த விதமான நன் மையும் கிடைக்கவில்லை. அவ்வாறே அரசியலில் ஊக்கமாகச் செயற்பட்ட பலரும் இன்று என். ஜி. ஓ. நிதிக்குப் பின்னால் நாயாய் அலைந்து நாசமாகப் போயுள்ளனர். என்.ஜி.ஓ பணிகள் சமூகமொன்றின் சுயசார்புக்கு மாற்றிடாகவே வளத்தெடுக்கப்படுகிறது.

இலங்கையில் மேஜ், விபவி போன்ற வை சிங்கள, தமிழ் மக்கள் மத்தியிலிருந்து வளர்த்தெடுக்கப் பட வேண்டிய மாற்று அரசியலுக்கும் மக்கள் கலை இயக்கத்திற்கும் மாற்றீடாக என்.ஜி.ஓ வழங்கும் நிதிக்காக இயங்குகிற சில தனி மனிதர்களை முன்னிறுத்த முயன்றன. அவர்கள் எதைச் சாதிக்கா விட்டாலும் பல முன்னாள் இடது சாரிகளின் சீரழிவை முழுமைப்ப டுத்த இந்தமாதிரியான என்.ஜி.ஓக்கள் தமது முழுமையான பங்கை ஆற்றியுள்ளன. சமூக சேவை என்கிற பேரில் என்.ஜி.ஓ. நிதியை ஒரு கையால் அள்ளிக்கொண்டு மறு கையால் நிறுவன வசதிகளைத் தங்களது தனிப்பட்ட வியாபார நோக்கங்கட்காகப் பாவித்து வந்துள்ள என்.ஜி.ஓ. பிரமுகர்கள் பற்றி நாம் அறிவோம்.

என்.ஜி. ஓக்களிடம் பெருந்தொகையான நிதி வாங்கி நாடக விருத்தி செய்வதென்ற பேரில் நடத்தப்பட்ட கேவலமான கூத்துக்களை நாம் அறிவோம். போராற் பாதிக்கப்பட்டவர்களின் அவலங்களை யெல்லாம் நடுத்தெருவுக்குக் கொண்டு வந்து அவர்களது அலறல்களை எல்லாம் நவீன நாடகம் என்று சொல்லி நாடகத்துறையையும் பாதிக்கப்பட்ட மக்களையும் ஒன்றாகவே கேலப்படுத்தியவர்கள் தங்கள் இயங்குதளங்களை இடம் மாற்றி வருகின்றனர்.


இன்று விழுதுகள் என்றபேருடன் செயற்படுகிற நிறுவனம் தனது பொறுப்பில் பலவேறு பத்திரிகைகளை நடத்தி வருகிறது. சம்பந்தப்பட்ட துறைகளில் அடிப்படையான அறிவோ அனுபவமோ இல்லாத தனிமனிதர்கள் இவற்றில் பெரும்பாலனவற்றின் பொறுப்பில் உள்ளனர். இந்த நிறுவனத்தின் மூலம் தாய்மொழிக்கல்விக்கு விரோதமான கருத்துக்களும் மாக்ஸிய மறுப்பும் பின்நவீனத்துவம் என்ற பேரில் குழப்பமான சிந்தனைகளும் திட்டமிட்ட முறையில் பரப்பப்பட்டு வருகின்றன. இவர்களுடைய வேலைகட்கான நிதியில் கணிசமான பகுதி ஏகாதிபத்திய நாடுகளின் குறிப்பாக அமெரிக்காவின் அரசாங் கக் கட்டுப்பாட்டில் உள்ள சர்வதேச என்.ஜி.ஓக் களிடம் இருந்து தான் வருகிறது. இந்த நிதி விவகாரங்கள் எல்லாம் பொது மக்களின் பார்வைக்கு வருவதில்லை.

இலங்கையில் அண்மைய சூழலின் பத்திரிகைத் துறையில் நிலைத்து நிற்பதற்கு வேண்டிய நிதி வசதிய ற்ற பத்திரிகைகளும் மேற்குறிப் பிட்ட நிறுவனத்தின் மூலம் நிதி பெற்று இயங்கும் அவலத்திற்கு உள்ளாகிவிட்டது பரிதாபமானது. விழுதுகள் போன்ற நிறுவனங்களில் உயர் பதவிகளில் உள்ள விதேச அமைப்புகளின் முகவர்கள் தங்களுடைய அந்நிய எசமானர்களுக்கு விசுவாசமாக இல்லாவிடின் அவர்களுடைய வியாபாரமே படுத்துவிடும். எனவே அவர்களிடம் கைநீட்டுகிற கட்டாயத்திற்குட்பட்ட பத்திரிகைகள் ஏகாதிபத்திய எதிர்ப்பையோ வெகுசன அரசியலையும் போராட்டத்தையுமோ முதன்மைப்படுத்துகிற விதமாக எதையுமே செய்ய இயலாது.

நேர்மையான இடதுசாரிகளையும் மாக்ஸியத்தையும் இழிவுபடுத் துவதற்குக் கொஞ்சமுங் கூசாத இந்த என்.ஜி.ஓக் கூலிப்படைகள் நம் கண் முன்னே நடக்கிற பண்பாட்டுச் சீரழிவுகள் பற்றி எதுவும் பேச முற்படுவதில்லை. அவர்கள் எதைச் சொல்ல அனும திக்கப்படுவார்களோ அதற்கும் மேலாகப் பேசிப் பிழைப்பைக் கெடுத்துக் கொள்வார்களா?

அது தான் பிழைப்பு என்றால் அதுவும் ஒரு பிழைப்பா என்று தான் கேட்கத் தோன்றுகிறது.

## மறக்காத மனமுகமாய்....



**கருத்து முரண்பாடுகளுக்கு அப்பால்
மனிதம் நாடும் மனிதர்களோடு
அன்பாய் நட்பாய் தோழமையாய்
மறக்காத மனமுகமாய் வாழ்ந்து
வயது வாரா காலத்தே
சாவு கண்ட பாரீஸ்
கலைச்செல்வனின்
இரண்டாம் ஆண்டின் நினைவாக!**

ஒரு நாள் நீ இறந்து விடுவாய்
என்ற நிச்சயத்தோடு இருப்பதைவிட
நீ இறந்து விட்டாய் என்று நம்புவது
எவ்வளவோ எளிதானது.

கடற்கரையில் ஆபத்தை
எதிர்கொள்வதை விட
ஒரு பெரிய மீனின்
வயிற்றுக்குள் கிடப்பது
எவ்வளவோ பாதுகாப்பானது.

குளிரில் விறைக்க வைக்கும்
மாடிப்படிகளில் இறங்கி வந்து
நிரந்தரமான பீதியின் விதைகளை
நாள் முழுக்க விதைத்துச் செல்லும்
மரணத்தின் காலடியோசைகளை
கேட்டுக்கொண்டிருப்பதை விட
மரணப் படுக்கையில் கிடப்பது
அப்படியொன்றும் பயங்கரமானதல்ல

வாடியுதிரக் காத்திருந்து
தேக்க நிலையில் இருப்பதைவிட
ஒவ்வொரு காலையிலும்
இறந்து போகவும்
புயல் வேகத்தில் இப்பூமியை
விட்டுச் செல்லவும்
உன்னை ஆயத்தம் செய்துகொள்
மகனே
காலங்கள் கழியும்
காலங்கள் கழியும்
எதுவுமே
எப்போதும் போல் இருப்பதில்லை.

**Kemalal - Ghizouli**
(சூடானிய - கவிஞர்)

பெண்களுக்கு 33 %

12ம் பக்க தொடர்ச்சி

குதூகலம் கொண்டாடப்படுகிறது. நிலவுடைமை முதலாளித்துவ சுரண்டும் சக்திகளாலும் சாதி மதம் பண்பாட்டின் பெயராலும் பொலீஸ் ராணுவ பலாத்காரம் மற்றும் வன்புணர்ச்சிச் செயல்களாலும் இந்தியப் பெண்கள் பல நிலைகளிலும் ஒடுக்குமுறைகளுக்கு ஆளாக்கப்பட்டு வருகின்றனர். இவற்றை எல்லாம் இறப்பர் முத்திரைப் பதவி பெற்ற பிரதீபா பட்டீல் ஒரு பெண்ணால் எதைச் சாதிக்க முடியும். பொய்களும் புழுகுகளும் கட்டுக்கதைகளும் நிசங்களாகிவிட முடியாது.

11ம் பக்கத் தொடர்ச்சி

மாவட்டத்திலும் 25பேர் கொண்ட {சகோதரத்துவ மேம்பாட்டு கமிட்டி{ களை பகுஜன் சமாஜ் கட்சி நிறுவியுள்ளது. இக்கமிட்டிகளின் தலைவர் துணைத் தலைவர் பொறுப்புகளில் பார்ப்பனர்கள் இருக்க தாழ்த் தப்பட்டோர் செயலாளர்களாக நியமிக்கப்பட்டுள்ளனர். எந்த வொரு கட்சியும் பார்ப்பனர்களுக்கு இப்படி அரசியல் மேடை யை அமைத்துக் கொடுத்ததில்லை என்று பார்ப்பனர்களே புகழும் அளவுக்கு மாயாவதியின் பார்ப்பன சேவை நாலு கால் பாய்ச்சலில் முன்னேறியது.

உண்மைதான் சாதிவெறியர்களுடன் கூட்டணி கட்டிக் கொண்டு {சாதிக்காக இனி ரத்தம் சிந்த நாங்கள் தயாராக இல்லை{ என்று முழங்கிய திருமாவளவனுக்கு }தமிழ்ப் பாதுகாப்பு இயக்க த்தின் தலைமைப் பதவி கிடைத்தது. பார்ப்பன– ஆதிக்க சாதிகளுடன் கூட்டணி கட்டிக் கொண்டு சர்வஜன கட்சித் தலைவியாகிவிட்ட மாயாவதிக்கு முதல்வர் பதவி கிடைத்திருக்கிறது. இதுதான் வலிமையான தலித் தலைமையின் மகிமை! தலித்திய வீரர்களே பதில் கூறுங்கள்.

www.padippakam.com நன்றி - நூலகத்திட்டம்

ஒகஸ்ட் 2007

# புதிய பூமி

இணையத் தளம் : Website: www.ndpsl.org




## பாகிஸ்தானில் ராணுவ சர்வாதிகாரத்தை எதிர்த்த மக்கள் போராட்டத்தின் பல்வேறு கட்டங்கள்









ஈராக்கிலிருந்து அமெரிக்க ராணுவத்தை வாபஸ் பெறக் கோரிய அமெரிக்க மக்களின் போராட்டத்தில் உயிரிழந்த ராணுவ வீரர்களை நினைவுபடுத்தி அமெரிக்க கொடியின் கீழ் பரப்பி வைக்கப்படுள்ள ராணுவப் பாதணிகள்.



வெளியிடுபவர் : இ.தம்பையா, இல 47, 3வது மாடி, கொழும்பு சென்றல் சுப்பர் மார்க்கட், கொழும்பு 11. அச்சுப்பதிப்பு : கொம் பிரிண்ட் சிஸ்ரம், HL. 1/2 டயஸ் பிளேஸ், கொழும்பு 12.